நூலகத்துறைப் படிப்பகம்
சரஸ்வதி மகால், யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபத்துநான்கு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 02 செவ்வாய்க்கிழமை (16.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 110

உகந்த தீர்வை அரசு தராவிடில்.....

மாற்றுத் தீர்வைப் பெறுவதற்கு சர்வதேச உதவியை நாடுவோம்

வவுனியாக் கூட்டத்தில் சம்பந்தன் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 16

இனப்பிரச்சினைத்தீர்வு குறித்து நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற பின்னர் எம்முடன் (தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன்) பேசவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அவருடன் பேசுவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை வழங்குவதற்கு அரசு ஒத்துழைக்காவிடில், மாற்றுவழி மூலம் உகந்த தீர்வைப் பெற்றுத்தருமாறு சர்வதேசத்திடம் கேட்போம். அதற்கு எமக்கு உரிமை உண்டு.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், தமிழரசுக்கட்சியின் திருகோணமலைத் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அருகே பூமியதிர்ச்சி!

கொழும்பு, மார்ச் 16

இலங்கைக்கு நெருக்கமாக நேற்று அதிகாலை 2.33 மணியளவில் 6.0 ரிச்டர் அளவில் பூமி அதிர்வு உணரப்பட்டது என்று மேற்கு கரையோர மற்றும் அலாஸ்காவிற்கான ஆழிப்பேரலை எச்சரிக்கை நிலையம் அறிவித்தது.

கொழும்பிலிருந்து தெற்கு மற்றும் தென்கிழக்குத் திசையில் சுமார் 716 மைல் (ஆயிரத்து 151 மீற்றர்) தொலைவில் 12.4 மைல் (சுமார் இருபது கிலோ மீற்றர்) ஆழத்தில் இந்த அதிர்வு மையம் கொண்டிருந்தது எனக் கூறப்பட்டது.(24ஆம் பக்கம் பார்க்க)

அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸில் போராட்டம்

இலங்கையின் ஜனநாயகத்துக்கான அமைப்பு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் இடம்பெற்றுவரும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸில் வசித்துவரும் இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் மூன்றாவது முறையாகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, எந்த விதக் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படாது கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பது பிரதானமாக வலியுறுத்தப்பட்டது.(24ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரியில் வர்த்தகர் ஒருவரின் மகன் கடத்தப்பட்டார்; நேற்று மாலை வரை விடுவிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 16

சாவகச்சேரி நகரப்பகுதி வர்த்தகர் ஒருவரின் பதினேழு வயது மகன் ஞாயிற்றுக் கிழமை இரவு இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார். இதனால் சாவகச்சேரி பகுதி மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மீசாலையில் உள்ள குறிப்பிட்ட வர்த்தகரின் வீட்டுக்கு வெளியே நின்று சிலர் அவரது மகனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டுக் கூட்டிச்சென்றுள்ளதாகவும், கூட்டிச் செல்லப்பட்ட பின்னர் தொலைபேசியில் மூன்று கோடி ரூபா வழங்கினால் இளைஞனை விடுவோமென அச்சுறுத்தியுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இச் சம்பவத்தில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக கடத்தப்பட்ட இளைஞனின் மிக நெருங்கிய நண்

(24ஆம் பக்கம் பார்க்க)

மரபணு மூலமாக அடுத்துக்குட்டி இலங்கையில் உருவாக்கம்!

பேராதனைப் பல்கலைக்கழகம் சாதனை

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் முதற்றடவையாக மரபணு முறையில் உருவாக்கப்பட்ட ஆட்டுக் குட்டி ஒன்று பிரசவிக்கப்பட்டிருக்கின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவப்பீடம்(24ஆம் பக்கம் பார்க்க)

இராணுவச் சட்டத்தின் கீழ் பொன்சேகாவை கைது செய்து, விசாரிப்பது முற்றிலும் தவறு!

முன்னாள் பிரதம நீதியரசர் கண்டனம்

கொழும்பு, மார்ச் 16

இராணுவத்தின் ஆணையிடப்பட்ட அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் ஆகியோருக்கே இராணுவச் சட்டம் பொருந்தும் என்றும் சரத் பொன்சேகா போன்ற இராணுவத் தளபதிகளுக்கு இச்சட்டம் அறவே பொருந்தாது என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நேற்றுக் கூறினார்.

இவ்வாறானதொரு நிலையில் சரத் பொன்சேகா இராணுவச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருப்பதன் மூலம் இலங்கை(24ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர்

உயர்வே

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அளவையியல் மாதிரி வினாத்தாள்

நாளை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான சேதன இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியக் கல்வியற் கல்லூரிக்கான

ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் கற்கைநெறிகள்; நேர்முக பரீட்சைக்குத் தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தேசிய கல்வியற் கல்லூரிக்கான 2010 கல்வியாண்டுக்கு ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் வெளியாகியுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்தார்.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:

ஆங்கில பாடநெறி
யாழ்ப்பாணம்

ரி.இரட்ணகோபால் - நல்லூர் ,கே.செல்லத்தம்பி -சேர்பொன் இராமநாதன்வீதி, எஸ்.நடராஜா -முளாய் மத்தி, டி.சுவர்னிகா-முளாய், ஜெ.நிரசா- கோப்பாய் தெற்கு, எஸ்.சுபாங்கி- இணுவில் தெற்கு, எஸ்.சங்கீதா-கொடிகாமம், ரி.சுப்பிரமணியம்-அரியாலை, பி.ஜானகி-மொரட்டுவ, ரி.தாரணி-மானிப்பாய், எஸ்.அபிராமி-சுண்டுக்குளி, கே.விநாயகமூர்த்தி-சங்கானை கிழக்கு, வி.துஜிவா-தலையாளி, எஸ்.அனிகுயின்தினா-நவாலி தெற்கு, எஸ்.துசாந்தி-உரும்பிராய் தெற்கு, எல்.ஸ்ரனிஸ் லாஸ்-ராஜேந்திரா வீதி யாழ், ஏ.ஜீவதாசன்- அரியாலை, கே.ஜனகன்-காரைநகர் வி.புவி-ஊரெழு கிழக்கு, சி.மேரிபிரான்சிஸ்கா-கூழாவடி கிழக்கு, ரி.கிறிஸ்ரோ-நவாலி தெற்கு, எஸ்.ஆர்த்திகா-சுன்னாகம் மேற்கு, எஸ்.தனேசன்- மூளாய், ஆர்.சாம்பசிவம்-நல்லூர், ஜே.தயாநிதிவேல்- வல்வெட்டித்துறை, வி.கோமகள்-நவாலி தெற்கு, ஆர்.மதியொளி- பருத்தித்தித்துறை, ஜே.சங்கீதா - கல்வியங்காடு, எ.மேரிகலிஸ்ரா- சுண்டுக்குளி, ஜே.செல்லத்துரை-உடுவில், எஸ்.சிந்து-கோண்டாவில் மேற்கு, சி.கே.கிறிஸ்ரின் பானுமதி-இளவாலை, எஸ்.டிலக்சா-நல்லூர், ரி.சற்குணசிங்கம்-மைலணி, எஸ்.அஜித்தா- மல்லாகம், கே.பரமானந்தம்-உரும்பிராய் மேற்கு, எம்.சோமஸ்கந்தராஜா- மட்டுவில்தெற்கு, ஜீ.பசுபதி-அளவெட்டி கிழக்கு, எம்.மயூரி- அச்சுவேலி தெற்கு, ஜே.சி.ஜேந்திரா-கொழும்பு ,பி.சிந்துஜா- கந்தர்மடம், எஸ்.சோமகாந்தி-மீசாலை மேற்கு, ஜி.மிதுல்டா-வட்டு தென்மேற்கு, வி.சுகிர்தா-ஆனைக்கோட்டை, எஸ்.மகிந்தன்-வாரியப்புலம், எ.சேகர்- நவாலிவடக்கு, பி.சுமிதா-பண்ணாகம், எம்.சொரூபினி-அரியாலைமேற்கு, வி.தட்சா- கல்வியன்காடு, எ.ராஜதகிரிசன்-மைலணி.

தகவல் தொழில்நுட்பம்
யாழ்ப்பாணம்

டபிள்யு.ஜி.டபிள்யு.ஞானதயாளன்-பண்டத்தரிப்பு, ஜி.குகானந்த - சண்டிலிப்பாய், ரி.ரட்ணகோபால் - நல்லூர், கே.சேதுகாவலர்-யாழ், எ.சோமேஸ்வரன்- கோப்பாய், எஸ். சன்[illegible]முகலிங்கம்-மீசாலை வடக்கு, ஐ.அ[illegible]ஜா-சங்கானை, என்.பஞ்சலிங்கம்-ஊ[illegible]ரெழு மேற்கு, எல்.ஸ்ரனிஸ் லாஸ்-யா[illegible]ழ், ஆர்.நற்குணம்-இன்பருட்டி, எஸ்.ற[illegible]சன்-கொக்குவில் கிழக்கு, பி.சிந்துஜா - கந்தர்மடம் ,எஸ்.பபிலா- சித்தங்கே[illegible]ணி, என்.சுப்பிரமணியம்-சுன்னாகம் மேற்கு, எஸ்.வைதேகி-சீனியர்லேன் யாழ்,பி.பரமநாதன்-நாவற்காடு, எஸ்.சிவசக்தி-நீர்வேலி வடக்கு, எஸ்.தெய்வேந்திரம்- கெருடாவில் தெற்கு,ரி.கோபிநாத்-நவலர் வீதி யாழ், கே.சசிரேகா- நுணாவில் கிழக்கு, எ.யுசானி-வட்டு தெற்கு, ஜி.பாலகுமரே சநாதன்- ஆனைக்கோட்டை, எஸ். ஆர்த்திகா - பருத்தி கலட்டி, வி.கங்கா-வண்.வடமேற்கு, எல்.கபாலினி- சாவகச்சேரி, எஸ்.செந்தூரன்-வட்டுக்கோட்டை, ஆர்.லக்சியா-மானிப்பாய், வி.மதுசன்- தாவடி கிழக்கு, ஜே.பாலதேவன்-கே.கே.எஸ். வீதி. யாழ்.எ.சர்மிலன்-சங்கானை, ரி.சுகந்தன்- நாவலர்வீதி யாழ். ஜி.லதிகரன்-மானிப்பாய், எம்.சொருபினி- அரியாலைமேற்கு, வி.மதிவதனி-நவாலி கிழக்கு, பி.துஜநிதா - இராஜசிங்கம் வீதி யாழ், ரி.பிரதர்சன்- புலோலி மத்தி, எம். ரவிசாந்- அரியாலைமேற்கு, கே.தவரத்தினம்- பெரிய அரசடி, ஆர்.சுகந்தினி-சாவகச்சேரி, எஸ்.பாலச்சந்திரன்-ஊர்காவற்றுறை, ஜே.கவிதரா- அளவெட்டி மேற்கு, ஆர்.ஜே. ஜெனிபர்-6ம்குறுக்குத் தெரு யாழ், ரி.சரணியா-கோப்பாய் வடக்கு, வி.சதுர்மதி-நவக்கிரி, பி.சர்வகுணசீலன்- கொண்டாவில், என்.நித்தியா-விக்காவில், பி.எஸ்.பிரிதர்சினி-மூளாய், பி.தீபா-அளவெட்டி மேற்கு, ரி.சுரேகா-நீர்வேலி தெற்கு, ரி.ராஜலிங்கம்-சுதுமலை தெற்கு, பி.ஜானகி- மொறட்டுவ, என்.சகிலா-இமையாணன் வடக்கு, பி.தர்சிதா-சீனியர் ஒழுங்கை யாழ், எம்.பிரசன்னா-கல்வயல், பி.பி.கெனமன்-பாசையூர்.

முல்லைத்தீவு

பி.ஏச்.ஏ.ஐ.சமரதுங்க-பள்ளிப்பட்ட, ஆர்.உதயராஜசிங்கம்- விசுவமடு, என்.சுஜீபன் - வட்டுவாகல்,எஸ்.விஜிதா-அளம்பில், எம்.யோகேஸ்வரி- மல்லாவி.

மன்னார்

எ.ஆர்.றிஸ்தா-புத்தளம், ஜி.எ.பினில்- எருக்கலம்பிட்டி, எம்.டி.பிரகாசம்- நானாட்டான், ரி.நிரோஜினி- மன்னார்,எம்.என். நௌசீதா-புத்தளம்.

கிளிநொச்சி

ரி.கதிர்காமநாதன்-மீசாலை மேற்கு, எஸ்.மேனகா-களபூமி, எம். மயூரி-ஏழாலை மேற்கு, ஆர்.திலீப்குமார்-திருநகர் வடக்கு.

வேலையாள் தேவை

கடைச்சல் வேலையில் (லேத்) அனுபவமுள்ள வேலையாள் தேவை. 'வாட்டர்பம்' உதிரிப்பாக கடைச்சல் வேலையில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

செல்வா ஹாட்வெயார்ஸ், 120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

ஐயன் வயிரமுத்து

(ஓய்வூதியர், யாழ்.மாநகரசபை)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயன் வைரமுத்து (ஓய்வூதியர், யாழ். மாநகர சபை) 12.03.2010 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயன்-சின்னன் தம்பதிகளின் அன்பு மகனும், தவமணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பழனி, நல்லையா, இராசையா மற்றும் வைத்திலிங்கம், தவமணிதேவி (வவா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணசிங்கம், இராசகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோகநாயகி (சாந்தி), விஜயகுமார் (கனடா), ஜீவநாயகி (ரூபா-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரன் (இ.மி.ச), மதனராஜா (கனடா), அருணா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிந்தன் (கனடா), மகிமா, சயிந்தன், தமிழினி, கனடா வாழ் நோயல், அஜன்மார்க், அருண், வினோதினி சதீஸ் (நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் அன்புப் பேரனும், கனடா வாழ் ஜோசுவா, ஜெய்சன், ஜானுசா, யனோஜ் (யாழ்.பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2010) செவ்வாய்க்கிழமை சென்.செபஸ்தியார் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2மணிக்கு தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(95949)

Barnabas இன் அதிரடி மலிவு விற்பனை

40 % Special Offer 40 % கழிவுடன்....
21" Wega sony - ~~24000/=~~ - 18990 /=
21" Sony G21 (P1,P2,Q1,Q2) - ~~18000/=~~ - 14990 /=
IPL போட்டியைக் கண்டு களிக்க வாங்குங்கள் ஒரு TVமை
Life Time Free Service

5 வருட உத்தரவாதம்

பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
கொ.பே: 0217900728

மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச்சந்தி, [illegible]
கொ.பே: 021 7901574, 0777448[illegible]68

வேலணை மாணவி முன்வைப்புத் திறனில் தேசிய போட்டிக்கு தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

'இலங்கையைப் பாதுகாப்போம், பூமியை பாதுகாப்போம்' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற முன்வைப்புத்திறன் (Presentation) போட்டியில் வேலணை மத்திய கல்லூரி மாணவி வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தரம் 10 இல் கல்வி கற்கும் செல்வி மனோகரலிங்கம் லதாயினி என்பவரே இவ்வாறு வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஒ-10)

மரண அறிவித்தல்

திருமதி குமாரு மீனாட்சி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், முடக்காடு ஒழுங்கை, அல்வாய் தெற்கு, அல்வாயை (நெல்லியடி கிழக்கு) வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமாரு மீனாட்சி 12.03.2010 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.03.2010) செவ்வாய்க் கிழமை நடைபெற்று, தகனக் கிரியைக்காக அவரது பூதவுடல் முற்பகல் 10மணியளவில் சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.ஸ்ரீநிவாசன்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(92191)

மரண அறிவித்தல்

சவரிமுத்து சின்னத்துரை தேவசகாயம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல 28, றக்கா ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) சவரிமுத்து சின்னத்துரை தேவசகாயம் 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சவரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வெலிச்சோர் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லில்லி கிறேசின் பாசமிகு கணவரும், செல்வரட்ணம், மங்களா, லூட்ஸ், பொலின், நவரட்ணம், அழகரட்ணம், அஞ்சலா, ஜோர்ஜ், எட்வின், சியாமளா, ஜஸ்மின்சாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், றோசலின், காலஞ்சென்ற தேவராஜன் மற்றும் அருள்நாயகம், ஜெயேந்திரா, கிலீடா, கிறிஸ்ரீன், விமலநாயகம், ஆனந்தி, நளாயினி, ஜோர்ஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலானி, நோயல், கவிதா, டீன், சசி, மறியா, மனுவலா, தியறி, எறிக், ஜெறோலின், ஜொனி, ஜெனோசா, டெவினா, லோறன்சா, தொம்மா, கிளாறா, மேனா, மொறின், ஜோண், டிலுக், டாமியா, டினோஜ், அஸ்வினி, சிந்து, நோயலின், ஷெலின், நற்றலி, மௌஸி ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெரின், டியான், டனி, ஒஸ்ரார், சின்னமுத்து, விக்ரர்பெரியமுத்து, சன்ரல், சஞ்சஸ், றாயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை (17.03.2010) புதன்கிழமை பிற்பகல் 3மணியளவில் இரங்கல் வழிபாட்டுடன் ஆரம்பமாகி 3.30மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

28, றக்கா ஒழுங்கை,
கண்டுக்குளி,
தொலைபேசி: 0212223405

தகவல்:
குடும்பத்தினர்.

(95947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

பேரினவாதக் கருத்தியலில் தமிழருக்கு நீதி கிடைக்காது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்துக்காக அதன் மீது சீற்றம் கொண்டு பாய்ந்திருக்கின்றார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அரசுக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகருமான விமல் வீரவன்ஸ.

தமிழர்களின் தனித்துவ உரிமைகளை வலியுறுத்தி நிற்கும் வகையில் - அதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டமையைத் தாங்கிக்கொள்ள முடியாது ஒரேயடியாகக் காய்ந்திருக்கின்றார் விமல் வீரவன்ஸ.

தமிழர் தரப்பில் உரிமைகளுக்கான போராட்டத்தில் ஆயுத ரீதியாகக் களத்தில் நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தாங்கள், தங்களது அரசுப் படைகள் என்ற பெரும் கட்டமைப்பு மூலம் இராணுவ ரீதியாக வெற்றிகொண்டமையை அடுத்து, இனி இந்த இலங்கைத் தீவில் உள்ள அனைத்துத் தமிழர்களும் - சிறுபான்மையினரும் - இந்தத் தீவின் ஆட்சி அதிகாரத்தைத் தமது கைகளில் தக்கவைத்திருக்கும் பௌத்த - சிங்களப் பெரும்பான்மையினரின் ஏக அடிமைகள் என்ற கருத்தியல் போக்கு - சிந்தனை நிலைப்பாடு - தெற்கில் வலுத்துவிட்டது என்பது வாஸ்தவம்தான். அந்த எண்ண ஓட்டத்தின் அடிப்படையில்தான் - தடிப்பில்தான் - மமதையில்தான் - மேற்படி கருத்தை உதிர்த்திருக்கின்றார் விமல் விரவன்ஸ.

'பிரபா' சிந்தனை பற்றி இன்று மிதப்போடு அதிகம் சீறும் விமல் வீரவன்ஸ, பிரபாகரன் என்ற பாத்திரத்தை இலங்கைச் சரித்திரத்தில் உருவாக்கி, மேலே - முன்னிணிக்கு - கொண்டுவந்து தள்ளியதே, தமிழினம் மீதான சிங்கள, பௌத்த மேலாதிக்க அடக்குமுறைதான் என்பதை மறந்துவிட்டார் போலும்.

நியாயம், நீதி கேட்டு - உரிமை கோரி - தங்களின் வேணவாவை நிறைவேற்ற வேண்டி - ஈழத் தமிழர்கள் அஹிம்சை வழியிலும், காந்தீய நெறியிலும், ஜனநாயக முறையிலும் போராட்டங்கள் நடத்திய போது, அவற்றைத் தமது இராணுவ பலாத்கார அடக்குமுறைகள் மூலமும், தமது பெரும்பான்மைப் பலம் என்ற வலுவைப் பயன்படுத்தி சட்டங்கள் வாயிலாகவும் ஒடுக்கியதே கொழும்பு அரசுதான்.

தமிழர்களின் ஜனநாயக ரீதியிலான அந்தப் போராட்டத்தை, 1983 இனக்கலவரங்களை அடுத்து சிங்கள அரசுதான் கொண்டுவந்து நிறைவேற்றிய அரசமைப்புக்கான ஆறாவது திருத்தம் மூலம், சிங்களம் செயலிழக்க வைத்தது. அதன் பயனாகத்தான் அந்த ஜனநாயக வழிப் போராட்டம் முழு அளவில் ஆயுத வழிக்குத் திரும்பியது.

அதன் பெறுபேறாக இலங்கைத் தீவில் சுமார் மூன்று தசாப்தகாலம் பெரும் வன்முறைப் புயல் வீசியது; கொடூரப் போர் நீடித்தது; இரத்த ஆறு ஓடியது; போரழிவும் பேரழிவுமாகப் பெரும் யுத்தப் பூகம்பமே இலங்கைத் தீவை நடுநடுங்க வைத்தது. பல தலைமுறைச் சந்ததிகள் ஒன்றாக அழிந்தன.

இப்போதுதான் அந்த மீளமுடியாத அதிர்ச்சியிலிருந்து இலங்கைத் தீவு மெல்ல மெல்ல பிரக்ஞை பெற்று வருகின்றது.

1983இல் தமிழர்களின் ஜனநாயக வழிப் போராட்டங்களுக்கு அரசமைப்பின் ஆறாவது திருத்தம் மூலம் முற்றாகத் தடை விதித்து, முட்டுக்கட்டை போட்டு, அதன் விளைவாகக் கொடூர ஆயுத வழிப் போராட்டத்துக்கு வழிசமைத்த சிங்களம், இப்போது தமிழர்கள் தமது நியாயமான கோரிக்கைகளை - உரிமைகளை - முன்வைத்து ஜனநாயக வழியில் முன்னெடுக்கும் போராட்டத்தைத் தடுக்கும் வகையில், புதிய சட்டங்களைக் கொண்டுவரும் என்று கோடிகாட்டுகின்றார் - சூளுரைக்கின்றார் - விமல் வீரவன்ஸ.

1983 இல் இதேமாதிரி முரட்டுத்தனமாக - முட்டாள்தனமாக - செயற்பட்டதின் விளைவை மூன்று தசாப்த காலமாகப் பெரும் கொடூர யுத்தமாகச் சந்தித்த சிங்களம், அதை மறந்துவிட்டு மீண்டும் அத்தகைய ஜனநாயகப் போராட்டங்களுக்குத் தடை விதிக்கும் சட்டங்களைத் திரும்பவும் - புதிதாகவும் - கொண்டுவர உத்தேசிக்கின்றது என்பதையே விமல் விரவன்ஸவின் தற்போதைய கருத்து எடுத்துக்காட்டுகின்றது.

தமிழர்கள், தங்கள் தரப்பு நியாயங்களை - தங்களின் உரிமைகளை - தங்களின் அபிலாஷைகளை - தங்களின் எதிர்பார்ப்புகளை - வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கூட சட்டம் போட்டுத் தடுக்கும் இந்த அடக்குமுறை எத்தனம் திரும்பவும் மற்றொரு விபரீதத்துக்கே வழி வகுக்கப் போகின்றது.

1983இல் தாம் இழைத்த தவறிலிருந்து - பட்டறிவிலிருந்து - சரியான பாடத்தைத் தென்னிலங்கை படிக்கவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

தமிழர் தரப்பின் நியாயமான எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்துகின்ற குரல்களைக் கூட செவிமடுக்க மறுக்கும் விதத்தில் விமல் வீரவன்ஸக்கள் மாத்திரமல்லாமல், தங்களை இடதுசாரிகளாக வெளிப்பகட்டுக்கு இதுவரை காட்டிவரும் திஸ்ஸ விதாரணக்கள் போன்றோரும் கூட நடந்து கொள்கின்றமை, முழு தென்னிலங்கைச் சிங்களத்தின் மனவமைப்பின் கருத்தியலை இந்த அடக்குமுறைச் சிந்தனையே முற்றாக ஆட்கொண்டு நிற்கின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இத்தகைய மேலாதிக்க - மேலாண்மை - போக்குடைய பேரினவாதச் சிந்தனைகொண்ட திமிர்த் தரப்பிடமிருந்து தமிழர்களுக்கு நியாயம் கிட்டும் என எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

வடக்கில் 12 வலயங்களில் உள்ள 484 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு 48.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

பருத்தித்துறை, மார்ச் 16

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் வட மாகாணத்தில் 12 கல்வி வலயங்களில் உள்ள 484 பாடசாலைகளை அபி விருத்தி செய்வதற்காக 48.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இடைநிலைக் கல்வி நவீன மயப் படுத்தல் செயற்றிட்டம் இரண்டின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கான நிதியினை வழங்கி உள்ளது. 12 கல்வி வலயங்களில் உள்ள தரம் 1 ஏ பி, தரம் 1 சி, தரம் 2 பாடசலைகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ். கல்வி வலயத்தின் 64 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 6.4 மில்லியன் ரூபாவும், வலிகாமம் கல்வி வலயத்தில் 66 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 6.6 மில்லியன் ரூபாவும், தென்மராட்சி கல்வி வலயத்தில் 30 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 3.0 மில்லியன் ரூபாவும், வடமராட்சி கல்வி வலயத்தில் 48 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வற்காக 4.8 மில்லியன் ரூபாவும, தீவக கல்வி வலயத்தில் 32 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 3.2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் கல்வி வலயத்தில் 42 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 4.2 மில்லியன் ரூபாவும், மடு கல்வி வலயத்தில் 22 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2.2 மில்லயன் ரூபாவும், கிளிநொச்சி கல்வி வலயத்தில் 57 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 5.7 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 31 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 3.1 மில்லியன் ரூபாவும, துணுக்காய் கல்வி வலயத்தின் 23 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2.3 மில்லியன் ரூபாவும், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 4.4 மில்லியன் ரூபாவும், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 25 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் பாடசாலைகள் தளபாடம், உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் திருத்துதல், உள்ளக மின்சாரத் தொகுதியினை அமைத்தல், திருத்துதல் மற்றும் பராமரித்தல், உள்ளக குடிதண்ணீர் தொகுதியினை அமைத்தல், திருத்துதல் மற்றும் பராமரித்தல், சுத்திகரிப்பு வசதிகளை அமைத்தல், திருத்துதல் மற்றும் பராமரித்தல், பாடசாலைகளின் கட்டடங்களை திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய வேலைகளை செய்யமுடியும்.

இந்நிதியின் மூலம் தொலைபேசி, மின்சாரம், நீர், சம்பளம், பாதுகாப்பு சேவை, ஞாபகார்த்த விருது, நினைவுப்படிகம், கௌர விருது ஆகியவற்றுக்கான கொடுப்பனவு , புதிய கட்டடம் நிர்மாணிப்பு மற்றும் வாகனக் கொள்வனவு, பழுது பார்த்தல் ஆகியவற்றினை செய்ய முடியாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (50-190)

குடாநாட்டில் படைப்பிரிவுகளில் பணிபுரிந்த ஒய்வூதியர்களுக்கு உதவுவதற்கு முன்னேற்பாடு

தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 16

குடாநாட்டில் முன்னர் படைப்பிரிவுக ளில் கடமையாற்றிய ஒய்வுதியர்களை ஒன்று கூட்டி அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து,ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காக கலந்துரையாடல் ஒன்ற்ற 52ஆவது படைப்பிரிவின் தளபதி ஏற்பாடு செய்துள்ளார். யாழ். பாதுகாப்புப்படைகளின் தலைமையகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு, யாழ். பாதுகாப்பு படைகளின்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் 52ஆவது படையணிக்குட்பட்ட பிரதேசத்தில் பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளை 52ஆவது படையணித் தளபதி மேற்கொண்டுள்ளார். பொறப்தி,கற்கோவளம் ஆகிய பகுதிகளில் தளபதி மேற்கொண்ட கலந்துரையாடலின் போது பாதுகாப்புப் பிரிவுகளில் கடமையாற்றி இளைப்பாறிய தமிழர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. 1980ஆம் ஆண்டளவில் இளைப்பாறிய தங்களுக்கு நலன்புரி திட்டங்கள் ஏதும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என இளைப்பாறியவர்கள் தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாகக் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் உள்ள படைப் பிரிவுகளில் கடமையாற்றி ஒய்வு பெற்றவர்களின் நலன்களைப் பேண எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய கலந்துரையாடல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது.

இதேவேளை 52 ஆவது படையணியின் 524ஆவது படையின் 3ஆவது கெமுனு படைப்பிரிவு நிலை கொண்டுள்ள வல்வெட்டித்துறை உடுப்பிட்டியில் அமைந்துள்ள நிமலேந்திரா திரையரங்கு கடந்த 14ஆம் திகதி பிற்பகல் 1மணியளவில் மின்சார ஒழுக்கு காரணமாக தீப்பற்றியதுடன், இராணுவத்தினரின் ஒத்துழைப் போடு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்துள்ளது. தீப்பற்றியதன் காரணமாக திரையரங்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

ஆசிரிய பயிற்சியை இடையில் கைவிட்டோர் மீண்டும் தொடர்வதற்கு சந்தர்ப்பம்

கோப்பாய் கலாசாலை அதிபர் தெரிவிப்பு

நலன்புரி நிலையங்களில் தங்கிய தன் காரணமாக மற்றும் வேறு விதமான பொருத்தமான காரணங்களால் பயிற்சியை மேற்கொள்ள முடியாது போன ஆசிரியர்கள் தமது பயிற்சியைத் தொடர சந்தர்ப்பம் வழங்கப்பட இருக்கிறது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மலர் சின்னையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயிற்சியை இடைநடுவில் கைவிட்ட ஆசிரியர்களை உடனடியாக அனுமதிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளை அறிவுறுத்தி உள்ளது.

இக்கலாசாலையில் ஆரம்பக் கல்வி, நடனம், சங்கீதம், மனைப்பொருளியல் ஆகிய பாடத்துறைகளில் மட்டும் பயிற்சி பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பயிற்சியில் இணைந்து கொள்ள தற்போது கடமையாற்றும் பாடசாலை அதிபர் ஊடக வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்று எதிர் வரும் 22 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கலாசாலையில் சமுகமளிக்க வேண்டும்.

உரியவர்களுக்கு தனித்தனி அழைப்புக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன - என்றார். (ஒ- 1)

குழந்தைகளுக்கு பால் விநியோகம்

சண்டிலிப்பாய், மார்ச் 16

குடாநாட்டில் குழந்தைகளுக்கான பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதனால் 2 வயதிலிருந்து 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் நன்மை அடைந்துள்ளார்கள்.

குடாநாட்டில் பிரதேச ரீதியாக கிராம உத்தியோத்தர்கள் பிரிவுகள் தோறும் குழந்தைகளுக்கு பால் வழங்கும் திட்டம் கடந்த வாரத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. ஒரு குழந்தைக்கு ஒரு நாளுக்கு 250 மில்லி லீற்றர் பால் வீதம் வழங்கப் படுகிறது. போஷாக்கு குறைந்த, வசதி குறைந்த குழந்தைகள் இதனால் பயன் அடைகிறார்கள்.

குழந்தைகளுக்கான பால் அந்தந்தக் கிராம உத்தியோத்தர் பிரிவுகளிலுமுள்ள மாட்டுப் பண்ணையாளர்களிடம் இருந்து பெறப்பட்டு வழங்கப் படுகிறது. (ஒ- 115)

அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்ந்த

யாழ்ப்பாணம், நல்லூர் மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வரும் 25 ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் குடியேறிய குடும்பங்களுக்கு நாளை வழங்கப்படவுள்ளதாக அரச அதி பர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 417 குடும்பங்களுக்கும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 632 குடும்பங்களுக்கும் கொடுப்பனவுக்கான அனுமதிக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. எனவே உரியவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, வங்கி வைப்பு புத்தகம் என்பனவற்றுடன் சென்று அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித் துள்ளார். (ஒ-10)

நாளை

பங்குனி 03 17 .03.2010

புதன்கிழமை

திதி: துதியை

பி.இ. 05.08 வரை

நட்சத்திரம்: உத்தரட்டாதி

மு.ப.08.56 வரை

சுபநேரம்: 09.19-06.29 வரை

ராகுகாலம்: 12.19-01.49 வரை

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கப் பணியாளர்கள் 6 நாள்கள் பணியில்

சண்டிலிப்பாய், மார்ச் 16

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கத்தின் வளர்ச்சி கருதியும், விற்பனையை அதிகரிக்கும் நோக்குடனும் வேலை நாள்களை ஐந்தரை நாள்களில் இருந்து 6 நாள்களாக அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பெரும் நட்டத்துடன் இயங்கி வந்த மேற்படி சங்கம் தற்பொழுது நிலவும் சமாதானச் சூழ்நிலையை அடுத்து ஓரளவு வளர்ச்சி அடைந்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ- 115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல்; 9 பேர் பரிதாபப் பலி; 18 பேர் காயம்!

பக்தாத்,மார்ச்16

''ஈராக்கிய மேற்கு மாகாணமான அன்பாரிலுள்ள பலூஜா நகரில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் படுகாயமடைந்தனர்'' என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''தற்கொலைக் குண்டுதாரி, தான் செலுத்தி வந்த காரிலிருந்த குண்டை கூடியிருந்த தொழிலாளர் மத்தியில் வெடிக்க வைத்துள்ளார். குண்டுவெடிப்பில் காரும் சின்னா பின்னமாக சிதைந்துவிட்டது'' என பொலிஸ் அதிகாரி பஷார் மொஹம்மத் ஏ. எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''பயங்கரமாக வெடித்த குண்டால் இப் பகுதியே குலுங்கியது. தூக்கி வீசப்பட்டு நான் நிலத்தில் கிடந்தேன். புகை மண்டலம் எழுப் பிக்கொண்டிருந்தது. சிதைந்த கார் பாகங்களில் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. வெடித்தது குண்டுதான் எனத் தெரிந்து கொண்டேன்'' என பலூஜா குடியிருப்பாரும், வர்த்தகருமான மொஹம்மத் அப்துல்லா, ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

ஈராக்கில் கடந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் தொடர் குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இது வரை வெளியாகியுள்ள 18 மாகாணங்களுக்கான தேர்தல் முடிவு களின்படி, பிரதமர் நூரி மாலிகியின் கூட்டணி முன்னணி வகித்துக்கொண்டிருக்கிறது.

கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற இத் தேர்தலின் முழுமையான முடிவுகளும் எதிர்வரும் 18ஆம் திகதி வெளியாகிவிடக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் தினமான 7 ஆம் திகதி ஈராக்கில் பரவலாக இடம்பெற்ற வன்முறைகளில் 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 78 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

பாக். விமானம் குண்டுவீச்சு: 6 பேர் பலி; பாடசாலை சேதம்

பெஷாவர்,மார்ச்16

பாகிஸ்தான் தலிபான் தளபதி அஸ்லாம் பரூக்கியின் மாமனாரான நஸ்ருல்லா வீட்டின் மீது விமானப் படையினர் குண்டு வீசித் தாக்கியதில் 6 பேர் உயிரிழந்தனர்.

தலிபான் இயக்கத்தின் பாகிஸ்தான் தளபதியாக அஸ்லாம் பரூக்கி செயற்பட்டு வருகிறார். இவரது மாமனார் நஸ்ருல்லாவின் வீடு மிரோவாக் பகுதியில் உள்ளது.

இங்கு பாகிஸ்தான் விமானப் படையினர் குண்டுகளை வீசி ஞாயிற்றுக்கிழமை திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

இதில் 6 பேர் கொல்லப்பட்டனர். வீட்டின் அருகிலிருந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் குண்டுவீச்சில் சேதமடைந்தது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்படுகிறது அமெ.

பிரதமர் வென்ஜியா போ குற்றச்சாட்டு

பீஜீங்,மார்ச் 16

சீனாவின் இறையாண்மைக்கும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் எதிராக அமெரிக்கா செயற்பட்டு வருகிறது என சீனப் பிரதமர் வென் ஜியா போ குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்கள் கூட்டத்தில் வென் ஜியாபோ பேசு கையில், ''சென்ற ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்றுக் கொண்ட பின்னர் அமெரிக்க - சீன உறவுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. ஆனால் தாய்வானுக்கு ஆயு தங்களை விற்பனை செய்வதன் மூலமும் திபெத்திய மதத் தலைவர் தலாய் லாமாவை ஒபாமா வெள்ளை மாளிகையில் சந்தித்ததன் மூலமும் சீனாவின் இறையாண்மைக்கு எதிராக அமெரிக்கா செயற்பட்டுள்ளது''என குற்றஞ்சாட்டியுள்ளார்.

''தாய்வானை ஒரு பயங்கரவாதப் பிரதேசமாக சீனா பார்க்கிறது. ஆனால், அமெரிக்காவோ தாய்வானுக்கு ஆயுத விற்பனை செய்கிறது. அமெரிக்காவின் இந்தச் செயல் இருதரப்பு உறவுகளைப் பாதித்துள்ளது. இதற்கு சீனா எந்த வகையிலும் பொறுப்பல்ல. இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஏற்கனவே இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைகள் தான் அமெரிக்கா - சீனா உறவுகளுக்கான அடித்தளம். அதன்படி அமெரிக்கா செயற்படும் என நம்புகிறேன்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

''பீஜிங் மற்றும் ஷாங்காய் நகரங்களை மட்டும் பார்த்து சீனாவை வளர்ந்த நாடு என முடிவு செய்துவிடக்கூடாது. சீனாவின் நகர்ப் புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்குமான பொருளாதார இடைவெளி அதிகம் உள்ளது. இந்த நூற்றாண்டின் மத்தியில் தான் சீனா வளர்ந்த நாடாக மாறும். அதே சமயம் தற்போது உலகில் பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களைக் கையாள்வதிலும், சர்வதேச ஒத்துழைப்பிலும் சீனா முக்கியபொறுப்புள்ள நாடாகத் திகழ்கிறது'' என்றும் பிரதமர் வென்ஜியா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மெக்ஸிக்கோவில் மோதல்: 13 பேர் உயிரிழப்பு

மெக்ஸிக்கோ, மார்ச் 16

மெக்ஸிக்கோ விடுதியொன்றில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். மெக்ஸிக்கோ அக்கபுல்கோ என்னும் நகரிலுள்ள விடுதியொன்றில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பாக ஏற்பட்ட முறுகல் நிலையே இந்த மோதல்களுக்கான காரணம் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஐந்து பொலிஸாரும் அடங்குவர். துப்பாக்கிப் பிரயோகம், சிரச் சேதம் ஆகியவற்றின் மூலம் படுகொலைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் பூகம்பம்!

ஜகர்த்தா,மார்ச்16

இந்தோனேஷியாவின் கிழக்கு தீவுப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை பயங்கரப் பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவில் 7 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது என இந்தோனேஷிய புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு இந்தோனேஷியாவின் வடமலுகு மாகாணத்தில், ஜகர்த்தா நேரப்படி ஞாயிற்றுக்கிழமை காலை 7.57 மணிக்கு இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

ஜகர்த்தாவிலிருந்து வடக்கு, கிழக்கே 2 ஆயிரத்து 430 கி.மீ தொலைவை மையமாகக் கொண்டு 56 கி.மீ. ஆழத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது என இந்தோனேஷிய புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்தது.

சக்திவாய்ந்த இந்தப் பூகம்பத்தை அடுத்து ஆழிப்பேரலை எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. பூகம்ப அனர்த்த சேத விவரங்கள் உடனடியாக வெளியாக வில்லை.

இதற்கிடையே, இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் எல்லைப் பகுதியிலும் அந்தமான், நிகோபார் தீவுகளிலும் ஞாயிற்றுக்கிழமை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவில் 4.6 புள்ளிகளாகப் பதிவான இந்த நிலநடுக்கம் முதலில் அந்தமான் நிகோபார் தீவுப் பகுதியில் ஞாயிறு காலை 8.13 மணிக்கு உணரப்பட்டது. இதையடுத்து, பகல் 12.23 மணிக்கு இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் எல்லை பகுதிகளில் அதிர்வுகள் ஏற்பட்டன.

பஞ்சாபின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஹோஷியாப்பூரில் இந்த பூகம்பம் மையம் கொண்டிருந்தது என பூகம்பவியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் இந்தப் பூகம்பத்தால் பாதிப்பு ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

கடன் சுமையில் முழ்குகிறது ரஷ்யா: எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி

மாஸ்கோ,மார்ச்16

ரஷ்யாவில் ஜனநாயக நடைமுறை முடக்கப்பட்டுவிட்டது என முன்னாள் சோவியத் ஒன்றியத் தலைவர் மிகைல் கொர்பசேவ் தெரிவித்துள்ளார். சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியாக இருந்த கொர்ப சேவ், ஜனநாயக நடைமுறைகளை மேற் கொண்டதன் விளைவாக 1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் உடைந்தது.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையில், ''ஜனநாயகத்தின் மூலம்தான் நாடு வளர்ச்சியடையும் என்பதில் எனக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லை. சோவியத் ஒன்றியம் உடைந்தவுடன், ரஷ்யாவில் ஜனநாயக நடைமுறைகள் பின்பற்றப் பட்டன. ஆனால், சமீபகாலமாக அந்த நடைமுறை இல்லை'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''ரஷ்ய ஜனாதிபதி புடின் முதல் முறையாக ஜனாதிபதியானபோது, ஜனநாயக நடைமுறை இருந்தது. இரண்டாவது முறை அவர் ஜனாதிபதியானபோது, ஜனநாயக நடைமுறைகளைக் காணவில்லை. ரஷ்யாவின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவது பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை. நவீன மயமான, வளர்ச்சியடையும் ரஷ்யாவை உருவாக்க வேண்டும். ரஷ்யாவின் தற்போதைய நிலைமை கவலை அளிக்கிறது'' என்றும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட வில்லை. ஓரிடத்தில் மட்டுமே குவிந்துக் கிடக்கின்றன. அதிகாரத்தில் இருப்பவர்கள் எடுக்கும் முடிவுக்கு, நாடாளுமன்றம் உடனடியாக ஒப்புதல் வழங்கிவிடுகிறது. மக்களிடம் அதிகாரம் சென்றால், இன்னும் குழப்பம் மேலோங்கி விடுமோ என அதிகாரிகளும், ஆட்சியில் உள்ளவர்களும் பயப்படுகின்றனர்'' என்றும் கொர்பசேவ் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் ஏல விற்பனையில் திப்பு சுல்தானின் ஆயுதங்கள்

லண்டன்,மார்ச் 16

திப்பு சுல்தான் பயன்படுத்திய ஆயுதங்களான அரிய வாள், பித்தளையால் உருவாக் கப்பட்ட பீரங்கி ஆகியவை அடுத்த மாதம் லண்டனில் ஏலம் விடப்படவுள்ளன. 1799 ஆம் ஆண்டில் செரிங்க பட்டம் பகுதியிலுள்ள மைசூர் மன்னன் திப்பு சுல்தானின் அரண்மனையை, பிரிட்டிஷார் தாக்கினர்.

அப்போது அங்கிருந்து, திப்பு சுல்தான் பயன்படுத்திய அரிய வகை பொருள்களை அவர்கள் கைப்பற்றினர். இவற்றில் ஆயுதங்களும் அடங்கும். அந்தப் பொருள்களில், அரிய வகை வாள், புலி முக அமைப்புடைய வாளுறை ஆகியவை உட்பட பல பொருள்கள் லண்டனில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஏலம் விடப் படவுள்ளன.

இதில், திப்பு சுல்தானின் வாள், ஒரு கோடியே 17 லட்சம் முதல் ஒரு கோடியே 53 இலட்சம் ரூபாய் வரை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே போன்று, திப்பு சுல்தானுக்காகப் பித்தளையால் உருவாக்கப்பட்ட பீரங்கி, 2 கோடியே 64 லட்சம் ரூபாய் முதல் ஒரு கோடி ரூபாய் வரை ஏலம் போகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.



திப்பு சுல்தானின் பொருள்களில் சில வற்றை முதல் கட்டமாக 2005 ஆம் ஆண்டு லண்டனிலுள்ள சோதிபை நிறுவனம் ஏலம் விட்டது. அப்போது, அந்த ஏலத்தின் மூலம் 27.51 கோடி ரூபா கிடைத்தது.

கடந்தாண்டு, திப்பு சுல்தானின் தங்க சிம்மாசனத்தில் இருந்த, விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட தூபி முகடு, 8.64 கோடி ரூபா ஏலம் போனது. சோதிபை நிறுவனத்தின் மத்திய கிழக்கு மற்றும் இந்திய கலைத் துறைத் தலைவர் எட்வர்டு கிப்ஸ் கூறுகையில், ''திப்பு சுல்தானின் பொருள்களை இரண்டாவது கட்டமாக ஏலம் விடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்'' என்றார்.

பெண் இராணுவச் சிப்பாய்கள் மீதான பாலியல் பலாத்காரத்தில் அமெ. முன்னணி

ஆய்வறிக்கைகள் தகவல்

வாஷிங்டன்,மார்ச் 16

உலகில் பாலியல் பலாத்காரங்கள் மிகவும் அதிகமாக நடைபெறும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்காதான் முதல் இடத்தைத் தொடர்ந்து கைப்பற்றி வருகின்றது.

தற்போது வெளிவரும் அறிக்கைகள் இராணுவ பெண் சிப்பாய்கள் மீதான பாலியல் பலாத்காரத்திலும், அமெரிக்கா முன்னணி வகிக்கின்றது என தெரிவிக்கின்றன.

அமெரிக்க இராணுவ பெண் சிப்பாய்கள் மீதான பாலியல் பலாத்காரங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த வருடத்தில் 2009ஆம் ஆண்டு மட்டும் 37 ஆயிரம் பெண் இராணுவ சிப்பாய்கள் பாலியல் பலாத்காரங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

எனினும் இந்த எண்ணிக்கை மிகவும் சிறியது. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட அதிகமான பெண் இராணுவ சிப்பாய்கள் அது பற்றி முறைப்பாடு செய்வது இல்லை. முறைப் பாடு செய்தால் தாங்கள் பழிவாங்கப்படுவார்கள் என அஞ்சுகிறார்கள் என்றும் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மொத்த இராணுவ பாலியல் பலாத்காரத்தில் 25 வீதம் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் நடைபெறுகின்றன என பென்டகன் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. அமெரிக்கா முழுவதும் பாலியல் தொடர்பான குற்றங்களைப் புரிந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்தை விட அதிகமாகும் என்று சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. பாலியல் தொடர்பான குற்றங்கள் அங்கு அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது.

இதற்காக அமெரிக்காவில் பாலியல் குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்டவர்களின் முகவரி உள்ளிட்ட தகவல்களை தனியார் நிறுவனம் ஒன்று வழங்குகிறது. இதன்மூலம், ஒருவர் தாம் வாழும் பகுதிக்கு அருகில் பாலியல் குற்றங்களைப் புரிவோர் என்று கருதப்படுவோர் யாரேனும் இருக்கிறார் களா என்பதை உறுதிசெய்துகொள்ள முடியும் என்று அந்நிறுவனம் விளம்பரப்படுத்தி வருகின்றது.

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சியில் எனது பங்களிப்பு என்றும் தொடரும்

அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

வறுமைக்கோட்டின் கீழுள்ள பெற்றோர்களது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகத் தான் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டத்தின் கீழ் உரிய அனைவருக்கும் ஆகக்கூடிய உதவிகளைத் தான் மேற்கொள்ளத் தயாரென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இப்பாடசாலையின் தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் பாடசாலை அதிபர் உட்பட பலர் தனக்கு எடுத்துக் கூறியிருப்பதாகவும் கூடிய விரைவில் அக்குறைபாடுகளை நீக்கி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுப்பதாக உறுதியளித்ததுடன் யாழ்.குடாநாட்டினதும் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களினதும் கல்வி வளர்ச்சியில் தனது பங்களிப்பு எப்போதும் போல் தொடரும் என்றும் தெரிவித்தார். (50)

'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் காட்சி இம்மாதம் 22 முதல் 28 வரை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்படும் பிரமாண்டமான ஆற்றுகையான இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினைச் சித்திரிக்கும் திருப்பாடுகளின் காட்சி இம்முறை 'வெள்ளியில் ஞாயிறு' என்னும் பெயரில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஏழு நாள்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

திருப்பாடுகளின் காட்சியை பார்வையிட வருகின்ற பார்வையாளர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தங்களுக்கான அனுமதிகளை மன்ற அலுவலகத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் இம்முறை யாழ்.மாவட்ட மக்கள் மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் திருப்பாடுகளின் காட்சியை பார்வையிட வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் திங்கள் முதல் வெள்ளிவரையிலான நாள்களில் இக்காட்சியை பார்வையிட வசதியுள்ளவர்கள் அந்நாள்களில் பார்வையிட்டு சனி, ஞாயிறு தினங்களில் நிகழும் சனநெரிசலை தவிர்க்க உதவுமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள இவ்வாற்றுகை, ஏனைய நாள்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும். பார்வையாளர்கள் நிகழ்வு ஆரம்பமாவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக அரங்கினுள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

இரணைமடுவிலிருந்து குடாநாட்டுக்கு தண்ணீர்; சுற்றுச் சூழல் அதிகாரிகள் நேரடியாக ஆய்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வது தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சுற்றுச்சூழல் அதிகாரிகள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாகவும் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர் விநியோகம் குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் திரும்பிச் செல்லும் போது இரணைமடுக் குளத்தையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-224)

வடமராட்சியில் புதிதாக அமைக்கப்பட்ட வலயக் கல்வி அலுவலகம் இன்று திறப்பு

பருத்தித்துறை,மார்ச் 16

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும் வடமராட்சியில் 5 பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்களும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியினால் இன்று செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள காணி, வடமராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் பல வருடங்களுக்கு முன்னர் வாங்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறை ஓராங்கட்டைக்கு அண்மையில் இந்த அலுவலகம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம், புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைந்துள்ள கட்டடங்களில் இயங்கி வந்தது.

வடமராட்சியில் ஸ்ரீ நாரதா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, தேவரையாளி இந்துக் கல்லூரி, வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்களுமே அன்றைய தினம் ஆளுநரால் திறந்துவைக்கப்படவுள்ளன. (50-190-224)

ஆங்கில மொழிமூலக் கணனி மென்பொருள் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

'யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த தேசிய பாடசாலை, 1ஏபி பாடசாலை, தனியார் பாடசாலை, 1சி பாடசாலைகளின் ஆங்கில மொழிமூலக் கற்பித்தலை வளப்படுத்தும் நோக்கில் கணனி மென்பொருள் அறிமுகமானது. கொழும்பிலிருந்து வந்துள்ள கல்வி சார் நிறுவனம் ஒன்றினால் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் அதிபருடன் தகவல் தொழில் நுட்ப ஆசிரியர் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் பங்குபற்றிப் பயனடையுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50)

நல்லூர் கோட்ட மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 16

நல்லூர் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமையும் அதற்கு மறுதினமும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம் பெறவுள்ளது. (1-23)

நாடாளுமன்றத் தேர்தல் - 2010

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)

25 வருடப் பிணைப்பு எம் மக்களுடன்...
அந்த வரலாறு இனியும் தளராது...!

உதயன் முதல் பிரதி வெளியீட்டு வைபவம் 1985.11.27 ஆம் திகதியன்று உதயன் அலுவலகத்தில் இடம்பெற்ற வேளையில்.....

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X

6

தொழிலதிபர்

உதயன் நிர்வாக இயக்குநர் வி.சரவணபவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எங்களது பிரதேசத்தின் அபிவிருத்தியை ஜனாதிபதியின் துணையோடு முன்னெடுத்து மக்களுக்கு ஆறுதல் தருவேன்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களில் ஒருவரான ந.யோகராஜன் உதயனுக்கு வழங்கிய நேர்காணல் இது. யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபராக பணியாற்றியவர் இவர்.

கேள்வி: வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை யாழ். மாவட்டத்தில் அதிகளவு வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். இந்நிலையில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் அதிபராக இருந்த நீங்கள் அரசியல் வாதியாக மாறி நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதேன்?

பதில்: நான் தொழில்நுட்பக் கல்லூரியில் பணிபுரிந்த காலப்பகுதியில் என்னால் இயன்ற அளவுக்கு தமிழ் இளைஞர், யுவதிகளின் தேவைகளை நிறைவேற்றியுள்ளேன். தொழில்நுட்பக் கல்லூரியில் கற்று முடித்து வெளியேறிய பல்லாயிரக்கணக்கானோர் இன்று சமூகத்தில் உயர்நிலையில் இருப்பதற்கு நானுமோர் காரணம் என்பதில் பெருமகிழ்வடைகின்றேன். ஆனாலும் நம் மண்ணில் நிகழ்ந்த பெருயுத்தம் ஏராளமான இளைஞர்களையும், யுவதிகளையும் அங்கவீனர்களாக்கி அவர்களது எதிர்காலத்தை இருட்டாக்கியுள்ளது. படையினரிடம் சரணடைந்த இளைஞர்கள் பலருக்குத் தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தொழிற்பயிற்சிகளையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுத்தேன். இந்நிலையில் இவர்கள் அனைவருக்குமான வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுப்பதற்கு நான் அரசியலில் இறங்கியே ஆகவேண்டிய கட்டாய சூழ்நிலையைக் காலம் ஏற்படுத்திவிட்டது. காலத்தின் கட்டளையை ஏற்று மக்களுக்காகத் தேர்தலில் போட்டியிட முன் வந்தேன்.

கே: எந்த இலக்குகளை முன்வைத்து மக்களிடம் உங்களின் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?

ப: அபிவிருத்தியே என்னுடைய முதன்மையான தேர்தல் கோஷமாக இருக்கின்றது. 30 வருட கால அகிம்சைப் போராட்டத்திலும் அதற்குப்பின்னர் இன்னொரு 30 வருடங்கள் ஆயுதப் போராட்டத்திலும் செலவிட்ட நம் இனம் அபிவிருத்தியில் பெருமளவு பின்தங்கியுள்ளது. எனவே மக்களின் முன்னால் உள்ள அவசரமான அவசியமான தேவைகளை தீர்த்துவைப்பதனூடாக அவர்களுக்கு ஒரு இளைப்பாற்றுதலைக் கொடுக்க முடியும். அத்தகைய ஆறுதல் நிலையை அவர்கள் அடைந்த பின்னரே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு நோக்கி நகரமுடியும். அதுவே யதார்த்தம். எனவே தான் முதலில் மக்களுக்கான அபிவிருத்தியை ஜனாதிபதியின் துணையோடு முன்னெடுத்து நொந்துபோயுள்ள மக்களுக்கு ஆறுதல் கொடுக்க எண்ணியுள்ளேன். கடந்த காலங்களில் தென்பகுதிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான சகல தொடர்புகளும் அற்றுப்போன நிலையிலும். அரும்பணியாற்றிய குடாநாட்டின் நிர்வாக அதிகாரிகள் இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க என்னோடு துணைநிற்பார்கள் என நம்புகின்றேன்.

நொந்துபோனவர்களின் முதல் தேவை அதுவே என்கிறார் யோகராஜன்

கே: அபிவிருத்தி எனும் அர்த்தத்தில் எவற்றையெல்லாம் உள்வாங்கி நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளீர்கள்?

ப: மஹிந்த சிந்தனையின் மூலம் கிடைக்கக்கூடிய நற்பயன்களைப் பயன்படுத்தி சிதைந்த பிரதேசங்களைக் கட்டியெழுப்புதல், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்தல், போராடல் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கான வாழ்வாதாரத்தையும் சுய தொழில்வாய்ப்பையும் உண்டாக்குதல், இடம்பெயர்ந்த மக்களுக்கான புதிய வாழ்வும் வீடமைப்பும், மீன்பிடி, விவசாயக் கைத்தொழில் துறையில் அபிவிருத்தி என்பவற்றை பிரதானப்படுத்தியே என்னுடைய வேலைத்திட்டங்கள் அமையவுள்ளன. இதுத்விர பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றில் கற்று முடித்த அனைவருக்கும் வேலைவாய்ப்பை வழங்குவதற்கான விஷேடதிட்டம் ஒன்றை நான் ஜனாதிபதியிடம் முன்வைத்த போது அவர் அதற்கு உடனேயே தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தார். எனினும் தேர்தல் காலச் சலுகையாக இத்தகைய நியமனங்களை வழங்கி ஆதாயம்பெறும் எண்ணம் எனக்கோ, ஜனாதிபதிக்கோ இல்லாமையால் தேர்தல் முடிந்த பின்னரே அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். இத்திட்டங்களை செயலுருப்படுத்த வெற்றிலைக்கும் என்னுடைய வெற்றிச் சின்னமான 5இற்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

கே: அரசியல் தீர்வு பற்றி உங்களுடைய அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவுற்றதும் எவ்வாறு செயற்படுவீர்கள்?

ப: தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வே ஒரே வழி. தமிழ் மக்கள், புத்திஜீவிகள், புலம்பெயர் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளகூடிய, சகல இன மக்களையும் போல சம உரிமையோடு தமிழ் மக்களும் தலைநிமிர்ந்து வாழக்கூடிய வகையில் ஜனாதிபதியின் ஒத்துழைப்போடு ஒரு நிரந்தரத் தீர்வை கொண்டுவரப் பாடுபடுவேன். சில வேளைகளில் இத்தீர்வுத் திட்டத்தில் தமிழ் மக்கள் சிறிதளவேனும் பாதிக்கப்படுவதாக அவர்கள் கருதினால் அடுத்த நொடியே அரசியலில் இருந்து ஒதுங்கி மக்களோடு இணைந்து அவர்களுக்காக குரல் கொடுக்கவும் நான் தயார்.

நேர்காணல் : சூர்யா

கே: உங்களுடைய முதலாவது பிரசாரக் கூட்டத்தை தீவகத்தில் நிகழ்த்தியமைக்கு ஏதேனும் பின்னணிக் காரணிகள் உண்டா?

ப: காலங்காலமாக எல்லா அரசியல் வாதிகளாலும் கைவிடப்பட்ட மக்களாக தீவகமக்கள் இருக்கின்றார்கள். அவர்களது இருப்பிடம், குடிதண்ணீர், வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகளில் எந்தவொரு அரசியல்வாதியும் அக்கறை காட்டுவதில்லை. எனவே அவர்களின் இருண்ட வாழ்வுக்கு முடிவு கட்டுவதென்ற எண்ணத்துடன் ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவோடு இணைந்து தீவகத்தில் என்னுடைய முதலாவது பிரசாரக்கூட்டத்தை நடத்தினேன். பிரசாரத்தோடு மட்டும் நின்றுவிடாது தீவிரமான செயற்பாட்டின் மூலம் அவர்களின் வாழ்வு மேம்பட தொடர்ந்து உழைப்பேன். *

தபால் மூலம் வாக்களிப்போம்

நாடாளுமன்றத் தேல்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 25ஆம்,26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெற உள்ளது. தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர், ஊழியர், போக்குவரத்துச் சபையினர் போன்றவர்களின் வாக்குரிமைக்காக தபால் மூல வாக்களிப்பு இடம்பெறுகின்றது.

தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச உத்தியோகத்தர், ஊழியர்கள் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் தமது மேலதிகாரியிடம் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று உரியவாறு நிரப்பி மேலதிகாரி மூலம் மாவட்டச் செயலகத் தில் உள்ள தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். பெரும்பாலான அரச ஊழியர்களும் சில போக்குவரத்துச் சபை ஊழியர்களும் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தை உரிய முறையில் நிரப்புவதில்லை. அப்படிப்பட்டவர்கள் தமது கிராம அலுவலரிடம் சென்றோ அல்லது பிரதேச செயலகங்களில் வைக்கப்பட்டுள்ள வாக்காளார் இடாப்பை பார்வையிட்டோ,

01. தேர்தல் மாவட்ட இலக்கம்
02. வாக்கெடுப்புப் பிரிவு
03. வாக்கெடுப்பு மாவட்டம்
04. தொடர் இலக்கம்,
05. கிராம அலுவலர் பிரிவு இலக்கம்

என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். தேர்தல்களை புறக்கணிப்பதும் வாக்களிக்காது இருப்பதும் நல்லதல்ல. வாக்களிப்பு ஜனநாயக உரிமை ஆகும். எமக்காக தமிழக மக்களோ இந்திய மக்களோ வாக்களிக்கத் தேவையில்லை. எமக்காக ஐ.நா சபையினரும் வாக்களிக்கத் தேவையில்லை நமக்காக நாமே எமது கைகளால் வாக்களிக்க வேண்டும். எமது ஒற்றுமையை மீண்டும் ஒருதடவை உலகிற்கு கூறவேண்டும்.

– ஜே.அல்வி, யாழ்ப்பாணம்.

ஈ.பி.டி.பியின் அரசியல் இலக்கே ஒஸ்லோ பிரகடனத்தின் உள்ளடக்கம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

யாழ்ப்பாணம்,மார்ச்16

எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு இதுவரையில் ஆக்கபூர்வமான முறையில் எவ்வித தீர்வுத் திட்டங்களையும் முன்வைத்திராத சில தமிழ் அரசியல்வாதிகள் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் எமது மக்களை ஏமாற்றுவதற்காக ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தை கொண்டுவரப்போவதாகக் கூறுகின்றனர்.

நாம் ஆரம்பம் முதல் கூறிவருகின்ற மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கைக் கோட்பாடே ஒஸ்லோ பிரகடனத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

ஈ.பி.டி.பியினராகிய நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற தீர்வுத் திட்டங்களைத்தான் இந்தத் தமிழ் அரசியல்வாதிகளும் முன்வைத்து வருகின்றனர். இந்த வகையில் எமது கட்சியின் நிலைப்பாட்டை இவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பி சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளருமான எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச மக்களைச் சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் கருத்துத் தெரிவிக்கையில மத்தியில் கூட்டாட்சி என்பது ஈ.பி.டி.பியினராகிய எமது அரசியல் இலக்காகும். ஒஸ்லோ பேச்சுவார்த்தையின்போது புலிகளது தலைமையும் இந்த விடயத்தையே முன்வைத்தது. இந்த வகையில் ஐக்கிய இலங்கை எனும் கட்டமைப்புக்குள் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயாட்சியை அனைத்து சமூகங்களுக்கும் ஏற்புடைய வகையில் மேற்கொள்வதற்குரிய வகையில் தீர்வு காணப்படவேண்டும் என இணக்கம் காணப்பட்டபோதிலும் அதன் பின்னர் புலித் தலைமை இந்த இணக்கப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. இந்த இணக்கப்பாடு குறித்துத்தான் இப்போது ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தை முன்னிட்டு பேசி வருகிறார்கள். இது ஈ.பி.டி.பியினராகிய நாம் ஆரம்பம் முதல் முன்வைத்து அதன் அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம் எமது அரசியல் இலக்காகும் – என்றார். (50)

வடக்கு, கிழக்கில் நடைபெறும் நான்கு தேர்தல் கூட்டங்களில் ஜனாதிபதி

அமைச்சர் டலஸ் தகவல்

கொழும்பு,மார்ச்16

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி பங்கேற்க உள்ளதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு வடக்கு, கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கும் 26 பிரதான பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பங்கேற்கும் முதலாவது பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி கண்டியில் நடத்தப்பட உள்ளதாகவும் குருநாகல், கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தலா இரு கூட்டங்கள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (50)

முறையாக வாக்களிப்பது குறித்து தொழிலாளரை அறிவுறுத்த ஏற்பாடு

நிராகரிக்கப்படும் வாக்குகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றை ஹற்றன் தொழிலாளர் நலன் திட்டம் முன்னெடுத்துள்ளது என ஹற்றன் தொழிலாளர் நலன் திட்டத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான பெரியசாமி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் விளக்கமளிக்கையில் தெரிவித்தவை வருமாறு-

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் செறிந்து வாழும் தேர்தல் தொகுதிகளில் நிராகரிக்கப்படும் வகையில் தொழிலாளர்கள் தமது வாக்குகளை அளித்து வருகின்றனர்.

எந்தத் தேர்தலில் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதில் பெரும்பாலான பொருந்தோட்ட வாக்காளர்களுக்கு சிக்கல்கள் தோன்றியுள்ளமையினை கடந்த காலத் தேர்தல்கள் வெளிப்படுத்துகின்றது. எனவே இவற்றைக் கட்டுப்படுத்தி முறையாக – நிராகரிக்காத வகையில் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பிலான விழிப்புணர்வு செயற்றிட்டத்தை நடுநிலையான சமூக நோக்கோடு முன்னெடுக்கவுள்ளோம் – என்றார்.

வாக்குச் சாவடிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை!

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தீர்மானம்

கொழும்பு,மார்ச்16

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்குச்சாவடிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்

தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை குறித்து அவர் சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதன்படி 800இற்கும் குறைவான வாக்காளர்கள் உள்ள வாக்குச் சாவடிகளில் 8 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

800 முதல் 1200 வாக்காளர்கள் பதிவாகியுள்ள வாக்குச் சாவடிகளில் 9 அதிகரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

1200 முதல் 1500 வாக்காளர்கள் பதிவாகியுள்ள வாக்குச் சாவடிகளில் 14 அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதுடன் 1500இற்கு மேற்பட்ட வாக்காளர்கள் உள்ள பிரதான வாக்குச் சாவடிகளில் 15 அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக இந்த விசேட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பிரதேசசெயலக நூலக பிரிவிற்கு உட்பட்ட பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான எல்லேபோட்டி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தின் சில காட்சிகள் (படங்கள் : தமிழினியன்)

'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து திஸ்ஸமகாராமவுக்கு சைக்கிளோட்டம்

பதிவுகள் இன்று துரையப்பா விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம், மார்ச், 16

'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் ஏற்பாட்டில் 'மவுண்டன்ட் பைக்' நிறுவன அனுசரணையுடன் சைக்கிளோட்டப் போட்டி நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் இன்று காலை 6 மணி முதல் துரையப்பா விளையாட்டரங்கில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

நாளை காலை 7மணிக்கு பருத்தித்துறை கடற்படைத் தலைமையகத்தில் ஆரம்பமாகவுள்ள 80 கி.மீற்றர்கள் தூரம் கொண்ட இப்போட்டி மணியாரம் சந்தி தும்பளை ஊடாகப் பயணித்து நெல்லியடியை அடைந்து அச்சுவேலிச்சந்தி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், நல்லூர் கந்தசுவாமி கோயில், நாகவிகாரை ஊடாக ஆஸ்பத்திரிச் சந்தியை அடையும்.

ஆஸ்பத்திரி சந்தியில் இருந்து வலப்பக்கமாகத் திரும்பி பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து ஏ-9 வீதியை அடைந்து கொடிகாமத்தைச் சென்றடையும். பின் அங்கிருந்து திரும்பி மீண்டும் ஆஸ்பத்திரிச் சந்தியை அடைந்து துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையவுள்ளது.

இப்போட்டியில் முதல் 10 இடங்களைப் பெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதுடன் 500 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

முதல் 10 இடங்களைக் பெறும் வீரர்கள் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டியில் பங்கேற்பர். இப்போட்டியில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தேர்வு செய்யப்பட்ட 125 சைக்கிளோட்ட வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

18 ஆம் திகதி மதவாச்சியில் இருந்து ஆரம்பமாகும் சைக்கிள் ஓட்டம் கண்டியை அடையும். 19 ஆம் திகதி கண்டியில் இருந்து களுத்துறையை அடையும். 20 ஆம் திகதி களுத்துறையில் ஆரம்பமாகும் சைக்கிள் ஓட்டம் மாத்தறையை அடையும். 21 ஆம் திகதி மாத்தறையில் ஆரம்பமாகும் சைக்கிள் ஓட்டம் திஸ்ஸமகாராமவை அடையவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 4 பிரிவுகளாக நடைபெறவுள்ள சைக்கிளோட்டப் போட்டிகளில் பாடசாலை மட்டத்தில் வடமாகாணத்தில் ராஜகுணசேகரவினால் பயிற்சியளிக்கப்பட்ட 440 பாடசாலை மாணவர்கள் பங்குபற்றவுள்ளதுடன் ஆண்கள், பெண்களுக்

கென தனித்தனியாகவும் நடாபெறவுள்ளது.

இருபாலாருக்கும் திறந்த போட்டியாகவும் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில் முதல் 20 இடங்களைப்பெறுபவர்களுக்கு ஆளுநர் அலுவலகத்தினால் அவர்களின் கல்விக்கான உதவி வழங்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கலந்துகொள்வர். (50-6)

வலிகாமம் வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

வலி. வடக்கு மார்ச் 16

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே முதற்தடவையாக நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கு உட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டிகளின் சில முடிவுகள் வருமாறு:

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கும், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்திற்கும் இடையோன போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து மெய்கண்டான் மகா வித்தியாலயம் 3:2 கோல்கள் என்ற அடிப்படையில் ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தை வெற்றிபெற்றது.

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்திற்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி 3:0 என்ற கோல்க் கணக்கில் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தை வெற்றிபெற்றது.

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கும் ஏழாலை ஸ்ரீமுருகன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை 2:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது. மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும், அராலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி 4:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் மானிப்பாய் சென். ஆன்ஸ் வித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டி சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம் 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (50-06-86)

கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழாவையொட்டி மாவட்ட ரீதியில் பெருவிளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே பெரு விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளது.

இதில் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியாக வலைப்பந்தாட்டமும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டிகளாக கூடைப்பந்தாட்டம் (ஆண்,பெண்), உதைபந்தாட்டம் (ஆண்கள்), கிரிக்கெட் ஆண்கள் (ருவென்ரி - 20), எல்லே (ஆண், பெண்), கரம் (ஆண், பெண்), கரபந்தாட்டம் (ஆண்கள்), சதுரங்கம் (ஆண், பெண்) ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பங்களைக் கல்லூரியில் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரியில் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (50-6-23)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு போட்டியில் வெற்றிபெற்ற கழகங்கள்

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விவரங்கள் வருமாறு :

கிரிக்கெட் (ஆண்கள்)

முதலாமிடம் - மைக்கல் விளையாட்டுக் கழகம்
2 ஆம் இடம் -நவஜீவன் விளையாட்டுக் கழகம்
3 ஆம் இடம் - கலைமகள் விளையாட்டுக் கழகம்.

கிரிக்கெட் (பெண்கள்)

முதலாமிடம்- பொம்மோர்ஸ் விளையாட்டுக் கழகம்
2 ஆம் இடம்- டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்
3 ஆம் இடம் - இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம்.

வலைப்பந்தாட்டம் (பெண்கள்)

முதலாமிடம் - பொம்மோர்ஸ் விளையாட்டுக்கழகம்
2 ஆம் இடம் - றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்
3 ஆம் இடம் - இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம்.

எல்லே (பெண்கள்)

முதலாமிடம் -இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம்
2 ஆம் இடம் - பொம்மோர்ஸ் விளையாட்டுக்கழகம்
3 ஆம் இடம் - டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்.

கபடி (ஆண்கள்)

முதலாமிடம் - நவசக்தி விளையாட்டுக்கழகம்
2 ஆம் இடம் - பொம்மோர்ஸ் விளையாட்டுக்கழகம்
3 ஆம் இடம் - வாலிபர் வட்ட விளையாட்டுக்கழகம்.

கபடி (பெண்கள்)

முதலாமிடம் - பொம்மோர்ஸ் விளையாட்டுக்கழகம்
2 ஆம் இடம் - மைக்கல் விளையாட்டுக்கழகம்.

(50-23)

பாராளுமன்றத் தேர்தல் 2010
யாழ் மாவட்டம்

—ஆசியாவிலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் எமது யாழ்ப்பாணக் கலாச்சாரத்தை உங்களின் ஒத்துழைப்புடன் அழியவிடாமல் பாதுகாப்பேன்

அங்கஜன் இராமநாதன்
Angajan Ramanathan B.ENG(HON) MBA
இளமை-துடிப்பு-செயற்றிறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org aavanaham.org

நவக்கிரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லமைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வீரங்கனை ஒருவருக்கு வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம். (11)

பிள்ளையார் இன் 'A'
உல்லாசப் பயணிகள் தங்குமிடம்
('A' Grade Hotel Approved by the Ceylon Tourist Board)

BARMAN

மேற்படி வேலைக்கு அனுபவமுள்ள ஆள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பப்படுவர். அனுபவமில்லாதவர்கள் பயிற்சியளிக்கப்படுவர். இன்றும் நாளையும் நேரில் வரவும்.

Pillayar Inn, Tel: 021 222 2829
31,Manipay Road, Fax: 021 222 4449
Jaffna, Email: Pillayar.in@gmail.com
(95940)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 * 04 * 1932

உதிர்வு 27 * 03 * 2009

மாலிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொழும்பு, மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்ட

இராசு குலமணி

திதி:16.03.2010

அன்பின் திரு உருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் சிகரமாய்-எங்களை வழிநடத்திய அன்பு அம்மாவே!
எம்மை நல்வழிப்படுத்தி -ஏற்றம் பல கண்டீரே அம்மா
ஆண்டு ஒன்று சென்றாலும்-எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு
எம் நெஞ்சங்களில் -நீங்காது நிலைத்திருக்கும்

எங்கள் அம்மாவின்

45/6 Z, KalaniGanga mill Road, Mattakkuliya, Colombo-15
T.P 0112521856 (95928)

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், ஒட்டுமடம் சந்திக்கு அருகில் கராச்சுக்குப் பக்கத்திலுள்ள 3½ பரப்பு நீள் சதுரக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- அன்பன் 0777420240, 0777661655, 0112424261
(95921)

தவறிவிட்டது

உடைய வளவு, இடைக்காடு, அச்சுவேலி என்னும் முகவரியுடைய பாலகிருஷ்ணன் குணாகரன் என்பவரின் மோட்டார் சைக்கிளின் புத்தகம் டயறியுடன் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கும், அச்சுவேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது 0779112984 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளராக ஓர் அரிய சந்தர்ப்பம்

வாழ்க்கையின் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்க்கும் துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் O/L, A/L சித்திபெற்றவராயின் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது Canadian நிறுவனத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முகாமைத்துவ பயிற்சி பெறுவதுடன் உயர்ந்த சம்பளமும் பெற ஓர் அரிய சந்தர்ப்பம். பயிற்சிக் காலம் 6 மாதமாகும்.

Contact - 071 7494735

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை
திரும்தி ரெசில்டா கென்றி
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
பூலன்பிள்ளை செபமாலை அம்மா
அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்.
(95931)

THE ROYAL COLLEGE OF JAFFNA

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில BY ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக்வீதி, சங்கானை. (95934)

காணி விற்பனைக்கு

தொல்புரம், வழக்கம்பரைச் சந்திக்கு அண்மையில் உள்ள சீக்காய் ஒழுங்கையில் பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் 5 பரப்புக் காணித் துண்டு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.சி.விக்கினேஸ்வராஜா, சீக்காய் ஒழுங்கை, வழக்கம்பரை, தொல்புரம். (95945)

கன்னாகம் ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் 2010

மேற்படி 19.03.2010 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் மஹோற்சவ காலங்களில் ஆலய சூழலில் கடலை, இனிப்பு, ஐஸ்கிறீம், மணிக்கடை போன்ற வியாபாரம் செய்வோர் 17.03.2010 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலயத்தில் இடம்பெறும் ஏலத்தில் நேரில் வந்து பங்கு கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

பரிபாலனசபை. (95938) செயலாளர்.

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை கந்தசாமி (சின்னையா)

(ஓய்வு பெற்ற ஊழியர், இ.போ.ச.)

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி (சின்னையா) - (ஓய்வு பெற்ற இ.போ.ச. ஊழியர்) கடந்த 12.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- அமுதாத்தை தம்பதியினரின் அன்பு மகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், அமரர்களான சின்னத்தம்பி, வினாசித்தம்பி மற்றும் அன்னலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம், மகேந்திரம் ஆகியோரின் மைத்துனரும், அகிலன் (ஆசிரியர், மன்னார்), புஸ்பராணி (கனடா), புஸ்பகுமார், புஸ்பகௌரி, புஸ்பநேசன், புஸ்பமாலா, கஜந்தன் (இத்தாலி), வரதாசினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புத ஜெயம், பரமதி, சந்திரமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தஜெயம் (கனடா), பவிக்கா (கனடா), உதயகுமார் (பிரான்ஸ்), சுதேசினி (கல்வியியற்கல்லூரி, மட்டக்களப்பு), பிரியங்கன், குபேதினி, யாதுரன், கிரிஷிகா, ஜீவிதா, பவிதன், அருணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.03.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வெள்ளாம்போக்கட்டி, கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வடக்கு, கொடிகாமம். தகவல்:
0716787903. (C/565719) மனைவி, மக்கள்.

மரண அறிவித்தல்

நாகமுத்து இராசா (சங்கானை)

மாலியாவத்தை, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசா (ஓய்வு பெற்ற கிளை முகாமையாளரும் பணிப்பாளர் சபை உறுப்பினரும்- சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை மேற்கு விவசாய சம்மேளனத்தலைவர், நிற்சாமம், சங்கானை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவர், பரிமளம் அறங்காவற் குழுத் தலைவர், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஆலோசகர்) நேற்று (15.03.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசமணி, ஐயாத்துரை, நாகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, தங்கேஸ்வரி, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தினி (ஆசிரியை, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை), சாந்தராஜா (நெதர்லாந்து), திருமகள் (சுவிஸ்), சுஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவலோகநாதன் (ஆசிரியர், யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்) சுமதினி (நெதர்லாந்து), அமிர்தராசா (சுவிஸ்), தயாளன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் உதயபுத்திரன்(ஜேர்மனி), மகாலிங்கம் (ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், ப.நோ.கூ.ச., சங்கானை) ஆகியோரின் மைத்துனரும் கயன்சிகா, சியானுகா, இனியா, காடியன், கமினயா, அக்ஷயன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.03.2010) புதன்கிழமை முற்பகல் 10மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாலியாவத்தை, சங்கானை.
தொ.பே.இல.021 321 3477 (95433)

சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்
kids park Pre school and day care center
528, பலாலி வீதி, திருநெல்வேலி

அனேக வேலை செய்யும் தாய், தந்தையர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க எதிர்வரும் சித்திரைப் புதுவருடத்திலிருந்து எம் நிபுணத்துவ சேவையை வழங்கவுள்ளோம்.

* உலகிலேயே தலைசிறந்த முள்பள்ளிக் கல்வி வழங்கும் ஜேர்மன், அமெரிக்கா, யப்பான் முறைகளுடனும், எமது பாரம்பரியங்களுடனும்!
* ஆங்கிலம்- தாய்மொழி மூல பயில்வு, விளையாட்டு, ஆடல், பாடல் பன்முகநுண்மதி- களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கைவரை!
* பாதுகாப்பான, ரம்மியமான சூழலில் பயிறசி பெற்ற ஆசிரியர்களின் அரவணைப்பு - அர்ப்பணிப்பு!
* இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுவரை தனித்தனியான கவனிப்புடன் விளையாடி- கற்று, உணவு உண்டு, உறங்கி மகிழ்வான வாழ்வு வாழ (விரும்பின் பகல் முழுவதும்)!
* ஆசிரியர்களே வானில் வீடுவந்து அழைத்து மீண்டும் வீட்டில் விடும் வசதி!

வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு.
ஏப்ரல் 5 ஆம் திகதிக்குமுன் சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

மேலதிகவிபரங்களுக்கு:
077 9360607 (95929)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவிரோதிகளுக்கு தேர்தலில் பதுளை மாவட்டம் பாடம் புகட்டும்

இ.தொ.காவின் ஊடக அறிக்கையில் தெரிவிப்பு

பதுளை, மார்ச்16

இந்நாட்டில் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் அதனோடு இணைந்து மலையக மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தையும் மறுமலர்சியையும் மேம்படுத்த வேண்டும் என்பதே இ.தொ.காவின் இலட்சிய நோக்கமாகும். இந்த அடிப்படையில்தான் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசுகளுடன் சேர்ந்து உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொடுத்திருக்கிறார் என இ.தொ.கா. ஊடகப்பிரிவு தேர்தல் நிலைவரம் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

எமது பெருந்தலைவர் பெற்றுத்தந்த உரிமைகளின் அடிச்சுவட்டை மேலும் கட்டியெழுப்புவதற்காகவே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் எமது பயணத்தைத் தொடர்ந்து வருகின்றோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்ட மக்கள் இதை நன்கு உணர்வார்கள். நாம் மென்மேலும் பெறவேண்டிய இன்னும் பல அடிப்படை உரிமைகளையும், சலுகைகளையும் இன்னும் பிற வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டி இருக்கின்றோம். எமது கட்டுக்கோப்பான ஐக்கியப்பாட்டின் மூலமாகவே இவற்றை எம்மால் அடைய முடியும். அரசில் நாம் இணைந்திருக்கின்றோம். எமது குரலைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் எமக்குண்டு.

அதனால் மாகாண சபைகளிலும், பிரதேச சபைகளிலும், தேர்தல் தொகுதிகளிலும் எமது மக்களின் கட்டுக்கோப்பை தொடர்ந்து நாம் பாதுகாக்கவேண்டும். இதன் பொருட்டே பதுளை மாவட்டத்தில் இ.தொ.கா. தனது வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிடுகிறது. எமது முயற்சியைத் தவிடுபொடியாக்குவதற்கு சில தீயசக்திகள் திட்டமிட்டு வருகின்றன. அபாண்டமான பொய்களையும், சூழ்ச்சிகளையும் தந்திரோபாயங்களையும் கட்டவிழ்த்து எமக்கிடையே கலவரங்களை உண்டுபண்ணி சுயலாபம் தேட இச்சக்திகள் முனைந்துவிட்டன.

எனவே, எமது மக்கள் தோதலில் இவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நாம் அனைவரும் ஒருங்கிணைந்து தீய சக்திகளுக்கு பாடம் புகட்டுவோம் - என்று உள்ளது. (ளி)

பாரம் உயர்த்தியிலிருந்து வீழ்ந்த கட்டத்தொழிலாளி உயிரிழப்பு

பதுளை,மார்ச் 16

பதுளை தெமோதர பிரதேசத்தில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றின் நிர்மாண வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, 40 அடி உயரத்தில் பாரமுயர்த்தியொன்றில் இருந்து வேலை செய்துகொண்டிந்தபோது தவறி வீழ்ந்த கட்டடத்தொழிலாளர்கள் மூவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றுமிருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி பதுளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

55 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பாரமுயர்த்தி மூலம் 40 அடி உயரத்தில் கருங்கல் எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.பீ. பண்டாரவின் தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ளி)

வினாத்தாள் திருடியவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச் 16

தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் இடம்பெறவிருந்த இறுதியாண்டுப் பரீட்சை வினாத்தாள்களை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பண்டாரவளை கல்வியியற் கல்லூரியின் 33 ஆசிரிய பயிலுநர்களை எதிர்வரும் 17 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள் மோசடி தொடர்பில் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் கடந்த புதன்கிழமை பண்டாரவளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த 33 பேரும் அடையாள அணிவகுப்பொன்றுக்கும் உட்படுத்தப்பட்டனர். இவர்களில் பத்துப்பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நீதிபதி ஏ.எம்.என் பி. அமரசிங்க, 33 பேரையும் 17 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஆசிரிய பயிலுநர்கள் சார்பில் சட்டத்தரணிகளாக சன்ஜீவ விஜேசேகர, ஆர். விஸ்வநாத் குலதுங்க ஆகியோரும் பண்டாரவளை பொலிஸார் சார்பில் இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.எஸ்.பி. பண்டாரவும் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர். (ளி)

தந்தையைத் பொல்லால் தாக்கி கொலைசெய்து புதைத்த மகன் தலைமறைவு; மருமகன் கைது

பொகவந்தலவை லொயினேன் தோட்டத்தில் பரபரப்பு

கண்டி, மார்ச்16

பொகவந்தலவை லொயினேன் தோட்டத்தில் தனது தந்தையைத் தாக்கி கொலை செய்தார் எனக் கருதப்படும் நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்றும் கொலைக்கு உடந்தையாகவிருந்தார் என்ற சந்தேகத்தில் கொலையுண்டவரின் மருமகன் முறையான ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொகவந்தலாவை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

உயிரிழந்தவருக்கும் அவரது மகனுக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் மகன் தனது தந்தையின் தலையில் பொல்லால் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை அவரது மகனும், மருமகனுமாக இணைந்து வேறொரு இடத்தில் புதைத்துவிட்டு அதன்மீது கற்பாறைகளை நகர்த்தி வைத்துள்ளனர்.

எனினும், குறித்த இடத்தில் இரத்தக் கறைகள் காணப்பட்டதை அவதானித்த தோட்ட மக்கள் விடயம் குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை தோண்டி எடுத்ததுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.தலைமறைவான நபரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ளி)

ஹப்புத்தளை - பிளக்வூட் டிவிஷனில் இளம் தமிழ்ப்பெண் சுட்டுக்கொலை

சந்தேகநபர் துப்பாக்கியுடன் தலைமறைவு

ஹப்புத்தளை, மார்ச் 16

ஹப்புத்தளை தங்கமலைத் தோட்ட பிளக்வூட் டிவிஷனைச் சேர்ந்த இளம்பெண் ணொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 10ஆம் திகதி இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொலையுண்டவர் பிளக்வூட் தேத்தோட்டம் டிவிஷனைச் சேர்ந்த எம். தனலட்சுமி (வயது - 32) என்பவராவார்.

இவர் மூன்று மாதக் கைக்குழந்தை ஒன்றின் தாய் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலையுண்ட பெண் குடியிருக்கும் லயன், கிராமத்தை அண்டியே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவதினமிரவு குறித்த பெண் வீட்டிலிருந்தவேளை அங்கு புகுந்த ராஜபக்ஷ முதியான் சலாகே அமரசேகர அல்லது குணபால (வயது - 55) என்ற நபர் தனலெட்சுமியை நோக்கி கல்கட்டஸ் துப்பாக்கியால் மார்பில் சுட்டார் என்றும், அதனையடுத்து அப்பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது.

அப்போது சந்தேகநபர், வீட்டிலிருந்த இறந்தவரின் தாயையும் மற்றும் ஒருவரையும் சுட்டுக் கொல்ல முயற்சித்தார் என்றும், தெய்வாதீனமாக அவர்கள் உயிர்தப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தையடுத்து, பிளக்வூட் தோட்ட மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

பண்டாரவளை நீதிமன்ற பதில் நீதிவான் பஸநாயக்க சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுடார்.

ஹப்புத்தளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியங்ககுமார மற்றும் குற்றத்தடயவியல் தடுப்பு பொறுப்பதிகாரி பண்டார ஆகியோர் தலைமையில் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

சம்பவத்தையடுத்து தலைமறைவான சந்தேகநபர் தொடர்பான நீதிமன்ற வாழக் கொன்றில், உயிரிழந்த பெண் பிரதான சாட்சியாக இருந்துள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ளி)

மலையக மக்கள் சக்தியை நம்பியே தேர்தல் களத்தில் இறங்கினோம்

ம.ம. முன்னணித் தலைவி சாந்தினிதேவி தெரிவிப்பு

நுவரெலியா, மார்ச் 16

மலையகத்தின் மக்கள் சக்தியை நம்பியே எதிர்வரும் பொதுத்தேர்தலில் மலையக மக்கள் முன்னணி களமிறங்கியுள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவியும், நுவரெலியா மாட்ட வேட்பாளருமான திருமதி சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்தார்.

சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி யொழிப்பு அமைச்சின் மூலம் பொகவந்தலாவைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தர்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையகத்திலுள்ள சகல அமைப்புகளையும் சமமாகக் கௌரவிக்கும் மலையக மக்கள் முன்னணியானது மலையகத் தமிழ் மக்களின் நலன்கருதி செயற்பட்டு வரும் ஒரு அமைப்பாகும்.

இதற்கேற்ப நாம் இந்தப்பொதுத் தேர்தலில் தனித்துவத்துடன் களமிறங்கியுள்ளோம். அதன் காரணமாக மலையகத்திலுள்ள சகலரும் ஒன்றிணைந்து எமக்கு வாக்களிப்பதன் மூலம் மலையகத்தின் தனித்துவத்தைப் பேணமுடியும்.

அதேவேளை, நாம் அரசுடனும் இணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படுகின்ற போதுதான் எமது சமூகத்துக்குத் தேவையான விடயங்களைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

இதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு எமது சக்தியை இந்தத் தேர்தலில் நாம் வெளிப்படுத்த வேண்டும். எனவே, மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்கு அனைவரும் பேராதரவு நல்கவேண்டும் - என்றார். (ளி)

பிரதியமைச்சர் சுரேஷின் உருவபொம்மை எரிப்பு

பதுளையிலும் பண்டாரவளையிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுக்காலை மஸ்கெலியா சாமிமலைத் தோட்டத்தில் இடம்பெற்ற கண்டனக் கூட்டத்தில் பிரதி சுகாதார அமைச்சரும் பெருந்தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான வடிவேல் சுரேஷின் உருவபொம்மை எரிக்கப்பட்டது.

சாமிமலை கவரகல தோட்ட மைதானத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ளி)



நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளராக நியமனம் பெற்ற ஆர். யோகராஜன் அதற்கான நியமனப் பத்திரத்தை கட்சியின் தலைமைத்துவ நிலையம் சிறிகோத்தாவில் வைத்து தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெறுகின்றமையையும் அருகில் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்

குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள். நீண்ட நாள் களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்குச் செல்லலாம். தந்தை வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். புத்தி சாலித்தனம் மேம் படும்.

இடபம்

நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல விடயம் ஒன்று நடக்கலாம். எதையும் ஒன்றுக்குப் பலமுறை யோசித்துச் செய்வீர்கள். பிள்ளைக ளுக்கு நல்ல ஆலோசனைகள் சொல்லி அவர்களை ஊக்கப்படுத் துவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். தொட்ட காரியங்கள் துளிர்விட்டு வளரும் நாள். புதியவர் நட்புக் கிடைக்கும்.

மிதுனம்

ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். பொன், பொருள் வாங்கும் திட்டம் தள்ளிப் போகலாம். உறவி னர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்டு நச்சரிக்கலாம். உங்களின் மீது உண்மையான அன்பு கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். நீங் கள் செய்யும் வேலை ஒன்றால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

கடகம்

சிலரின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். குடும்பப் பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்கள் சிலர் உங்களை எங்காவது வரச் சொல்லிவிட்டு அவர்கள் வராமல் கடைசி நேரத்தில் காலை வாரலாம். பணிபுரிவோர் மறைமுக எதிர்ப்புகளைச் சந் திக்கலாம். மறதியால் அவதியுண்டு.

சிங்கம்

உறவுப் பெண்கள் வழியில் அனுகூலமான உதவி பெறலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்வதாலோ, வேறு வேலைகள் காரண மாகவோ, சில வேலைகளை முன்பே முடிக்கலாம். உங்கள் யோச னைக்கு சக ஊழியர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். ஊக்கம், உற் சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். வெற்றிகரமான நாள்.

கன்னி

வீண் பழிகள், சிரமங்கள் விலகிப் பாராட்டு பெறுவீர்கள். சூழ்ச்சியாக செயற்படும் சிலரைக் கண்டுபிடித்து ஒதுங்கிக் கொள் வீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். நீண்ட நாள் களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் பேசலாம்.

துலாம்

அவசரப்பட்டு எதிலும் இறங்காமல் யோசித்துச் செயற்பட வேண் டிய நாள். பெண்கள் வழியில் சில பிரச்சினைகள் உருவாகலாம். பொது விடயங்களில் தலையிட வேண்டாம். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பான முடிவுக்கு வரும்.

விருச்சிகம்

மதிப்பு, கௌரவம் மேம்படும். மற்றவர்களின் எண்ணங்களை அறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட முற்படுவீர்கள். உறவினர் கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். குடும்பச் செலவுகள் அதி கரிக்கும். பெரிய அளவில் மனக்கோட்டை கட்டிக்கொண்டு எந்த வேலையிலும் இறங்க வேண்டாம். தாய் வழியில் அன்புத் தொல்லை யுண்டு.

தனுசு

உறவினர்கள் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள். கைமாத் தாக வாங்கிய பணத்தை திருப்பக் கொடுக்கலாம். சில விடயங் களில் சாதுர்யமாக செயல்படுவதன் மூலம் இரட்டிப்பு ஆதாயம் பெறுவீர்கள். உடன் பணிபுரிவோர் அனுசரணையாக நடந்துகொள் வீர்கள். செலவில்லாமல் சில வேலைகளை முடிப்பீர்கள்

மகரம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் ஓய்வெடுக்கலாம். தின் பண்டங்கள், வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கிக் கொடுப் பீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப் படலாம். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் யோசனை கேட்க லாம்.

கும்பம்

மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். திட்டமிட்ட வேலைகளைச் சுணக்கமின்றி, சுறுசுறுப்பாக முடிப்பீர்கள். உறவினர்கள் கேட்ட உதவிகளை செய்யாமல், சாக்குப்போக்குப் பேசி தவிர்த்து விடு வீர்கள். வாகனங்களை, ஆபத்தான பொருள்களைக் கையாளும் போது கவனம் அவசியம்.

மீனம்

தொலைபேசி வழியில் முக்கியமான தகவல்கள் வரலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். பெற்றோர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். மாற்று மொழி பேசும் நண்பர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பலமுறை அலைய நேரிடலாம். தடை, தாமதம் ஏற்படலாம்.

இரா.சம்பந்தருக்கும் கஜேந்திரகுமாருக்கும்.....

நேற்றைய உதயனில் 14ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இன்று இங்கு தரப்படுகின்றது. தவறுதலாக அது நேற்று இடம்பெறாமல் போனமைக்காக வருந்துகிறோம் (ஆ-ர்)

இறக்கியிருக்கின்றீர்கள். இதனால் திருகோணமலையின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது. நமக்கு மூக் குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என்று எண் ணுவது நமதுஅரசியலுக்கு உகந்தது அல்ல. ஏனென்றால் நமக்கு நாமே எதிரியாக முடியாது.

இதனால் பாதிக்கப்படப் போவது நமது மக்களே அல்லாமல் முரண்பட்டு நிற்கும் சம்பந்தரோ நீங்களோ அல்லர்.

வேண்டுமானால் சம்பந்தருக்கு அவமானமும் உங்களுக்கு சந்தோசமும் ஏற்படலாம். ஆனால், அரசியல் அர்த்தத்தில் இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமா னவை. இன்று - இரா.சம்பந்தரை அவரது தாய் மாவட்டமான திருகோணமலையில் தோற்கடிப்பதற்காக திரைமறைவில் ஒரு சதிமுயற்சி இடம்பெறுவதாகவே தெரிகிறது. அரசு அவரது தோல்வியை விரும்புகிறது. ஒருவரது தோல்வியை அரசு விரும்புகிறது என்றால் அதன் சாணக்கிய நிகழ்ச்சி நிரல் வேறு ஒன்றாகும்.இதனை உங்களால் எந்தளவு தூரம் விளங்கிக் கொள்ள முடிந்தது? ஓர் அரசியல் அவதானி என்ற வகையிலும், தமிழ்த் தேசிய அரசியலை அதன் உள்ளார்ந்த அம்சங் களுடன் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதில் கரிசனை கொண்டவன் என்ற வகையிலும் - இது குறித்து எனது அவதானங்களை உங்களுக்கு சொல்ல வேண்டியிருக்கிறது.

இரா.சம்பந்தர் என்ற ஒரு தனி நபரைத் தோற்கடிப்பதன் பின்னாலுள்ள சிங்கள இராஜதந்திர நிகழ்ச்சி நிரல் என்ன?

சிங்கள சாணக்கியம் இதன் மூலம் மூன்று விடயங்களை குறிவைக்கின்றது. ஒன்று - சர்வதேச ரீதியாக ஈழத் தமிழ் மக்களின் ஜனநாயகத் தலைமைக்குரிய சகல தகுதிகளையும் கொண்ட ஒருவராகக் கருதப்படும் இரா.சம்பந்தரை அவரது மாவட்டத்திலேயே தோற்கடிப்பதன் மூலம் அவரது அரசியல் தலைமைத்துவத் தகுதியை இல்லாமல் செய்தல். சொந்த மக்களாலேயே நிராகரிக்கப்பட்ட ஒருவர் அந்த மக்களின் அரசியல் அவா குறித்து எவ்வாறு அரசுடனும் அனைத்துல கத்துடனும் பேச முடியும்?

இரண்டு - இணைந்த வடக்கு-கிழக்கு என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர் சம்பந்தர் என்ற வகையில் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கி லேயே அவரைத் தோற்கடிப்பதன் மூலம் அந்த நிலைப்பாட்டை ஜனநாயக அரசிய லைக் கொண்டே பலவீனப்படுத்துவது.

அதே வேளை - இன்றைய சூழலில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தலைவராக இரா. சம்பந்தரே இருக்கிறார். வடக்கு-கிழக்கின் இணைப்புப் பற்றி அக்கறை கொள்ளும் நாம் வடக்கு-கிழக்கு என்பது மனங்களால் இன்னும் இணைக்கப்படவில்லை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

சம்பந்தர் தோற்கடிக்கப்படுமிடத்து வடக்கினையும் கிழக்கினையும் அரசியல் அர்த்தத்தில் இணைப்பதற்கான வாதம் அதன் உள்ளார்ந்த அம்சத்தை இழந்து போகும். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பு திருமலையில் முற்றிலும் சிங்கள வேட்பாளர்களை இறக்கியிருப்பதும் இந்தப் பின்புலத்தைக் கருத்தில் கொண்டு தான்.

மூன்று - தமிழரின் எதிர்ப்பு அரசியலை வடக்கு மற்றும் கிழக்கு என இரு வேறாக்கி நிரந்தரப்படுத்துவது. இணைந்த வடக்கு-கிழக்கு மாநிலம் என்பது தமிழ்த் தேசியத்தின் புவியியல் பலமாகும்.

எனவே தமிழ்த் தேசிய வாதம் அதன் பிரதான பலமாக இருக்கும் புவியியல் அடிப்படையில் சிதைக்கப்படுமாயின், அது அதன் பின்னர் வெறுமனே ஓர் அரசியல் சூத்திரமாகவே உயிர் வாழ முடியும்.

ஒரு கட்டமைப்பிற்கான பின்பலமற்ற அரசியல் நிலைப்பாடுகள் அனைத்தும் ஆசுவாசப்படும் கற்பனைகளாக இருக்க முடியுமே தவிர செயலுக்கான உயிர்ச் சக்தியாக இருக்க முடியாது. அது அமெரிக்காவில் கம்யூனிஸம் பற்றி பேசுவது போன்றது.

ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்பின் அணுகுமுறையை அவதானித்து வந்தவன் என்ற வகையில் அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். புதியவர்களை உள்வாங்குவதில் நீங்கள் காட்டிய தயக்கம் - குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு இடம்கொடுப்பதில் வெளிப்படுத்திய அசட்டைத்தனம், முதிர்ச்சியான அரசியல் அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க முடியாத அளவிற்கான அவசரம் போன்ற பல குறைபாடுகள் இருந்தமையைக் காண முடிந்தது.

ஆனாலும் - அந்தக் குறைபாடுகளையும் கடந்து செயலாற்ற வேண்டிய வரலாற்றுக் கடப்பாடு பற்றியே நான் இங்கு சுட்டிக் காட்ட முயற்சிக்கின்றேன்.குறைபாடுகளை நிதானத்துடனும் அணுகி ஆக்கபூர்வமாகச் செயலாற்றுவதற்கான சிந்திப்பே இப்போதைய தேவை.அதற்கான முன்னோட்டமாக உடன் நிறைவேற்ற வேண்டிய விடயங்களாவன:-

* மேலும் முரண்பாடுகளை வளர்க்கும் வகையில் செயற்படாமல் தேர்தலுக்கு பின்னர் அனைவரையும் ஓரணியில் நிறுத்தும் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் வகையில் சிந்திப்பது.அதற்கான வழிமுறைகளில் கவனம் கொள்ளுவது.
* ஒருவரை ஒருவர் எதிரியாக கருதுவது போன்ற விமர்சனங்களைத் தவிர்த்துக் கொள்வது.
* தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்தும் வகையிலான கொள்கை நிலைப்பட்ட பிரசாரங்களை முன்னெடுப்பது.
* எதிர்கால பொறிமுறை ஒன்றை கருத்தில் கொண்டு - தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் பொருட்டு - த. தே. ம. மு. திருகோணமலை தேர்தல் களத்திலிருந்து விலகிக் கொள்வது.

அரசியலில் சந்தர்ப்பங்களைத் தவற விடுவோமாயின் மீண்டும் அடுத்த சந்தர்ப்பம் வரும் வரை அனாதாரவான நிலைக்கே தள்ளப்படுவோம்.

க.வே.பாலகுமாரன் தனது கட்டுரைக ளில் ஜேர்மனிய சிந்தனையாளரான ஜோர்ஜ் சந்நயனாவின் வாசகம் ஒன்றை அடிக்கடி பயன்படுத்துவார்.

'வரலாற்றின் தவறுகளை மறப்போர் அந்த தவறுகளை மீளவும் செய்யச் சபிக்கப்பட்டவர்களாவர்.' தொடரும் சிங்களத்தின் கடும்போக்கு நிலைப் பாடுகளை விமர்சிக்கும் நோக்கிலேயே அவர் இந்த கூற்றை பயன்படுத்துவார்; ஆனால், இறுதியில் அதற்கு உதாரணமாக ஆகியவர்கள் நாமே தவிர சிங்களம் அல்லர். இந்த வாசகம் இன்று தமிழ்த் தேசியத் தலைமைத்துவத்தை பொறுப்பெடுத்திருப்பவர்களாக கருதும் உங்கள் அனைவரது தலையின் மேலும் தொங்கிக் கொண்டிருக்கிறது. அது எப்போதும் உங்களை நோக்கி ஒரு பாறாங்கல்லாக விழலாம். ✱

மனிதர் வெறுக்கலாம் ஆனால் ஆண்டவர் அணைப்பார்

ஒரு முறை பணக்காரன் ஒருவன் இயேசுவை விருந்திற்கு அழைத்திருந்தான். அவனுடைய பெயர் சீமோன். அவனது வீட்டில் விருந்து நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் பட்டணத்தில் பாவி என்று பெயர் வாங்கிக் கொண்டிருந்த பெண் ணொருத்தி வீட்டுக்குள் நுழைந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து கண்ணீர் சிந்தி னாள். தன்னுடைய மனப்பாரங்களை அவருடைய பாதத்தில் இறக்கினாள்.தனது கண்ணீரால் இயேசுவின் பாதத்தை நனைத்து வார்த்தைகளால் பேசாமல் தன்னுடைய மனதில் இருந்தவற்றை இயேசுவிற்கு உணர்த்தினாள்.

இயேசுவே! பாவி என்னை மன்னியும். நான் உம்மை விட்டு வெகுதூரம் போய் விட்டேன். என்னால் தாங்க முடியவில்லை. இப்பொழுது நான் திரும்பி வந்திருக்கிறேன். ஆண்டவரே என்னை மன்னியும். நீர் ஒருவரே எனக்குப் போதும். இந்த உலகத்தை நம்பி ஏமாந்து போனேன். என் உடல் இச்சைகளுக்கு இடம்கொடுத்து என்னையே இழந்து போனேன். உம்முடைய பரிசுத்த ஆவியைப் புறக்கணித்தேன். என்னை மன்னியும். என்னிடம் பேசுவதற்கு வார்த் தைகள் இல்லை என்று சொல் வது போல் அவளது கண்ணீர் பேசியது. இயேசு அவளது உள் ளத்தை ஊடுருவிப் பார்த்தார்.



தவக்காலச் சிந்தனை



அவளை ஏற்றுக் கொண்டார். '' மகளே உன் பாவம் மன்னிக்கப்பட்டது'' (லூக் 7:48) என்று இயேசு அவளோடு பேசினார்.

சீமோனும் அவரோடு இருந்தவர்களும் அவளைப் பாவி என்று ஒதுக்கியிருந்தனர். ஆனால் இயேசுவோ அவளை ஏற்றுக்கொள்கிறார். தன் பாவங்களுக்காக வருந்தி மன திருந்தி இயேசுவிடம் வருகின்றவர்களை இயேசு எந்தவித நிபந்தனையுமில் லாமல் ஏற்றுக் கொள்கின்றார், அணைத்துக் கொள்ளுகின்றார், சமுதாயம் பாவி என்று அவர் களைப் பகைத்தாலும், ஒதுக்கிவைத்தாலும் இயேசுவோ சமுதாய மதில்களைத் தாண்டி தனது சொல்லாலே அந்தச் சுவர்களை உடைத்துப் பாவிகளை மீட்டுக் கொள்ளுகின் றார். ''இறைவனின் வழி நிறைவானது. ஆண்டவரின் வாக்கு நம்பத்தக்கது. அவரி டம் அடைக்கலம் [illegible]கும் அனைவருக்கும் அவரே கேடயம்'' (தி.பா 18:30)

அருட்தந்தை வி. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிபோகும் தமிழ், தாயகம்

வடக்கு, கிழக்கு, தமிழர் தாயகம். அது தமிழர்களின் கைகளில் இருக் கிறது என நம்பிக்கொண்டிருக்கிறோம். தமிழர் கள் ஆண்ட பூமி என சொல்லிக் கொண் டிருக்கிறோம். மேற்குலக நாடுகளில் வாழும் பெரும்பாலான தமிழர்கள் வடக்கு, கிழக்கு இன்னமும் தமிழர் பிரதேச மாக



இருக்கிறது என நம்பிக்கொண் டிருக்கின்றனர். தமிழர் பிரதேசங்கள் தமிழர்களின் கையை விட்டு போய்க்கொண் டிருக்கின்றன. என்பதை உணராத நிலை யில் தானே எங்களில் பலர் கனவுகளி லும் - கற்பனைகளிலும் மிதந்து கொண்டி ருக்கிறோம்.....?

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுக ளின் பின்னர் இலங்கை வரை படத்தில் சரத் பொன்சேகா வெற்றி பெற்ற பிரதே சங்களை பச்சை நிறத்திலும், மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்ற இடங்களை சிவப்பு நிறத்திலும் அடையாளம் இட்டுக் காட்டியிருந்தார்கள்.

பச்சை நிறம் தீட்டப்பட்ட பகுதிகள் அனைத்தும தமிழர் தாயகம் என்றுஎங் களில் பலர் பெருமைப் பட்டுக் கொண் டோம். அதற்கு ஒரு படி மேலே சென்ற சிலர் பச்சை நிறம் தீட்டப்பட்ட இடங் களை உள்ளடக் கியதே தமிழீழம என் றும் பெருமை பேசிக்கொண்டோம்.

அப்போது வெளியான வரைபடத் தில் பச்சை வர்ணம் தீட்டப்பட்டுக் காட்டப் பட்டிருந்த வடக்குக் கிழக்கு பிரதேசத் தின் பெரும் பகுதிகள் இன்று தமிழர் களின் கைகளில் இல்லை என்பதை எங்க ளில் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்?

மின்னாமல் முழங்காமல் தமிழர் பிர தேசங்கள் அபகரிக்கப்பட்டு வருகிறன என்பதையும் அந்த இடங்களில் தமிழர் கள் இனிமேல் கால் வைக்க முடியாத வாறான கட்டமைப்புகள் சிங்களவர்க ளால் உருவாக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா?

வடக்குக்கிழக்கு தமிழர் தாயகம், அந்த தமிழீழத்தை அடைந்தே தீருவோம். தமிழீழம் இல்லை என்றால் ஒரு துளி மண்ணும் வேண்டாம் என - நாங்கள் மேற்குலக நாடுகளில் இருந்து வீரவச னம் பேசிக்கொண்டிருக்கும் போது, எங்கள் முற்றங்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கப்பட்டு வருகின்ற னவே. இந்த யதார்த்தங்களையும் புரிந்து கொண்டு செயற்படுங்கள் என்றுதான் நாங்கள் உங்களை மன்றாட்டமாகக் கேட்டு வருகிறோம்.

இதைச் சொல்லி வரும் துரைரத்தினம், நிராஜ் டேவிட் ஆகியோர் சமபந்தரின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகிறார் கள் என்று குற்றம் சாட்டுபவர்களும் உண்டு. சம்பந்தரின் நிகழ்சிநிரல் என்று ஒரு மண்ணாங்கட்டியும் எங்களிடம் இல்லை. எங்களின் நோக்கம் ஒன்றுதான். எங்கள் மண் பறிபோவதை தடுக்க வேண் டும். தமிழர் தாயகம் என்று நாங்கள் சொல் லும் இடங்களில் தமிழர் பிரதிநிதித் துவம் காக்கப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த நோக்க மும் எங்களிடம் இல்லை. வேறு நோக்கங்களில் செயற்பட வேண்டிய அவசியமும் எமக்கு இல்லை.

தமிழர் பிரதேசங்களில் தமிழர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதும் அவ்வாறு தெரிவு செய்யப்படும் தமிழர் கள், சிங்களப் பேரினவாத அரசுக்கு கைகட்டி சேவகம் செய்பவர்களாக இல்லாமல், தமிழர்களின் உரிமையை நிலை நிறுத்தக்கூடிய தமிழர்களாக இருக்க வேண்டும் என்பதுமே எமது நோக்கம். அந் தத் தமிழர்கள் சம்பந்தராகவும் இருக்கலாம். அல்லது எந்தக் கந்தப்பராகவும் இருக்கலாம்.

தமிழீழம்தான் என்ற உறுதியோடு இருக்கும்போது வடக்குக் கிழக்குப் பிரதேசம் எங்கள் கைகளில் இல்லை என எங்கள் உணர்வுகளை மழுங்கடிக் கப் பார்க்கிறீர்களே - எங்கள் கனவுகளை கலைக்கப்பார்க்கிறீர்களே - என்று வெளி நாடுகளில் உள்ள ஒரு சிலர் என் மீது ஏவுகணை வீசு வீர்கள் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் அந்தக் கனவுகளுடன் மட்டும் என்னைப்போன்ற ஊடகவி யலா ளர்களால் வாழமுடியாது என்பதால் தான் யதார்த்தங்களையும் இடைக்கி டையே சொல்ல விழைகிறோம்.

முதலில் கிழக்கு மாகாணம் தமிழர் களின் கைகளில் இருக்கிறதா என்ப தைப் பார்ப்போம். கடந்த முறை எழுதிய கட்டு ரையில் தமிழர் பிரதேசம் எனச் சொல்லு கின்ற பிரதேசம் தமிழர்களின் கைகளில் இருக்கிறதா? எனக் கேட்டிருந்தேன்.

திருகோணமலை

புள்ளிவிவரத் திணைக்களத்தின் விவரங்களின்படி திருகோணமலை மாவட் டத்தின் சனத்தொகை இனவிகி தாசார ரீதி யில் எவ்வாறு மாற்ற மடைந்து சென்றிருக் கிறது என்பதையும் இனி பார்ப்போம்.

1932ஆம் ஆண்டிலிருந்து சிங்கள வர்கள் கிழக்கு நோக்கிய நகர்வு களை மேற் கொள்ள ஆரம்பித்தனர். கல்லோயா திட்டம் முதல் 1977இல் ஆரம்பிக்கப் பட்ட துரித மகாவலி அபி விருத்தித் திட் டம்வரை கிழக்கு மாகா ணத்தில் சிங்க ளக் குடியேற்றங்களை இலக்கு வைத்து 24 குடியேற்றத் திட்டங்கள் இலங்கை அரசு களால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

1950ஆம் ஆண்டுகளின் பின்னர் தமிழர்கள் வடக்குக் கிழக்குப் பிர தேசங்களை இணைத்து தமது அரசியல் நகர்வுகளையும், அதன் பின்னர் வட கிழக்கு இணைந்த சுயாட்சிக் கோரிக்கை யையும் முன்வைத்து போராட ஆரம்பித் தனர். அப்போது சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கையும் கிழக்கையும் துண்டாடி கிழக்கை முழுமையாக சிங்கள மயப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தைத் துரிதப்ப டுத்த ஆரம்பித்தனர்.

சிங்களவர்களின் இந்த நகர்வை உணர்ந்து கொண்ட இலங்கை தமிழ ரசுக் கட்சி 1952ஆம் ஆண்டில் திரு கோணமலையில் தனது மாநாட்டை நடத்தியது. அத்துடன் அந்த மாநாட் டில் திருகோணமலையைத் தமிழர்களின் தலை நகராகவும் பிரகடனம் செய்தது.

திருகோணமலை தமது தலைநகர் என தமிழர்கள் பெருமையாகப் பேசிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் திருகோண மலையை தமது வசப்படுத்துவதற்காக சிங்கள தேசம் பாரிய செயற்றிட்டங் களை மேற்கொள்ள ஆரம்பித்தது.

கந்தளாய், கல்லோயா, மகாஓயா, தீகவா பித் திட்டங்களை உருவாக்கி திருகோண மலை, அம்பாறை மாவட்டங்களில் சிங் களக் குடியேற்றங்களை உருவாக்கினர்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடி யேற்றங்களை உருவாக்கிய அதேவேளை, சிங்களவர்களின் சனத்தொகை கிழக்கில் அதிகரிக்கும் வகையில் திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லை களிலும் மாற்றங்களையும் உருவாக்கினர்.

மட்டக்களப்பு மாவட்டம் எவ்வாறு பிரிக்கப்பட்டு திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டம் உருவாக்கப்பட்டது என்ப தைப் பின்னர் பார்ப்போம்.

திருகோணமலை மாவட்டம் முல் லைத்தீவு மாவட்டத்தின் கிழக்கு எல்லை யான தென்னமரவாடியிலிருந்து மட்டக் களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லை யான வெருகல் ஆறு வரையான நீண்ட கரையோரப் பிரதேசமாகும். இதன் தெற்கு எல்லையாக அனுராதபுரம், பொலன்ன றுவை மாவட்டங்கள் உள்ளன.

1827ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் 250 சிங்களவர்கள் மட் டுமே வாழ்ந்தனர். அப்போது தமிழர்கள் 15 ஆயிரத்து 663பேராகவும், முஸ்லிம்கள் 3 ஆயிரத்து 245 பேராகவும் காணப்பட்ட னர். இம் மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் தமிழர்கள் 81.76 வீதமாகவும், முஸ்லிம்கள் 16.9 வீதமாகவும், சிங்கள வர்கள் 1.3 வீதமாகவும் காணப்பட்டனர்.

1921ஆம் ஆண்டில் தமிழர்களின் சனத்தொகை 54.4 வீதமாக வீழ்ச்சி யடைந்த அதேவேளை, முஸ்லிம்க ளின் சனத்தொகை 37.6 வீதமாகவும், சிங்க ளவர்களின் சனத்தொகை 4.4 வீதமாக வும் உயர்வடைந்திருந்தது.

1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை முடிவுகள் சிங்களக் குடி யேற்றம் மற்றும் முஸ்லிம்களின் சனத் தொகை அதிகரிப்பு என்பனவற்றை தெளிவாகக்காட்டியிருக்கிறது. அந்த ஆண்டின் குடித்தொகை மதிப்பீட்டின்படி திருமலை மாவட் டத்தில் தமிழர்கள் (71 ஆயிரத்து 749 பேர்) 38.1 வீதமாகவும் முஸ்லிம்கள் (59 ஆயிரத்து 924 பேர்) 31.8 வீத மாகவும், சிங்களவர்கள் (54 ஆயிரத்து 744 பேர்) 29.08 வீதமாகவும் காணப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 1.3 வீதமாக இருந்த சிங்களவர்கள் கடந்த ஆண்டில் குடித்தொகை மதிப்பீட்டின் படி 30 வீதமாகவும், 16 வீதமாக இருந்த முஸ்லிம்கள் 46.5 வீதமாகவும் உயர்வ டைந்திருக்கிறார்கள். 81.76 வீதமாக இருந்த தமிழர்கள் 23.5 வீதமாக வீழ்ச்சி



யடைந்திருக்கிறார்கள்.

இந்த விவரங்களைப் பார்க்கும் உங்க ளுக்கு திருகோணமலை மாவட் டத்தில் பெரும்பான்மை இனமாக இருந்த தமிழர் கள் இன்று மூன்றாவது நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

யுத்தம் காரணமாகவும் திருகோண மலை மாவட்டத்திலிருந்து தமிழர்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாகவும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. யுத்த அழிவுகளால் ஏற்பட்ட இறப்புவீத அதிகரிப்பும் தமிழர் களின் சனத் தொகை வீழ்ச்சிக்கு மற்று மொரு காரணமாகும்.

உலகில் முஸ்லிம்களின் சனத் தொகை சிறுக்கத்தைபோலவே கிழக்கு மாகா ணத்திலும் அவர்களின் சனத்தொகை வீதம் ஏனைய இனங்களை விட அதி கரித்து வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் பெரும் பான்மையாக இருந்த தமிழர்கள் இப் போது மூன்றாவது இடத்திற்கு வந்தி ருக்கிறார்கள். தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்கள் இப்போது சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டு அப்பிரதே சங்களுக்கு சிங்களப் பெயர்களும் சூட் டப்பட்டிருக்கின்றன.



சனத்தொகையில் மட்டுமல்ல, நிலப் பரப்பைக்கூட தமிழர்கள் திருகோண மலையில் இழந்துவிட்டார்கள். 2,728 சதுரகிலோ மீற்றரைக் கொண்ட திரு கோணமலை மாவட்டத்தில் 346 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில்தான் தற் போது தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். திருகோணமலை மற்றும் ஈச்சிலம்பற்று, வெருகல் ஆகிய இடங்களை உள்ளடக் கிய இந்த 346 சதுர கிலோமீற்றர் பிர தேசத்திற்குள்ளும் தற்போது சிங்களவர் களின் தொகை அதிகரித்து வருகிறது.

பூர்வீக தமிழ்ப் பிரதேசங்களான கந்த ளாய், கிண்ணியா, குச்சவெளி, தம்பல காமம் பகுதிகள் இப்பொழுது முற்றுமுழு தான சிங்களப் பிரதேசங்களாக மாற்றப் பட்டுவிட்டன. அந்தப் பிரதேசத்தில் உள்ள சுமார் 240 தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற் றப்பட்டிருக்கின்றன. இதுதான் எமது தமிழீழத் தலைநகரின் இன்றைய நிலை.

மட்டக்களப்பு

அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தை பார்ப்போம்.

வெருகல் தொடக்கம் பாணமை வரையான பிரதேசங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டி ருந்த போதிலும், 1961ஆம் ஆண்டு நாவிதன்வெளி, சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, இறக்காமம், அக்க ரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோ வில், பொத்துவில் ஆகிய பிரதேச செய லகப்பிரிவுகளை மட்டக்களப்பு மாவட் டத்திலிருந்து பிரித்து மொனறாகலை, பதுளை, மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேச செயலகப் பிரிவுகளை

இரா.துரைரத்தினம்

யும் இணைத்து திகாமடுல்ல மாவட் டம் (அம்பாறை) உருவாக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தை சிங்கள மயப் படுத்தும் திட்டத்துடனேயே திகாமடுல்ல மாவட்டம் உருவாக்கப்பட்டது.

அதேபோன்று, மட்டக்களப்பு மாவட் டத்தின் வடக்குப் பக்கமாக உள்ள மன் னம்பிட்டி உட்பட பல தமிழ் கிராமங்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டு பின்னர் அவை பொலன்னறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர அளவையியல்

சேர் ஐசாக் நியூட்டன் (கி.பி 1642 - 1727)

1642 இல் இங்கிலாந்தில் உள்ள வூல்த் தோப்பில் பிறந்த நியூட்டன் கணிதம், பௌதிகம், வானியல் போன்ற துறைகளில் பல அரிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி அத்துறைகளின் வளர்ச்சிக்கு உதவியதுடன் தற்கால விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கும் வழிகோலினார்.

* நியூட்டனுக்கு முன்னர் விஞ்ஞானத்தில் சரியான விஞ்ஞான விதிமுறைகள் உருவாக்கப்படவில்லை. இவரே ஒருங்கிணைந்த விதிமுறைகளை உருவாக்கி நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தவர் ஆவார்.
* நியூட்டன் தனது கோட்பாடுகளில் பெரும்பாலானவற்றை 1669 இல் வகுத்தமைத்த போதிலும், அவற்றை வெளியிடுவதில் தயக்கம் காட்டியதால் பல ஆண்டு களுக்குப் பின்னரே அவை வெளியிடப்பட்டன.
* 12 வயதிலேயே பாடசாலைக்குச் சென்றார். ஓவியம் வரைதலிலும் Mechanical துறையிலுமே இவருக்கு நாட்டம் இருந்தது.
* இதனால் 19 வயதில் Trinity College Cambridge இல் கல்வி கற்றார். 1665 இல் இங்கேயே பட்டம் பெற்றார்.
* 1655 இல் Wools Thorpe (வூல்ஸ் தோப்) எனும் தனது சொந்தக் கிராமத்துக்கு விடுமுறையைக் கழிக்க வந்த நியூட்டன், ஆப்பிள் மரத்தின் கீழ் அமர்ந்திருந்த போது ஆப்பிள் ஒன்று மரத்திலிருந்து பூமியை நோக்கி விழுந்ததை அவதானித்த அவர் வலது பக்கமாகவோ, இடது பக்கமாகவோ, மேல் நோக்கியோ இவ் ஆப்பிள் செல்லாமல் பூமியை நோக்கி விழுவதற்கான காரணம் என்ன என்பது பற்றி யோசித் தார். இவ்வாறே எல்லாப் பொருட்களுமே பூமி நோக்கி விழுவதனால் ஏதோ ஒரு சக்தி பூமியை நோக்கி விழச்செய்கிறது என்ற முடிவுக்கு வந்தார். இதனை அடிப் படையாக வைத்து புவியீர்ப்பு விசை சம்மந்தமான விசையை உலகிற்குத் தரு வித்தார்.

நியூட்டனின் பௌதிகவியல் பணிகள்

ஒளியியலில் செய்தவை:-

1) ஒளியின் இயல்பு பற்றிய புரட்சி நூலே இவரது முதலாவது கண்டுபிடிப்பாகும்.
2) சூரியனில் இருந்து வரும் வெள்ளொளியானது வானவில்லின் நிறங்கள் (ஊதா, கருநீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு, நீலம்) அனைத்தையும் உள்ள டக்கிய கலவை என்பதை அரியம் என்ற கருவியினூடாக பல நுட்பமான பரிசோ தனைகள் மூலம் கண்டுபிடித்தார்.
3) இவ் ஆய்வினூடாக ஒளித்தெறிப்பு, ஒளிமுறிவு விதிகளையும் நியூட்டன் கண்டு பிடித்தார்.
4) ஒளித்தெறிப்பு, முறிவு விதிகளை 1668 இல் முதன்முதல் பிரதிபலிப்புத் தொலை காட்டியை (Refecting Telescope) வடிவமைத்துத் தயாரித்தார்.
5) நியூட்டன் தனது ஒளி பற்றி செய்த ஆய்வுகளை ''ஒளிச்சிதறல்கள்'' என்ற தலைப் பில் கட்டுரையாக எழுதி றோயல் சங்கத்தில் வாசித்ததன் மூலம் உலகறியச் செய்தார். (29 ஆம் வயதில்)

இயக்கவியலில் செய்தவை:-

பருப்பொருட்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விளக்கும் அறிவியல் துறையே இயக்கவியல் எனப்படும்.

1) முதலாம் விதி:-
   யாதேனுமொரு பொருளின் மீது சம அளவான விசை ஒன்று பிரயோகிக்கப் படாவிடின் அப்பொருள் ஓய்வில் இருக்கும் அல்லது சீரான வேகத்தில் நேர் கோட்டில் அசைந்தப்படி இருக்கும். (இவ்விதி ஏற்கனவே கலிலியோவால் கண்டு பிடிக்கப்பட்டது.)
2) இரண்டாம் விதி:-
   ஒரு பொருளின் திணிவினதும் ஆர்முடுகளினதும் பெருக்கம் அப்பொருளின் மீது பிரயோகிக்கப்படும் சம அளவான விசைக்கு நேர்விகித சமனாகும். ஆர்முடு கலின் திசை விசையின் திசையேயாகும்.
3) மூன்றாம் விதி:-
   எல்லாத் தாக்கங்களுக்கும் அதற்குச் சமனானதும் எதிர்த் திசையிலானதுமான மறுதாக்கம் உண்டு.

ஈர்ப்புவிசை:-

''பிரபஞ்சத்தின் எல்லாப்பொருட்களுக்கும் இடையிலான ஈர்ப்பு விசை அவற்றின் திணிவின் பெருக்கத்திற்கு நேர் விகிதமாகவும் தூரத்தின் வர்க்கத்திற்கு நேர்மாறு விகிதத் தொடர்பையும் கொண்டுள்ளது'' என வரையறை செய்யப்படும்.

1) ஈர்ப்புக் கொள்கையின் அடிப்படையிலேயே இயக்கவியல், நிலையியல் என்ற பௌதிகத்துறைகள் தோற்றம் பெற்றன.
2) இவ் ஆய்வுகளின் மூலமே சூரிய கோளத்தின் திணிவை முதன்முதலாகக் கணக் கிட்டார். (திணிவு சுமாராக 2×10 தொன்)
3) இவ் ஆய்வுகளில் இருந்து வெளி, காலம், திணிவு என்பவை தனித்துவம் உடையன வும் மாறாதனவுமாகும் எனக் கூறியுள்ளார். இக்கருத்தை அல்பேட் ஐன்ஸ்ரைன் தனது சார்புக் கோட்பாட்டில் மறுத்துள்ளார்.

நியூட்டன் உடைய இந்த நான்கு விதிகளையும் ஓர் ஊசலில் அசைவிலிருந்து சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றிவரும் கோள்களின் இயக்கம் வரையுள்ள எமது அவதானத்திற்கு உட்படும் இயற்கையின் இயக்கங்களையும் நடத்தைகளையும் எதிர்வு கூற முடியும். இவ் விதிகளைக்கொண்டு விஞ்ஞான, பொறியியல் சிக்கனங்களுக்கு தீர்வுகாண முடியும். இவ் விதிகளுக்கும் இவரால் கண்டுபிடிக்கப்பட்ட பிரதிப்பலிப்புத் தொலைகாட்டி வானியல் கண்டுபிடிப்பிற்கும் அதன் வளர்ச்சிக்கும் உதவியது. இவர் கோள்களின் சுழற்சிக்கான காரணங்களையும் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

அரிஸ்டோட்டில் தனது கருத்தில் விண்கோள், புவிக்கோள் எனும் கோள்களினால் தொடர்புபட்ட ஓர் உலகையே முன்வைத்திருந்தார். இந்தக் கோள்களில் எல்லா இடங்களிலும் வஸ்துக்களினால் நிரப்பப்பட்டிருக்கும் என்றார்.

ஆனால், நியூட்டன் இக்கருத்தை ஏற்கவில்லை. இவர் டேக்காட்டின் பொறி முறையியல் சார்ந்த கருத்தை (உலகு பற்றிய) ஏற்றிருந்ததினால் அவர் உலகம் ஒன்றின் மீது ஒன்று தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற அசையும் வஸ்துக்களினால் உருவாக்கப்பட் டுள்ளது என கருத்துரைத்தார்.

கணிதத்துறையில் இவர் செய்தவை:-

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றபோது டேக்காட்டின் வடிவக் கணி தத் துறையால் கவரப்பட்டு அதனைக் கற்று பல புதிய கண்டுபிடிப்புக்களை மேற் கொண்டார்.

1) 1665 இல் கணித உலகின் முக்கியமாகக் கருதப்பட்ட பைனாமியல் தோற்றத்தை (Bilomial Theorem) கண்டுபிடித்தமை.
2) தொகையீட்டு நுண்கணிதத்தைக் (Integral Clculua) கண்டுபிடித்தமை கணித

உலகிற்கு இவர் செய்த மாபெரும் பணியாகும் எனக் கூறப்படுகின்றது. இக் கண்டு பிடிப்பு நவீன விஞ்ஞானத்தின் கோட்பாடுகளில் பெரும் பகுதி தோன்றுவதற்கு வழிவகுத்தது. இவருடைய கணிதப்பணியை பற்றிக் கூறும்போது ''உலகின் தொடக்கத்தில் இருந்து நியூட்டன் வாழ்ந்த காலம் வரை கணிதத்துறையை நோக்கு மிடத்து நியூட்டன் ஆற்றிய பணிகளே அதிகமாக உள்ளன'' என லைப்பினிஸ்ட் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

வானியலில் செய்தவை:-

1) விண்மீன்களின் தோற்றம் பற்றி முதன்முதல் நம்பகமான விளக்கங்களை வெளி யிட்டமை.
2) கோள்கள் சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதையில் இயங்குவதற்கு காரணங்களைக் கூறியமை.
3) விண்மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் நிலைகளையும், இயக்கங்களையும் பற்றி ஊகித்தறியும் சிக்கல்களை இவருடைய ஆய்வுகள் தீர்த்துவைத்தமையால் நியூட் டன் வானியல் அறிஞர்களில் தலைசிறந்தவராக கருதப்படுகின்றார்.

1687 இல் ''இயற்கைத் தத்துவத்தின் கணித விதிகள்'' என்ற தலைசிறந்த நூலை வெளியிட்டமை. இந்நூலில் தனது இயக்கவிதிகள் மூன்றையும் ஈர்ப்புக் கொள்கை யையும் விரிவாக விளக்கியுள்ளார். கோள்களின் இயக்கங்களை எதிர்வு கூறுவதற்கு இவ்விதிகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கியுள்ளார். எனவே, நியூட்டனின் கண்டுபிடிப்புகளும், விதிகளும் விஞ்ஞானத்தில் மிகவும் பெரிய பாதிப்புக்களையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தியது எனலாம்.

டேக்காட் (கி.பி 1596 - 1650)

டேக்காட் என்பவர் சடப்பொருட்களையும் அசைவையும் கொண்டு எல்லா நிகழ்வுகளையும் விளக்க முற்பட்டார். டேக்காட் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற மெய்யியலாளராகவும், கணித மேதையாகவும், உளவியலாளராகவும் இருந்தார்.

டேக்காட்டின் சிந்தனைகளில் பின்வருவன ஐரோப்பிய சிந்தனைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

1. உலகு பற்றிய அவரது ஏந்திரவியல் நோக்கு.
2. விஞ்ஞான ஆராய்ச்சிகள் குறித்து அவரது முறையியல் நோக்கு.
3. விஞ்ஞானத்தில் கணிதத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம்.
4. எந்த ஓர் ஆய்வும் ஐயத்தில் இருந்தே தொடங்க வேண்டும் என வலியுறுத்தி யமை.

1630 தொடக்கம் 1634 வரையுள்ள காலப்பகுதியில் டேக்காட்டின் விஞ்ஞான ஆய் வுகள் இடம்பெற்றன. உடல் கூற்றியல், உடலியல், ஒளியியல், வானியல், கணிதம் போன்ற பல ஆய்வுகளை மேற்கொண்டார். இவர் தனது விஞ்ஞான ஆய்வு முடிவுகளை வெளியிடுவதற்காக எழுதிய நூல் ''உலகம்'' (LEMONDE) என்பதாகும். ஆனால், இந்நூல் வெளிவரவில்லை.

1637 இல் விஞ்ஞானத்தில் பகுத்தறிவைப் பயன்படுத்தி உண்மைகளை அறியும் முறை முறைகள் பற்றிய ஆய்வு என்ற நூலை வெளியிட்டார். இதில் அவர் மூன்று பின்னிணைப்புக்களைச் சேர்த்துள்ளார்.

ஒளியியல் பற்றியது

1. ஒளி விலகல் விதி பற்றி கூறியிருந்தார்.
2. ஆடிகள், வேறு பல ஒளியியல் கருவிகள் பற்றிக் கூறியுள்ளமை.
3. கண்ணின் செயல்முறையும் அதன் முறையற்ற செயல்முறையும் பற்றி விளக்கி யமை.
4. ஒளியின் அலைக் கொள்கையின் முன்னோடி.

வானியல் பற்றியது

1. மேகங்கள், காற்று, மழை போன்றவற்றை ஆய்வுசெய்தமை.
2. வானவில் உண்டாவதற்கான சரியான விளக்கத்தை முன்வைத்தமை.
3. வெப்பம் என்பது உள் அமுக்க இயக்கம் எனக்கூறியமை.

வடிவக் கணிதம் பற்றியது (GEOMETRY)

1. பகுப்பாய்வுக் கணிதத்தைக் கண்டுபிடித்தமை. இதிலிருந்து தான் நியூட்டன், கல் குலஸ் (Galculus) என்ற கணித முறையைக் கண்டுபிடித்தார்.

முறைகள் பற்றிய இவரது கருத்துக்கள்

1. எந்தவொரு ஆய்வை மேற்கொள்பவரும் முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
2. ஐயுறுகின்ற முறையில் இருந்து டேக்காட் தனது ஆய்வுகளை தொடங்கினார். (இறையிருப்பை இவ்வாறே நிறுவினார்)
3. நோக்கவியல் திட்டமுறையை இவர் எதிர்த்தார்.

டேக்காட்டின் உடல் மணம் பற்றிய இருமைக் கொள்கை

* டேகாட் என்பவரால் உடல், மணம் பற்றி முன்வைக்கப்பட்ட ஒரு கோட்பாட்டை அவருடைய இருமைக் கோட்பாடு என அழைக்கப்படுகிறது.
* இக்கோட்பாட்டின்படி மனிதன் உடல், மணம் என்ற இரு திரவியங்களால் ஆக்கப் பட்டுள்ளான் எனக்கூறுகின்றார்.
* உடல் நிகழ்ச்சிகள் மனத்தையும், மனநிகழ்ச்சிகள் உடலையும் தாக்குவதை அனு பவத்தில் அவதானித்த டேக்காட், கலிலியோ, நியூட்டன் போன்றோர் சடப் பொருட்களில் இயக்கம் தொடர்பாக சில விதிகளை வகுத்தது போன்று உடல் மன நிகழ்வுகளுக்கும் விதிகள் இருக்க வேண்டும் எனக்கருதி தனது கோட்பாட்டை முன் வைத்தார்.
* டேக்காட்டின் கோட்பாடு பிற்காலத்தில் பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப் பட்டது. கில்பெட் றையில் என்ற மன மெய்யியலாளர் இக்கோட்பாடு பற்றிக் கூறும் போது டேக்காட் மனிதனைப்பற்றி தவறாக விளங்கியமையாலேயே இவ்வாறன ஒரு கோட்பாட்டை வெளியிட்டார் எனவும், இது உண்மையில் ஒருவகைக் குளறு படி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உலகு பற்றி டேக்காட்டின் ஏந்திரவியல் நோக்கு

* இறைவன், மனித ஆன்மா நீங்கலாக உலகம் முழுவதும் ஏந்திரவியல் இயங்கி வரு கிறது. எனவே, இயற்கை நிகழ்வுகள் அனைத்தையும் ஏந்திரவியல் காரணங்களால் விளக்க முடியும் என இவர் கூறுகின்றார்.
* ஏந்திரவியல் விளக்கம் காரணமாக இவர் சோதிடம், மந்திரம் போன்ற மூடநம்பிக் கைகளை திர்த்தார்.
* இயற்கை நிகழ்ச்சிகளின் காரணகாரிய தொடர்புகள் தற்செயல் நிகழ்வுகள் அல்ல, இறுதி விளைவு நோக்கிய ஒரு மூலத்திட்டத்தின் பிரிவுகளை என்று கூறும் நோக்க வியல் திட்ட வார்த்தை (Teleological) இவர் கடுமையாக எதிர்த்தார்.
* இவ்விளக்கத்தின்படி விலங்குகள் சிக்கலான எந்திரவியல் அமைப்பைப் பெற் றுள்ளன எனவும், மனிதவுடனும் எந்திரவியல் விதிகளுக்கு உட்பட்டது எனவும், கூறுகிறார். இக்கருத்து பிற்காலத்தில் நவீன உடலியல் வளர்ச்சிக்கு உதவியது.

(13ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: M.W.காண்டீபன்
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கீடு - 01 | பகுதி - II

நேற்றைய (15.03.2010) தொடர்ச்சி.....

03. ரெயின்போ விளையாட்டுக்கழகத்தின் 2008ஆம் வருடத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்குப் பின்வருமாறு:-
31.12.2008 இல் முடிவடைந்த வருடத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு.

	ரூபா		ரூபா
01.01.2008 இல் மீதி	6,200	வருடாந்த விளையாட்டுப்	
ஆயுட் சந்தா	30,000	போட்டிச் செலவு	160,000
வருடாந்த சந்தா	143,400	வருடாந்த இரா.போச. செலவு	30,000
வருடாந்த விளையாட்டுப்		பொதுச் செலவு	15,200
போட்டி வருமானம்	140,000	சம்பளங்கள்	94,000
நுழைவுக் கட்டணம்	5,000	மீதி.கீ.கொ.செ	25,400
	324,600		324,600

மேலதிக தகவல்கள்:-

	31.12.2007	31.12.2008
1) மீதிகள்		
பெறவேண்டிய சந்தா	12,000	15,000
செலு.மதியான சம்பளங்கள்	8,000	9,000
முற்.ப. பெற்ற சந்தா	7,000	4,000
ஆயுள் சந்தா	54,000	?

2) ஆயுட்சந்தா திட்டமானது 01.01.2007இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பெறப்படும் சந்தா 10 ஆண்டுகளுக்குப் பரவலாக்கப்படுவது கொள்கையாகும்.

வேண்டப்படுபவை:-
1) 31.12.2008ஆம் ஆண்டுக்கான வருமானச்செலவுக் கணக்கு.

04. அ. மதன் நிறுவனம் 31.12.2008 வங்கிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சுருக்கம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

மீதி/கீ/கொ/வ	4,000	க.கொடுத்தோருக்கு கொடுத்தது	290,000
வைப்பிலிட்டது	300,000	வாடகை	16,000
(கா.காசோ)		இறைகள்	4,000
மீதி.கீ/கொ/செ	7,000	சில்லறைச் செலவுகள்	2,000
		பற்றுகள்	8,000
	310,000		310,000

கடன்படுநரிடமிருந்து வசூலிக்கப்படும் பணத்திலிருந்து ரூபா 90,000 ஐ பின்வரும் கொடுப்பனவுகளுக்கு வைத்துக்கொண்டு எஞ்சிய தொகையே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் கூலிகள் ரூபா 20,000/= உம் கடன்கொடுத்தோருக்கு ரூபா 40,000/= செலுத்தியது போக எஞ்சியதை உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தினார்.

மேலதிக தகவல்கள்:-

	31.12.2007	31.12.2008
சரக்கிருப்பு	40,000	50,000
கடன்படுநர்	20,000	30,000
கடன் கொடுநர்	25,000	35,000
இறை முற்பணம்	2,000	3,000
வாடகை சென்மதி	-	4,000
தளபாடங்கள் (மதிப்பீடு)	25,000	23,000
வைப்பிலிட்டு வசூலிக்கப்படாத காசோலை	10,000	8,000

தேவைப்படுபவை:-
31.12.2008இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக் க/கு.

ஆ. வினோத் கம்பனியின் காசுப்புத்தகத்தின் வங்கி நிரலானது 31.03.2009 இல் வரவு மீதியாக ரூபா 28,000 ஐயும் அதன் வங்கிக்கூற்று மீதி இத் தொகையுடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொண்ட பரிசீலனையானது பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.
1) 30.03.2009இல் வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலை ரூபா 29,000 ஆனது வங்கிக்கூற்றில் பதியப்படவில்லை.
2) 25.03.2009இல் வாடிக்கையாளர் ஒருவரால் 100,000/= இற்கான காசோலை ஒன்று நேரடியாக வங்கியில் வைப்பிலிடப்பட்டது. ஆனால், 31.03.2009 வரை அத்தொகை காசேட்டில் இடம்பெறவில்லை.
3) விநியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 30,000, ரூபா 40,000 பெறுமதியான காசோலைகள் 05.04.2009 அன்று வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.
4) வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட காசோலை ரூபா 64,000 வங்கியில் வைப்புச்செய்தபோது இது மதிப்பிழந்து திரும்பியது. ஆனால், அதற்கான பதிவு காசேட்டில் பக்கம் மாறி பதியப்பட்டிருந்தது.
5) வங்கிக்கூற்றில் இடம்பெற்றுள்ள வங்கிக்கடன் வட்டி தாக்கீடு 500/=, நிலையான கட்டளையின் பேரில் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா 400 காசேட்டில் இடம்பெற்றிருக்கவில்லை.

தேவைப்படுபவை:-
1) காசேட்டைத் திருத்துக.
2) 2009 மார்ச் மாதத்திற்கான வங்கி இணக்கக்கூற்றினைத் தயாரிக்குக.

05. அ. விரைவு மோட்டார் நிறுவனத்தினால் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

1) 01.01.2008இல் கணக்கேட்டு மீதிகள்	ரூபா
மோட்டார் வாகனம்	240,000
பெறுமானத்தேய்வு ஏற்பாடு	80,000

2) 2008ஆம் ஆண்டு கொள்வனவு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் பற்றிய தகவல்கள் 01.01.2006 இல் 32,000 ரூபாவுக்கு வாங்கப்பட்ட மோட்டார் வாகனமொன்று 31.03.2008 இல் 10,500 ரூபாவுக்கு விற்கப்பட்டது.
01.07.2008 இல் புதிய மோட்டார் வாகனமொன்று 20,000 ரூபாவுக்கு வாங்கப்பட்டது.
3) பெறுமானத்தேய்வுக் கொள்கை.
நிறுவனம் நடைமுறையில்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் ஆண்டில் முழு வருடத்திற்கும் தேய்மான ஏற்பாடு செய்யும். ஆனால், விற்பனை செய்யும் ஆண்டில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுவதில்லை. பெறுமானத்தேய்வு ஆனது ஒடுங்குபாக முறையில் 25%.

தேவைப்படுபவை:-
1) மோட்டார் வாகனக்கணக்கு.
2) மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வுக் கணக்கு
3) மோட்டார் வாகன அகற்றும் கணக்கு.

ஆ. 01.01.2008இல் ஐயக்கடன் ஏற்பாட்டுக்கடன் மீதி ரூபா 6,900. இத்தொகையானது விசேட ஏற்பாடு ரூபா 2,900 ஐயும் உள்ளடக்கியுள்ளது. நடப்பாண்டில் 2,000 ரூபா அறவிடமுடியாக்கடனாகியது. அத்துடன் 2007இல் அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்ட ரூபா 10,000 தொகையில் ரூபா 7,000 இவ் வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டது.
31.12.2008இல் விசேட ஏற்பாடு ரூபா 2,500 ரூபாவாகவும் எஞ்சிய கடன்படுநர் தொகையான ரூபா 320,000 இல் 3% இற்கு பொது ஐயக்கடன் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும். அறவிடமுடியாக்கடன் தொடர்பான எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் ஐயக்கடன் ஏற்பாட்டுக்கணக்கு மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும்.
தேவைப்படுபவை:- ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு.

06. மாருதி வரையறுக்கப்பட்ட கம்பனியின் கடன்படுநர் (தனி நபர்) பேரேட்டு மீதிகள் பின்வருமாறு:-

	2009.01.01	2009.01.31
ரூபன்	20,000	4,000
கார்த்திக்	-	10,000
திவாகர்	18,000	15,000
முரளி	4,000	3,200
	42,000	42,000

* 01.01.2009 இல் உள்ள கடன்படுநர் (தனிநபர்) பேரேட்டு மீதிகளின் மொத்தத் தொகையானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டு மீதியுடன் உடன்பட்டிருந்தது. ஆனால், 31.01.2008 மீதிகள் இரண்டும் இணங்கவில்லை.
* கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.
* கடன்பட்டோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காசு இரண்டிலும் சரியாகவே பதியப்பட்டிருந்தது. ஆனால், சில பதிவுகள் தனிநபர் கடன்படுநர் கணக்குகளில் இடம்பெறவில்லை.
* ஜனவரி மாதத்திற்கான கடன் விற்பனைகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

கடன்படுநர்	விற்பனைகள்	விற்பனைத் திரும்பல்	காசுப் பெறுவனவு விவரங்கள்
ரூபன்	60,000	4,000	ஆரம்ப மீதியும் மாதத்தின் தேறிய விற்பனையும்.
கார்த்திக்	100,000	-	10% கழிவு நீக்கியதன் பின்னர் உள்ள தொகை (முழுவதும் தீர்க்கப்பட்டது)
திவாகர்	50,000	-	ஆரம்ப மீதியும் தேறிய விற்பனைப் பெறுமதியில் 70% உம் எஞ்சிய தொகை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது.
முரளி		2,000	ஆரம்ப மீதியும் தேறிய விற்பனைப் பெறுமதியில் 60%

தேவைப்படுபவை:-
1. 2009 ஜனவரி மாதத்திற்கான பொதுப்பேரேட்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.
2. 2009 ஜனவரி மாதத்திற்கான கடன்படுநர் தனிநபர் கணக்குகளைத் திறந்து பிழைகளைக் கண்டறிக.
3. 2009 ஜனவரி 31 இல் உள்ளவாறான கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும், கடன்படுநர் (தனிநபர்) பேரேட்டு மொத்த மீதியும் இணங்குவதற்கான கூற்று.

-நிறைவுற்றது-

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி:
R.ருஷாந்தி.

அளவையியல்: தொடர்ச்சி.....

கலிலியோ (கி.பி 1564 - 1642)

1564 இல் பீஸா நகரில் பிறந்த இவர் தலைசிறந்த விஞ்ஞானியாவார். இவர் மற்றைய விஞ்ஞானிகளை விட சிறந்த விஞ்ஞான முறைகளைக் கண்டுபிடித்தமையால் உலக புகழ்பெற்றுள்ளார்.

கலிலியோ விஞ்ஞானப் பணிகளில் சடத்துவவிதி, தொலைநோக்கி கண்டுபிடிப்பு, வானியல் ஆய்வுகள், கொப்பனிக்கஸின் கோட்பாட்டை மெய்ப்பித்தமை போன்றவை முக்கியமானவை. இவற்றைவிட இவர் விஞ்ஞான முறையியலை உருவாக்குவதற்குச் செய்த பணிகளே பெரும் புகழை ஈட்டித்தந்தது.

பௌதிகப் பணி

இவர் மருத்துவ மாணவராக இருந்தபோது (17 வயது) ஒரு நாள் தேவாலயத்தில் உள்ள மெழுகுவர்த்தி தாங்கி, ஒரு சங்கிலியில் தொங்கவிடப்பட்டு அச்சங்கிலி ஆடுவதை அவதானித்தார். அச்சங்கிலியின் இரு பக்க அசைவுகளும் சமமாக இருப்பதை அவதானித்தார். கைக்கடிகாரம் அப்போது இல்லாததால் இதயத்துடிப்பை அடிப்படையாகக் கொண்டு அவ் அசைவை எண்ணிப்பார்க்கும்போது பெரிய அசைவோ சிறிய அசைவோ சம அளவு நேரம் அசைய எடுத்ததை அவதானித்தார். இதனடிப்படையில்
1. ஊசல் மணி (Pulsemeter) தயாரித்தார்.
2. பின்னர் அதனடிப்படையில் இவரது மகன் பின்சன்ஜி (Binsenji) சுவர்க் கடிகாரம் தயாரித்தார். இதுவே இன்றைய பென்டூலம் மணிக்கூடாக அபிவிருத்தியடைந்துள்ளது.
3. கலிலியோ தனது 22 வயதில் ஆக்கிமிட்டிஸின் கொள்கையை பயன்படுத்தி பொருட்களின் அடர்த்தியை கணிப்பதற்காக நீர்மட்டத்தராசைக் கண்டுபிடித்தார்.
4. பீஸா பல்கலைகழகத்தின் கணித பேராசிரியர் பதவியை ஏற்ற பின் (25 வயதில்) பாரம் குறைந்த பொருட்களை விட பாரம் கூடிய பொருட்களே முதலில் விழும் என்ற அரிஸ்டோட்டிலின் கருத்தினை பல தொடர்ச்சியான பரிசோதனைகள் மூலம் பொய்ப்பித்தார். ''பாரம் குறைந்த பொருள்களும் பாரம் கூடிய பொருள்களும் தடை தாக்கம் இல்லாவிட்டால் ஒரே நேரத்தில் விழும்'' என்ற உண்மையை நிலை நாட்டினார். இந்த உண்மையை நிலைநாட்ட தீர்ப்பு சோதனை செய்யப்பட்டது.

180 அடி கொண்ட பீஸா கோபுரத்தின் ஏழாவது மாடியில் 100 றாத்தல், 1 றாத்தல் (Pound) கொண்ட இரு இரும்பு உருண்டைகளை (பந்து) போட்டவுடன் இரண்டுமே ஒரே நேரத்தில் பூமியைத் தொட்டது. இயங்கும் பொருள் ஒன்றின் வேகம் படிப்படியாகக் குறைந்துகொண்டே செல்லும். இதனை வேறோர் விசையினால் முடுக்கி விடாவிடின் அதன் இயக்கம் நின்றுவிடும் என நீண்ட காலமாக மக்கள் நம்பினர். இது தவறானது என்பதை கலிலியோ பல பரிசோதனைகள் மூலம் நிரூபித்தார்.

உராய்தல் போன்ற வேகத்தை குறைக்கும் விசைகளை அடியோடு நீக்குவோமாயின், ஒரு பொருள் இடைவிடாது தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்கும். (இதை நியூட்டன் தனது முதலாவது விதியாக வகுத்தமைத்தார்) கலிலியோ ஒளியின் (Light) வேகத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளுக்கு வழிகோலினார். (வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் தினத்தில் தபால் அலுவலகங்களுக்கு முழுமையான பாதுகாப்பு!

வீதிகளில் விசேட பொலிஸ் ரோந்து

கொழும்பு, மார்ச் 16

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் தினங்களில் சகல தபாலகங்களுக்கும், தபால் பணிப்பாளர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும் - என்று தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரையும் நாடு முழுவதும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. இதன் நிமித்தமே இப்பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனவும் அவர் கூறினார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன மேலும் கூறுகையில் -

ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலின் நிமித்தம் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரையும் நாடு முழுவதும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் தபாலகங்களுக்கும், தபால்காரர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகளைப் பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வீதிகளில் விசேட பொலிஸ் ரோந்து

குறிப்பாக வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கவென தபால்காரர்கள் செல்லும் ஒவ்வொரு வீதியிலும் பொலிஸார் விசேட பாதுகாப்பு மற்றும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர். இப்பணியில் அவ்வப் பிரதேச பொலிஸ் நிலையப் பொலிஸார் முழுமையாக ஈடுபடுத்தப் படுவர்.

இதேநேரம், எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகள் விசேடமாக விநியோகிக்கப்படும். அத்தினத்தில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுவதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். என்றாலும் 22 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ளத் தவறுகின்றவர்கள், அருகிலுள்ள தபாலகங்களுக்குச் சென்று தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை, சட்டவிரோத சுவரொட்டிக ளையும், பதாகைகளையும் அகற்றும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இன்றுக்குள் அவற்றை அகற்ற முடியுமென நம்புகின்றேன். இதற்கு வேட்பாளர்களதும் பொது மக்களினதும் ஒத்துழைப்பையும் கோரியுள்ளோம் - என்றார்.

பிரஸல்ஸுக்கு உயர்மட்டக்குழு

கொழும்பு, மார்ச் 16

ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிறுத்தப் பட்ட - தைத்த ஆடை ஏற்றுமதிக்கான - 'ஜி.எஸ்.பி.பிளஸ்' வரிச்சலுகையை மீளப் பெறுவது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடுவதற்காக இலங்கையின் நான்கு உயரதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று பிரஸல்ஸ் நகருக்கு நேற்று புறப்பட்டுச்சென்றது.

நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் றொமேஷ் ஜெயசிங்க, நீதித்துறை அமைச்சின் செயலாளர் சுகத்த கம்லத், சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோரே பிரஸல்ஸ் நகருக்குப் புறப்பட்டனர்.

வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதவர்கள் ஊடகர் மஹிந்த ரத்நாயக்கவை கடத்த முயற்சி?

கொழும்பு, மார்ச் 16

வெள்ளை வானில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் சுதந்திர ஊடகவியலாளர் மஹிந்த ரத்நாயக்கவை கடத்திச் செல்ல முயற்சித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளருக்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற பேச்சுகளில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிச் செல்லும்போதே அவர் இந்தச் சம்பவத்தை எதிர்நோக்கியுள்ளார்.

மஹிந்த ரத்னாயக்க சிறப்பு அரசியல் கட்டுரையாளர் என்பதுடன் 'லங்கா டிசென்ட்' இணையத்தளத்தின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மங்கள சமரவீர தலைமையிலான தேசிய முன்னணியின் செயற்பாட்டு ரீதியான உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

இம்முறை பொதுத் தேர்தலில் 18 மாவட்டங்களில் போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளராகவும் மஹிந்த ரத்னாயக்கவை பெயரிட்டுள்ளது.

(அ-சி)

பறிபோகும் தமிழ், தாயகம் இனம் புரியாமல் கனவில் நம் சமூகம்.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையையும் மட்டக்களப்பையும் துண்டாடும் வகையில் வடமுனையிலிருந்து கிரான் வரையான பிரதேசங்களிலும், அதேபோன்று மேற்கு எல்லையான புல்லுமலை வடமுனை மற்றும் வடக்கு எல்லையான மாங்கேணி, வாகரை, பனிச்சங்கேணி, புனானை கிழக்கு, வட்டவான், மதுரங்கேணிக்குளம், கதிரவெளி, பால்சேனை, அம்பந்தனாவெளி ஆகிய கிராமங்களிலும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பை மட்டுமே தமிழர்கள் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது கூட நிலைக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

அம்பாறை

1961ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் 1963 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் 44 வீதமாகவும், சிங்களவர்கள் 29.3 வீதமாகவும், தமிழர் 25.2 வீதமாகவும் காணப்பட்டனர். ஆனால் 2007ஆம் ஆண்டு சிங்களவர்கள் 37.5 வீதமாக உயர்வடைந்திருக்கின்றனர். அதேவேளை, தமிழர்கள் 18.3 வீதமாகவும் முஸ்லிம்கள் 44 வீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளனர்.

இப்பொழுது சிங்கள மயமாக்கப்பட்டிருக்கும் பிரதேசங்கள் மீண்டும் தமிழர் கைகளுக்கு வரும் என சிலர் நம்பலாம். உலக நாடுகளில் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் மீட்கப்பட்டன என உங்களில் சிலர் ஆறுதல் சொல்லலாம். ஆனால் அந்த இனங்களுக்கு உலக நாடுகளில் இருந்த ஆதரவின் ஒரு வீதமாவது எமக்கு இருக்கிறதா என்ற யதார்த்தத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

தற்போது போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் புதிய சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என அண்மையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

தீகவாபி புனித பிரதேசத் திட்டம் மற்றும் உல்லாசப் பிரயாண அபிவிருத்தி ஆகியவற்றின் கீழ் அம்பாறை மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பிமலை பிரதேசத்திலும் (இலங்கை அரசு வைத்த பெயர் தொப்பிகல) மேற்கொள்ளப்பட்டு வரும் 'அக்ரோ' வர்த்தக அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். மகாவலி அபிவிருத்திக் திட்டம், கெடா ஓயா திட்டம் உட்பட மேற்படி திட்டங்களின் கீழ் கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் சிங்களவர்களைக் குடியமர்த்துவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் சனத்தொகையை 55 வீதமாக உயர்த்துவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டங்களை மஹிந்த அரசில் முக்கிய அமைச்சராக இருக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச்சேர்ந்த அமைச்சர் சம்பிக ரணவக்க மேற்கொண்டு வருகிறார்.

அரச காணிகள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள இன விகிதாசாரத்திற்கு ஏற்பவே பங்கிடப்பட வேண்டும் என காணிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும் திருகோணமலையில் கந்தளாய், அல்லை, மொரவேவ, முதலிக்குளம், பதவியா திட்டங்களின் கீழும் -

அம்பாறையில் கல்லோயா, பனல் ஓயா, அம்பலன் ஓயா திட்டங்களின் கீழும் -

நூறுவீதம் சிங்களவர்களே குடிமயர்த்தப்பட்டனர்.

இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வசதியாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் அரச அதிபர் மற்றும் மாவட்ட காணி ஆணையாளர் ஆகிய பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு சிங்கள வர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

2006ஆம் ஆண்டு வடக்குக்கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாணம் தனி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் கிழக்கு மாகாண நிர்வாக உயரதிகாரிகளாக மாகாண சபை நிர்வாகத்திலும் சரி, மாவட்ட செயலகங்களிலும் சரி, சிங்களவர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் நியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, கிழக்கு மாகாண முதல்வராக உயர்மட்டத்திற்கு சிங்களவர்களையே நியமித்து வருகிறார். அவர்களில் அதேபோல, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் காணி அமைச்சின் செயலாளர்களாக சிங்களவர்களே நியமிக்கப்பட் டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு ஆசிரியர், மாகாண செயலாளருக்கு ஒரு கடிதத்தை எழுது வதாக இருந்தால் சிங்களத்தில்தான் எழுத வேண்டும். இந்த அவலங்களுக்குக் காரணம் கிழக்கு மாகாண நிர்வாகம் சிங்களக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கைகளுக்கு சென்றதுடன், சிங்கள அரசின் கைபொம்மையான ஒருவர் மாகாண முதலமைச்சராகமையும்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாகாணசபைக்குப் பூரண அதிகாரம் இல்லாவிட்டாலும் கூட அந்த மாகாணசபை தமிழர்களின் கைகளை விட்டுச் சென்றதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை கிழக்கு மாகாண மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

அதனால்தான் சொல்லுகிறோம், மாகாண நிர்வாகமானால் என்ன - நாடாளுமன்ற பிரதிநிதித்துவமானால் என்ன - தமிழர் பிரதிநிதித்துவத்தை தமிழர்கள் ஒற்றுமையோடு செயற்பட்டு அதனைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் மட்டுமே எதிலும் வெற்றிபெற முடியும். அது எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கும் பொருந்தும்.

இதை வாசித்த உங்களில் சிலர் கிழக்கு மாகாணம்தானே பறி போயிருக்கிறது, வடமாகாணம் எங்கள் கைகளில்தானே இருக்கிறது என பெருமிதம் அடையலாம். ஆனால் வட மாகாணத்தின் பல பகுதிகளும் இன்று எங்கள் கைகளில் இல்லை என்பதுதான் யதார்த்தம். அதுபற்றி மற்றுமொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம். ✱

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களை தனிமைப்படுத்த த.தே.கூ. முயற்சி

அமைச்சர் திஸ்ஸவிதாரண குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 16

இலங்கையின் ஏனைய சமூகங்களிலிருந்து வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களை தனிமைப்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி செய்கிறது - என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.சர்வதேசத்தின் தலையீட்டை நாடுவதன் மூலம் இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள் எனவும் அவர் கூறினார்.

பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ்க் கூட்டமைப்பு கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் வெளியிட்டது. இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ்த் தாயக் கோட்பாட்டின் அடிப்படையிலான உள்ளக சுயாட்சியை வலியுறுத்தி எதிர்வரும் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெறும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியிருக்கிறது. தமிழ் கடும் போக்காளர்களாக இருக்கும் இவர்கள் சர்வதேச சமூகத்தை கொண்டுவர முயல்வது பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும்.

உண்மையில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றவில்லை. ஏனென்றால் புலிகள் அவர்களைத் தடுத்தனர். ஆனால் புலிகள் இப்போது அரங்கில் இல்லை. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுதந்திரமான அரசியல் கட்சியாகத் தேர்தலில் நிற்கிறது. இது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்க வேண்டும். அதேநேரம் அரசியல் தீர்வு யோசனையை அவர்கள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு முன்வைக்கலாம் - என்று கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



16.08.1989

* அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக இந்திய அரசின் யோசனைகளை மீளாய்வு செய்யவேண்டியது அவசியமாகிறது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.
* வல்வெட்டித்துறைப் பகுதியில் அண்மைய அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வடக்கு,கிழக்கு மாகாண முதலமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார்.
* பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் காமினி திஸநாயகா தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக கொழும்பில் ஊகம் தெரிவிப்பு.

17.08.1989

* அமைதிப்படை விலகல் தொடர்பாக இந்தியா தெரிவித்த யோசனைகள் குறித்து விவரங்கள் அறிந்துகொள்ள ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனை இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்பிவைக்க முடிவு.
* வல்வெட்டித்துறை சம்பவங்களில் பொது மக்கள் பலர் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக் குறித்து இந்தியத் தூதரகம் விசாரணை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

18.08.1989

* மன்னார் நகர்ப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் 24 இந்திய அமைதிப்படை வீரர்கள் பலியானதாகத் தெரிவிப்பு.
* வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் குறித்து நேரில் சென்று நிலைமையைப் பார்த்தறிந்து அறிக்கை சமர்ப்பிக்க இந்தியாவிலிருந்து சுதந்திரமான குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு ராஜ்ய சபையில் தி.மு.க உறுப்பினர் சோமபால்சாமி கோரிக்கை.

19.08.1989

* இந்திய அதிகாரிகளுக்கும், இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸவின் விசேட தூதர் பிரட்மன் வீரக்கோனுக்கும் இடையில் இடம்பெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகளில் இணக்கநிலை ஏற்பட்டுள்ளதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.
* வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து விசாரித்தறிந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கில் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வல்வெட்டித்துறைக்கு விஜயம்.

20.08.1989

* தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக பாரிய அளவில் கிளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள தென்பகுதி தீவிரவாத அமைப்புக்கள் தயாராகிவருவதாக தெரிவிப்பு.
* தேவை ஏற்பட்டால் புதிய அரசமைப்பொன்றைத் தயாரிக்க வசதியாக ஜே.வி.பி உட்பட சகல அரசியற் கட்சிகளையும் கொண்ட அரசியல் நிர்ணய சபையொன்றைத் தம்மால் நியமிக்க இயலுமென ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

21.08.1989

* மாற்று ஏற்பாடு செய்யாமல் அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறினால் இலங்கை பிளவுபட்டுவிடும் என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.
* இலங்கையில் ஜனநாயகத்தை காப்பாற்ற இலங்கைக்கு உதவும் நாடுகள் தொடர்ந்து நிதியுதவி செய்யவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ இலங்கைக்கு உதவும் நாடுகளின் தலைவர்களிடம் வேண்டுகோள்.

22.08.1989

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விரைவில் யுத்த நிறுத்தம் ஏற்பட வழிவகுப்பேன் என வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவிடம் தெரிவிப்பு.
* உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து சகல கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய காபந்து அமைச்சரவையொன்றை நிறுவ வேண்டுமெனவும் காபந்து அமைச்சரவைக்கு ஜனாதிபதி பிரேமதாஸ தலைமை வகிக்கக் கூடாது எனவும் தென்னிலங்கை நெருக்கடிக்கான தீர்வு குறித்த தமது யோசனையில் எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

23.08.1989

* நாட்டின் கொள்கை வகுப்பு நடைமுறைப் பணியிலிருந்து நான் முற்றாகவே ஒதுங்கிக் கொண்டுவிட்டேன் என அமைச்சர் காமினி திஸநாயகா தெரிவிப்பு
* ஜே.வி.பி இயக்கம் அரசுக்கெதிரான தாக்குதல்களை நிறுத்தும்வரை அரசின் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என ஜனாதிபதி பிரேமதாஸ அறிவிப்பு.

24.08.1989

* தென்னிலங்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசும் ஏனைய அரசியல் கட்சிகளும் தனித்தனியாகச் சமர்ப்பிக்கும் யோசனைகளைப் பரிசீலிக்க சபாநாயகர் எம்.எச் முகமது தலைமையில் அரசியல் கட்சிகள் நாளை கூடுகின்றன.
* அமைதிப்படை திரும்பியவுடன் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பைப் பொறுப்பேற்கும் அமைப்பு எது என்பதைத் தீர்மானிப்பதில் ஜனாதிபதி பிரேமதாஸ சங்கடப்படுவதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

25.08.1989

* தென்பகுதியில் கடந்த 48 மணித்தியாலங்களில் 45 பேரின் சடலங்கள் எரிந்த நிலையில் கண்டுபிடிப்பு.
* வன்செயல்களை நிறுத்துமாறு அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் சேர்ந்து கூட்டாகக் கோரிக்கை விடுவதற்கான முயற்சி பிசுபிசுப்பு. எதிரணி தனித்து யுத்த நிறுத்தம் கோரும்.

26.08.1989

* இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தை வலியுறுத்தி தென்னிலங்கையில் ஒரு வாரகாலத்துக்கு பரந்த அளவில் வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு ஜே.வி.பி அழைப்பு விடுப்பு.
* ஜே.வி.பி பங்குபற்றாத தேசிய அரசால் பிரயோசனம் ஏதுவும் ஏற்படமாட்டாது என அமைச்சர் ரஞ்சித் அத்தபத்து நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

27.08.1989

* ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு கிடைத்த ஓர் அறிவுறுத்தலை தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளின் போது காயமடையும் ஆயுதப்படையினருக்கு சிகிச்சையளிக்க கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதி மறுப்பு. காயமடையும் படைவீரர்கள் சிகிச்சைக்காக இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பிவைப்பு.
* இந்திய படையினரின் உடனடி வெளியேற்றம் நடைமுறைக்குச் சாத்தியப்படாத நிலையில், படையினரின் வெளியேற்றம் குறித்து திட்டவட்டமான காலஎல்லை தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் பாலகுமாரன் தெரிவிப்பு.

28.08.1989

* அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் காபந்து அரசொன்றை உடனடியாக நிறுவுமாறு ஐந்து எதிர்க்கட்சிகள் இணைந்து அரசுக்கு வேண்டுகோள் விடுப்பு.
* குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கத் திணைக்கள நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பு அவசரகாலச் சட்டத்தின்கீழ் படையினர்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவிப்பு.

29.08.1989

* ஜே.வி.பி இயக்கத்தினர் விடுத்த அழைப்பை ஏற்று தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களிலும் ஒருவாரகால வேலை நிறுத்தம் நேற்று ஆரம்பமாகியதையடுத்து தென்னிலங்கையில் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம்.
* இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்பி இலங்கை இராணுவத்தை வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு அரசு அனுப்பிவைக்குமானால் யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ள ஜே.வி.பி தயாராக இருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்கா தெரிவிப்பு.

30.08.1989

* அரசமைப்புச் சட்டத்துக்கான 13ஆவது திருத்தத்தை இரத்துச்செய்யுமாறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அரசிடம் கோரிக்கை.
* கிழக்கு மாகாணத்தில் சேருவில, கந்தளாய் பகுதிகளில் ஜே.வி.பியினர் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பம்.

31.08.1989

* பெல்கிரேட்டில் ஆரம்பமாகவுள்ள அணிசேரா இயக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கை அரசுக்குழுவுக்கு பிரதமருக்குப் பதிலாக வெளியுறவு அமைச்சர் தலைமை தாங்கிச்செல்வார் என அறிவிப்பு.
* படுகொலைகள், வன்செயல்களை நிறுத்தி அமைதியை நிலைநாட்டி, பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என மல்வத்தை மகா நாயக்க தேரர் பகிரங்க அழைப்பு விடுப்பு.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் திருமலையில் வர்த்தகர் ஒருவர் பலி

கொழும்பு, மார்ச் 16

திருகோணமலையில் பொலிஸார் தவறுதலாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி ஒருவரைக் கைதுசெய்யும் நோக்கில் திருகோணமலை, மஹாமாயபுர பிரதேசத்திலுள்ள வீடொன்றிற்குள் நுழைந்த பொலிஸாருக்கும், அந்த வீட்டு உரிமையாளருக்கும் இடையில் நடைபெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தின்போதே வர்த்தகர் உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

கடந்த 14ஆம் திகதி அதிகாலை 2 மணிய எவில் திருகோணமலை, மஹாமயபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி ஒருவரை கைதுசெய்யச் சென்ற சப்- இன்ஸ்பெக்டர் ஏ.பிரேமதாஸ உள்ளிட்ட 7 பொலிஸ் அதிகாரிகள் தவறுதலாகக் குறித்த குற்றவாளி அல்லாத ஒரு நபரின் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

அந்த வீட்டு உரிமையாளரான பீ.ஆர். ஆர்.பந்துல குறித்த பொலிஸ் அதிகாரிகள் குழு மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சப்-இன்ஸ்பெக்டர் ஏ.பிரேமதாஸ காயமுற்று திருமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த வீட்டு உரிமையாளர் பி.ஆர்.ஆர்.பந்துலவை பொலிஸார் கைதுசெய்யச் சென்ற வேளை, இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பந்துல கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவரின் சடலம் திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (சி)

தொண்டு நிறுவனங்களுக்கு இதுவரை நிதி ஒதுக்கீடு இல்லை; மெனிக்பாம் வாழ் இடம்பெயர்ந்தோர் பாதிக்கப்படலாம்

தொண்டு நிறுவனங்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 16

நிதிப் பற்றாக்குறையால் இடம்பெயர் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

குறிப்பாக நீர் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு போதியளவு நிதி ஒதுக்கீடுகள் இல்லை என தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த நிலைமையால் வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள ஒரு லட்சம் இடம்பெயர் மக்கள் பாதிக்கப்படக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் விநியோகம், நீர்த்தாங்கிகளை பயன்படுத்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான புதிதாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்படுகிறது.

போதியளவு நிதி கிடைக்காத பட்சத்தில் மனிதாபிமான தொண்டுகளை இடைநிறுத்த வேண்டியநிலை ஏற்படுமெனத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இதுவரையில் உறுதியான கோரிக்கைகள் எதுவும் விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

இலங்கை ராஜதந்திரி ஒருவர் மீது ஜப்பானில் திருட்டுக் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 16

ஜப்பானுக்கான இலங்கை இராஜதந்திரி ஒருவர் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பெறுமதியான ஓவியம், பியானோ மற்றும் தொன்மையான சுவர்க்கடிகாரம் ஒன்று ஆகியவற்றை குறித்த இராஜதந்திரி களவாடியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த இராஜதந்திரி வசித்து வந்த கட்டட உரிமையாளருக்குச் சொந்தமான பொருள்களையும் சேர்த்து இலங்கைக்கு எடுத்து வந்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், தாம் எந்தவொரு பொருளையும் எடுத்து வரவில்லை எனவும், தமக்குச் சொந்தமான பொருள்களை மட்டுமே எடுத்து வந்தார் எனவும் குறித்த இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின்போது குற்றம் நிரூபிக்கப்பட்டால் உடனடியாக குறித்த பொருள்கள் கப்பல் மூலம் ஜப்பானுக்கு அனுப்பிவைக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

மாணவர்களை வளப்படுத்த செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பாடசாலை மாணவர்களுக்கான வளப்படுத்தல் செயற்றிட்டம் ஒன்று ஜி.ரி.சற் நிறுவனத்தால் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உளவழிகாட்டலும், ஆலோசனை வழங்கலும், விசேட கல்வி, அனர்த்த முகாமைத்துவம் எனும் துறைகளில் பாடசாலை மாணவர்களை வளப்படுத்தும் நோக்கில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அந்தவகையில் தீவக வலயத்தில் இவ்வாண்டு இத்திட்டத்துக்காக வேலணை மத்திய கல்லூரி, நாரந்தனை றோ.க.வித்தியாலம், புங்குடுதீவு ம.வி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், வேலணை கிழக்கு மகாவித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம், புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் எனும் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (1-267)

புல்லுக்குளம் புனரமைப்புப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ். நகரத்தின் மத்தியிலுள்ள புல்லுக்குளத்தில் இடம் பெற்றுவரும் புனரமைப்புப் பணிகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டார்.

புல்லுக்குளம் பகுதிக்கு திடீர் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு இடம் பெறும் புனரமைப்புப் பணிகளைப்பார்வையிட்டதுடன், அப்பணிகளில் ஈடுபட்டிருந்த மாநகர சபை ஊழியர்களுடனும் கலந்துரையாடினார்.

யாழ். குடா நாட்டுக்கு தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில் நீண்ட காலமாகச் சுத்தம் செய்யப்படாமல் இருந்த புல்லுக்குளத்தைத் துப்புரவு செய்து நகரின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு இணங்க யாழ். மாநகர சபை நிர்வாகத்தினரால் புல்லுக்குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளின் கால்கோள் விழாக்கள்

எழுவைதீவு முருகவேள் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் தீவக வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. தனிநாயகம், பாடசாலை அதிபர் து.கிருபாகரன் ஆகியோர் மாணவர்கள் சகிதம் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (-16)

யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் தரம் இரண்டு மாணவி செல்வி வ.வைதேகி வரவேற்புரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (16)

கைதடி கலைவாணி வித்தியாலய முதலாம் தர மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந் நிகழ்வில் ஆசிரியர், மாணவர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (-207)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இதில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்பயிற்சி நிலைய திறப்பு விழா இன்று

நீர்வேலி தெற்கில் மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையத் திறப்பு விழா இன்று செவ்வாய்க் கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/268 நீர்வேலி தெற்கு அமெரிக்க ஜீவிஷ் விநியோகக் குழுவின் நிதியுதவியுடன் இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. பிரதம விருந்தினராக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் ஆர்.மோகனேஸ்வரன் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக ஜே.டி.சியின் திட்ட முகாமையாளர் டபிள்யூ.எச்.ட்பிள்யூ. சொய்சா கலந்து கொள்வார். கோப்பாய் பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் விசேட விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ப)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 ★ 06 ★ 1956

மறைவு 27 ★ 03 ★ 2009

அமரர் குண்டுமணி திரவியநாதன்

எத்தனை நாள்கள் சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

நாவலர் சனசமூக நிலையம் அருகில்,
நாவலடி, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(95922)

மரண அறிவித்தல்

ஆபிரகாம் யோண்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர், யாழ்/சென். சார்ஸ், ம.வி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபிரகாம்.யோண்பிள்ளை 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியை திருமதி ஸ்ரெலா யோண் பிள்ளையின் அன்புக்கணவரும், ஆனந்தராஜா, பிலோமினா, கொன்செப்ரா, பிரிசில்லா, கிருபா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறெக்ஸி, கார்த்திகேசலிங்கம், விஜயகுமார், யோகநாயகம், இரட்ணராஜா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.03.2010) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு கொழும்பு A.F. றேஞ்ச் மலர்ச்சாலையிலிருந்து கனத்தை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கலிஸ்ரஸ் யோசப், ஆனந்தராஜா (மகன்)
72 A,றக்கா வீதி,யாழ்ப்பாணம். தொ.பே: 0112727784 கொழும்பு.

(95920)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 13 ● 06 ● 1945

அஸ்தமனம் 27 ● 03 ● 2009

அமரர் செல்லத்துரை அம்பிகைபாலன்

அன்போடு எம்மை அழைத்து
உணவூட்டிய அன்புத் தந்தையே!
இன்முகமாய் இன்பம் காட்டி-எல்லோர்
இதயத்திலும் இடம் பிடித்தவரே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம்துயரம்.

இன்று (16.03.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல.11, கன்னார லேன், நல்லூரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.11, கன்னார லேன், மனைவி, பிள்ளைகள்
நல்லூர், யாழ்ப்பாணம். (95923) மற்றும் குடும்பத்தினர்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் 32பேர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு இரண்டுநாள் விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தனர். அவர்கள் உதயன் நிறுவனத்துக்கும் வருகைதந்திருந்தனர்.

உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோர் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடும்போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

காரைநகரில் அறுவடைக்கு முன்னரே கால்நடைகளை கட்டாக் காலிகளாக விடுவதால் நெற்பயிர்கள் நாசம்

காரைநகர்,மார்ச்16

காரைநகரில் நெல் அறுவடை முடியு முன்னரே கால்நடைகளை அவிழ்த்து விடு வதனால் அவை நெற்பயிர்களை அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரி விக்கின்றனர்.

காரைநகரில் தற்போது 50 வீதத்தினர் மாத்திரமே நெல் அறுவடையை மேற்கொண் டுள்ளனர். ஏனையோர் தற்போதே நெல் அறுவ டையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கால்நடைகளை அவிழ்த்து விடுவதனால் அவை முற்றி விளைந்து அறுவடை மேற்கொள்ளும் நெற்கதிர்களை அழித்து வருகின்றன.

இவ்வாறு காலபோக நெற்செய்கை முடியுமுன்னரே கால்நடைகளை அவிழ்த்து விடும் கால்நடை வளர்ப்போருக்கு எதிராக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை - காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தினால் அனுமதி வழங்கப்பட்ட பிடிகாரனினால் வயல் நிலத்தில் நெற்பயிரை அழித்த மாடுகள் பிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக கட்டி வைத்திருந்தபோது இரவுவேளை அவருடைய வீட்டிற்கு வந்த மாட்டின் உரிமையாளர் பிடிகாரனை மிக மோசமாக தாக்கிவிட்டு தனது மாட்டினை அவிழ்த்துச் சென்ற சம்பவமும் அண்மையில் காரைநக ரில் இடம்பெற்றது.

இலகுவேலைத் திட்டம் மூலம் பொது இடங்கள் துப்புரவு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

இலகு வேலைத் திட்டத்தின் மூலம் வலி.கிழக்குப் பிரதேசத்தில் பொதுஇடங் கள் மற்றும் வீதிகள் என்பன துப்புரவு செய் யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொது இடங்கள் துப்புரவு செய்யப்படு வதோடு வீதியோரத்தில் படர்ந்து வளர்ந் திருக்கும் பற்றைகள், செடிகள் என்பனவும் வெட்டி அழிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (50-224)

மாணவருக்கான தேர்ச்சி மட்ட அளவீட்டுப் பரீட்சை

பருத்தித்துறை,மார்ச்16

வடமாகாணக் கல்வித் திணைக்களத் தினால் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஒன் பது வரை கல்வி கற்கின்ற மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தினை அளவீடு செய்வதற் கான பரீட்சை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெற வுள்ள இப்பரீட்சை மூலம் மாணவர்கள் கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களில் அடைந்துள்ள தேர்ச்சியின் மட்டம் அள வீடு செய்யப்படவுள்ளது.

தரம் ஒன்று, தரம் இரண்டு ஆகிய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர் களுக்கு வாய்மொழிப் பரீட்சையே நடத் தப்படவுள்ளது. ஏனைய தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எழுத்துப் பரீட் சையே நடத்தப்படவுள்ளது. (50-190)

அடுத்துவரும் தினங்களில் யாழ்ப்பாணத்தில் வெப்பம் 36 பாகை செல்சியஸ் வரை செல்லும்

வானிலை அவதான நிலையம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்16

அடுத்த மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதிவரையான காலப்பகுதியில் சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ள நிலையில் தற்போது மாவட்டத்திலும் கடும் வெப்பநிலை நிலவி வருகிறது. எதிர்வரும் நாள்களில் அது 36 பாகை செல்சியஸ் வரை செல்லும் என திருநெல்வேலியிலுள்ள யாழ். மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப் பதிகாரி வே.புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த சில நாள்களாக நாடு முழுவதும் வெப்பமான காலநிலை நிலவுகிறது. அந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் வெப்ப மான காலநிலை தொடர்கிறது. நேற்றைய தினம் 34 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியிருக்கிறது. வரும் நாள்களில் இன்னும் அதிகரித்து 35-36 பாகை செல் சியஸ் வரை வெப்பநிலை நிலவுவதற்கான அறிகுறிகள் இணங்காணப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இதே காலத்தில் 34.7 செல்சியஸ் ஆக வெப்பநிலை நிலவியது. சாதாரண வெப்பநிலை 28.5 பாகை செல் சியஸ் ஆகும்.

எனவே இந்த வெப்ப காலப்பகுதியில் வெப்பம் தொடர்பான தொற்றுநோய்கள் பரவுவதற்கான அதிக சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே பொதுமக்கள் விழிப்பு டன் செயற்பட வேண்டும் -என்றார் அவர். (50-14)

நலன்புரி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட, 11.08.2006இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான மார்ச் மாதத்துக்கான உலர் உணவு விநியோகம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

அரிசி, கோதுமை, பருப்பு, சீனி,சமையல் எண்ணெய் போன்றவை இந்த நிவாரணத்திற்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

இந்த நிவாரணத்தை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட் டுள்ளது.

அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விநியோகிக்கப்படும் நிவாரணப் பட்டியல் வருமாறு-

பொருள்கள்	அங்கத்தவர் எண்ணிக்கை								
	1 அங்.	2 அங்.	3 அங்.	4 அங்.	5 அங்.	6 அங்.	7 அங்.	8 அங்.	9 அங்.
அரிசி (கி.கிராம்)	6.200	12.400	18.600	24.800	31.000	37.200	43.400	49.600	55.800
மா (கி.கிராம்)	6.200	12.400	18.600	24.800	31.000	37.200	43.400	49.600	55.800
பருப்பு (கி.கிராம்)	1.860	3.720	5.580	7.440	9.300	11.160	13.020	14.880	16.740
சீனி (கி.கிராம்)	0.620	1.240	1.860	2.480	3.100	3.720	4.340	4.960	5.580
எண்ணெய் (லீற்றர்)	0.676	1.352	2.028	2.704	3.380	4.056	4.732	5.408	6.084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு; அங்கிகளை இன்றுமுதல் பெறலாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுபவர்களுக்கான பட்டமளிப்பு அங்கிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

இன்று 16ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 23ஆம் திகதி வரையும் தினமும் காலை 9.30 மணிமுதல் 12 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் 4.30 மணி வரை யும் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்பட வுள்ளன.

கலைமாணிப் பட்டத்தை 2008ஆம் ஆண்டில் நிறைவு செய்தவர்களுக்கான அங்கி கள் இன்றும் நாளை யும் கலைமாணி பட்டத்தை 2007, 2008 ஆம் ஆண்டு களில் நிறைவு செய் தவர்களுக்கு எதிர் வரும் 18ஆம் திகதி யும் நுண்கலை மாணியில் சங்கீதம், பரதநாட்டியம், கலை யும் வடிவமைப்பும் பட்டத்தை நிறைவு செய்தவர்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி யும் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும்.

கலாநிதி, முதுதத்துவமாணி மற்றும் முது கலைமாணிப் பட்டத்தை நிறைவு செய்த வர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதியும் -

வவுனியா வளாகத்தில் பட்டப்பின் டிப் ளோமாவைப் பூர்த்திசெய்தவர்களுக்கு எதிர் வரும் 21ஆம் திகதியும் முகாமைத்துவ நிர்வாகமாணி, வணிகமாணி, விஞ்ஞான மாணி(விவசாயம்) ஆகிய துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 22ஆம் திகதியும் -

விஞ்ஞானமாணி, வணிகமாணியும் முகாமைத்துவமாணியும், மருத்துவமாணி யும் சத்திரசிகிச்சைமாணியும் ஆகிய துறை களில் பட்டம் பெற்றவர்களுக்கு எதிர் வரும் 23ஆம் திகதியும் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்று வதற்காக பணம் செலுத்திய பற்றுச்சீட்டி னையும் பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லதுதேசிய அடையாள அட்டையி னைக் காண்பித்து கல்விக் கிளையில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் 26ஆம், 27ஆம் 28ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளது.

கடந்த 13ஆம் திகதி இரவு நாவலர் வீதியில் உள்ள தொலை பேசிக் கம்பம் ஒன்றில் பார ஊர்தியின் கூடாரம் சிக்கிக்கொண்டதில் தொலைபேசிக் கம்பம் வீதியின் குறுக்கே முறிந்து வீழ்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். பாரஊர்தி சேதமின்றித் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (படம்:லக்ஸ்மன்)

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் முத்தமிழ் விழாவும் 'மந்த மாருதம்' நூல் வெளியீடும் கடந்த 13ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதற் படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் 'மந்த மாருதம்' மலரை கல்லூரி அதிபர் அருட்திரு ம.ஜெரோ செல்வநாயகம் வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக் கொள்வதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுகந்தன்)

SM CONSULTANT SERVICE

UK STUDENT VISA

யாழ். மாவட்டவாசிகளுக்கு லண்டனில் விசாவினைப் பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பினைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரு நிறுவனம்.

புதிய நடைமுறையின் கீழ் பிரயோகத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து புதிய நடைமுறையின் கீழ் விசாவினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சகல விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்!!!

2009ம் ஆண்டு யூன் • மாதம் காலாவதியின் பின்னரும் பிரிட்டன் பாலர்களுக்கு லண்டன் Student Visa பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தங்குமிட ஒழுங்குகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள் மற்றும் ஏனை சம்பந்தமான மேலதிக ஆலோசனைகள் என்பன எமது லண்டன் ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்.

Study In India

அனுமதிகள் உடன் பெற்றுத் தரப்படும்.

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர 2 A/L சித்திகள் போதுமானது.....

University of Madras # SRM University # Bangalore University
Visvesvaraya Technological University (VTU) # Rajiv Gandhi University
of Health Sciences, Bangalore # Hindustan University # Manipal University
M S Ramaiah Medical College # Dr.B.R.Ambedkar Medical College
National Law School of India University (NLSIU)

பாடநெறிகள்: B.E, B.Sc, B.Ed, .C.A, B.B.M, B.Com, B.P.T, B.A, LL.B(Hons), LL.M, M.Sc, MBBS,MBA

Sri Eshwar College of Engineering Coimbothore.
[Anna University College]

US $ 2500/Year

Mechanical Eng. ECE EEE IT CSE

Study in EAST EUROPE-UKRAINE-MBBS / MD.

Lugansk State Medical university (Ukraine)-(September intake) இல் இணைந்து சிறிலங்கா Medical Council னால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

Study In Poland

போலந்து (POLAND) நாட்டிற்கு வேலை வாய்ப்புடன் கல்வி பயிலக்கூடிய ஒழுங்குகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது என்பதனை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம். விபரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

அனைத்து விபரங்களுக்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்தும் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

☎ 021 222 3818
☎ 021 567 3818
☎ 077 452 8818

தொடர்புகளிற்கு:

இல: 148,கோயில்வீதி, (புனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

பச்சிலைப்பள்ளியில் ப.நோ.கூ.சங்கம்

பருத்தித்துறை,மார்ச்,16

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மக்கள் மீளக் குடி யேற்றப்பட்டு வருவதையடுத்து பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது செயற்பாட்டினை ஏற் கனவே ஆரம்பித்துள்ளது.

பளைநகரம், புலோப்பளை ஆகிய இடங்களில் இரண்டு கிளைக் கடைகளை கூட்டுறவுச் சங்கம் திறந்துள்ளது. அக்கி ளைக் கடைகளுக்கு ஊடாக செயலகத்தினால் வழங்கப்படு கின்ற உலர் உணவு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலை மைச் செயலகம் தற்காலிகமாக பளை நகரத்திலுள்ள கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

(50-190)

பளையில் எரிபொருள் நிரப்பும் நிலையம்

பருத்தித்துறை,மார்ச்16

பளையில் பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்கத் தொடங் கியுள்ளது.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணை ஆகியன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஏ-9 வீதியால் செல்லும் வாக னங்கள் தமது எரிபொருள் தேவையினை பூர்த்தி செய்யக் கூடி யதாகவுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிலத்துக்கடியிலுள்ள தாங்கியில் துவாரம் ஏற்பட்டிருப்பதனால் தற்போது பரல்களில் வைத்தே எரிபொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றன.

(50-190)

கல்வி நிறுவனங்களில் பரிசுத்த வாரம் அனுஷ்டிப்பு

பருத்தித்துறை,மார்ச்,16

கத்தோலிக்க, கிறிஸ்தவ மக்களின் தவக்காலத்தில் பாடசா லைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலை கள், தொழிற்பயிற்சி பயிலுநர் நிறுவனங்கள் ஆகியவற்றில் பரி சுத்த வாரத்தினை அனுஷ்டிக்கும்படி கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.கல்வி அமைச்சில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற கத்தோலிக்க ஆலோ சனை சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்ட யோசனைகளுக்கமைய எதிர்வரும் காலங்களில் பெரிய வெள்ளிக்கிழமை இடம்பெறும் புனித வாரத்தில் ஒருநாள் 15 மாணவர்கள் அல்லது அதற்கு மேற் பட்ட மாணவர்களைக் கொண்ட பாட சாலைகளில் இச் சமய விழாவினை நடத் துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ்வருடம் எதிர்வரும் 30, 31 அல்லது ஏப்ரல் முதலாம் ஆம் திகதி ஆகிய 3 நாள்களில் ஏதாவது ஒரு நாளில் இந்த விழாவினை நடத்துமாறு ஆலோசனை கல்வி அமைச்சினால் விடு விக்கப்பட்டுள்ளது.

அவ்விழாவிற்கான இரு வேலைத் திட்டங்களும் கல்வி அமைச்சினால் பாட சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

(50-190)

பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

பருத்தித்துறை, மார்ச் 16

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு மாணவர்க ளுக்கான தளபாடங்கள் வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, புற்றளை மகா வித்தியால யம், கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாட சாலைகளுக்கே தளபாடங்கள் வழங்கப் படவுள்ளன.

(50-190)

சேவை நலன் பாராட்டு

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இரு தசாப்தங்களுக்கு மேல் சேவை புரிந்து ஓய்வுபெறும்

உப அதிபர் பிரதி அதிபர் சிரேஸ்ட ஆசான்

திரு.சிதம்பரப்பிள்ளை உதயபாலன் B.Sc (Hons), Dip. in Edu. Sp.Trd.(Maths) SLTS-I

செல்வி வசந்தரா சோதிரட்ணம் BA., Dip. in Edu. Sp.Trd.(Science) SLTS-I

திரு.சரவணை தேவராசா BA., Dip. in Edu. SLTS-I

ஆகியோர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உயர்வுக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டுவதோடு அவர்களின் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(சி/565727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவு எமது இனத்தின் பேரம் பேசும் பலத்தைப் பலவீனமாக்கும்

இதனால் ஓர் ஆசனத்தை நாம் தென்னிலங்கைக்குத் தாரை வார்த்து விட்டோம் என்கிறார் சிவஞானம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற் பட்டுள்ள பிளவு அல்லது விரிசல். மிகவும் வேதனைக்குரியது. எமது இனத்தின் பேரம் பேசும் பலத்தை பலவீனப்படுத்தும் என்பது மறுக்கப்பட முடியாதது. எனினும் தவிர்க்கப்பட முடியாததாகி விட்டதாகவே தோன்றுகின்றது. இதன் தாக்கத்தின் ஒரு அம்சத்தை தற்பொழுதே நிச்சயித்துக் கூறலாம். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களை இம்முறை பெறமுடியாது போகலாம். எமக்கு ஒரு ஆசனம் மட்டுமே கிடைக்கலாம். இதன் மூலம் தமிழ் இனத்திற்கான ஒரு ஆசனத்தை தென்னிலங்கைக்கு தாரைவார்த்தாலும் தவிர்க்க முடியாதது என்பதை இத் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை கோண்டாவில் மேற்கில் தியாகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் முன்னாள் மாநகரசபை ஆணையாளருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் யாவும் யாழ்ப்பாண குடாநாட்டினதும் குடாநாட்டுமக்களதும் முக்கியத்துவத்தை வெகுவாகக் குறைப்பதை இலக்காகக் கொண்டவை.

என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் பேசும் இனத்தின் உரிமைக்குரல்கள் போராட்டங்கள் யாவும் 1919 இல் இருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தலைமைகளாலேயே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இந்த யாழ்ப்பாண தலைமைகளை அழிப்பதன் மூலம் தமிழ் பேசும் இனத்தின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடித்துவிட வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த அரசு செயற்படுகிறது என்பதை எமது மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம் - என்றார்.

இக்கருத்தரங்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை. சேனாதிராஜா, மற்றும் வேட்பா ளர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சு.குலநாயகம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (50)

கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டம் சுழிபுரத்தில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை சுழிபுரத்தில் ஆரம்பமாகின்றது. சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் முன்றலில் இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டம் பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா உட்பட கூட்டமைப்பு வேட் பாளர்கள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

(50 -224)

இம்முறை தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு 3 மாதங்களுக்குள் நியமனம்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களித்து அதிக ஆசனங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு மூன்று மாத காலத்திற் குள் அரச நியம னங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற வேலையற்ற பட்டதாரிகளு டனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

வேலையற்ற பட்டதாரிகள் தமக்குள் ஒவ் வொரு காரணங் கள் நிமித்தம் 'வே லை யற்ற பட்டதாரிகள் சங் கமாக' செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மாறி பட்டதாரி கள் ஒன்றிணைந்து வலுவான சங்க மாக இயங்க வேண்டும்.

அவ்வாறான நிலையிலேயே வழங் கப்படவிருக்கும் மக்கள் சபைச் செயலா ளர், நுண்கலைத்துறை ஆசிரியர் நியம னங்கள் போன்றவை வேலையற்ற பட்ட தாரிகள் சங்கத்தின் சிபார்சுடன் வழங்க முடியும். இவ்வாறு வழங்குவதன் மூலமே நியாயமான முறையில் நியமனங்களை வழங்க முடியும்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு மட்டு மன்றி தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிய மனங்கள் வழங்கியிருக்கின்றோம். இவை மட்டுமன்றி சமூக அபிவிருத்தியையும் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு எமக் குள்ளது.

மக்கள் அனுபவித்துவரும் துன்ப துய ரங்களுக்கு நானும் ஒரு காரணமாக இருந்தேன். ஆயுதம் ஏந்திப் போராடிய ஆரம்ப காலப் போராளி என்ற வகையிலே நானும் காரண கர்த்தாவாக இருந்தேன்.

மக்களைத் துன்ப துயரங்களிலிருந்து விடுவிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள் ளது. அதற்கான ஆணை மக்களிடம் இருந்து கிடைக்க வேண்டும். ஜனநாயக ரீதியாக எம்மைப் பலப்படுத்த வேண்டும். அதன் மூலம் எமக்கு அதிகாரம் கிடைக்கும் பட்சத்திலேயே எதனையும் நிறை வேற்ற முடியும்.

இம்முறை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் எமக்கு வாக்களித்து அதிக ஆசனங்கள் கிடைக்கும் பட்சத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் மூன்று மாதகாலத்தினுள் வழங்கப்படும் என்றார். (50-14)

பேரம் பேசும் சக்திக்கான ஆணையை குடாநாட்டுத் தமிழ் மக்கள் வழங்க வேண்டும்

யாழ். மாவட்ட ஐ.தே.க.வேட்பாளர் ஸ்ரீகஜன்

யாழ்ப்பாணம், மார்ச்16

யாழ்.குடாநாட் டில் ஐக்கிய தேசி யக்கட்சியில் மகேஸ் வரனின் அணி யின் சார்பில் போட் டியிடும் வேட் பாளர்களில் 6 பேர் நாடாளுமன்ற உறுப் பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டால் தென்பகுதியில் ஆட்சிமாற்றம் ஏற்படுவது டன் புதிய ஆட்சியில் நாம் பேரம்பேசும் சக்தியாகத் திகழமுடியும். எனவே இதற் கான ஆணையினை குடாநாட்டு மக்கள் வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் பல்வேறு துன்ப துயரங் களுக்குள் தொடர்ந்தும் வாழ வேண்டிய நிலை காணப்படுகிறது. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் இடம் பெயர்ந்த மக்களின் அவலங்கள் இன்ன மும் தீரவில்லை. இடம் பெயர்ந்த மக்க ளில் ஒரு பகுதியினர் மீளக்குடியேற்றப் பட்டுள்ள போதிலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் வழங்கப்பட வில்லை. இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களும் உரிய வசதிகளின்றிப் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

எனவே மீளக்குடியேற்றிய மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதுடன் ஏனையவர்களை உரியவசதிகளுடன் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்; தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை, அடிப்படைப் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர் தலின் போது விட்டதவறினை இனிமே லும் தமிழ் இனம் விடக்கூடாது. அதுவும் யாழ். குடாநாட்டு மக்கள் இந்த விடயத் தில் மிகவும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளு மன்றப் பொதுத் தேர்தலில் வரலாற்றுத் தவறிழைக்காது குடாநாட்டு மக்கள் தீர்க்க தரிசனத்துடன் வாக்களிக்க வேண்டும்.

ஐ.தே.க.வின் மகேஸ்வரன் அனியின் சார்பில் திருமதி விஜயகலா மகேஸ்வர னின் தலைமையில் போட்டியிடுபவர் களில் 6 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்க ளானால் தென்பகுதியில் ஆட்சி மாற்றம் ஏற்படும். ஆட்சி மாற்றம் ஏற்படுமானால் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கும் அடிப்படைப் பிரச்சினைக்கும் தீர்வினை காண முடியும். இதனை இன்று சகலரும் புரிந்து கொண்டுள்ளனர்.

குடாநாட்டில் பல சுயேச்சைக் குழுக் களைக் களமிறக்கி வாக்குகளைச் சிதறடிக் கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன. எனவே இத்தகையவர்க ளுக்கு வாக்களித்து வாக்குகளை வீணாக் குவதில் பயன் எதுவும் இல்லை. எமது சமூகம் தவறுகளை இழைத்து விட்டு பின் னர் சிந்தித்து கவலைப்படும் செயன் முறையே இன்று அரங்கேற்றப்படுகின் றது. இந்த தேர்தலிலும் நாம் வரலாற்று

தவறிழைத்தால் துன்பமும் துயரங்களுமே தொடர்கதையாகும்.

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வுத் திட்டத் தினை ஐ.தே.கட்சியே முன்வைக்கும் நிலை காணப்படுகிறது. எனவே தமிழ் மக் களுக்கு தீர்வினை வழங்ககூடிய கட்சியை ஆதரிக்க வேண்டியது குடாநாட்டு தமிழ் மக்களின் கடமையாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத் தில் எந்தவொரு தமிழரும் நிறுத்தப்பட வில்லை. எனவே குடாநாட்டிலிருந்து ஐ.தே.கட்சியின் சார்பில் தமிழ் பிரதிநிதித் துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதனால் கொழும்பிலும், ஏனைய மாவட் டங்களிலும் வசிக்கும் யாழ். குடாநாட் டில் வாக்குப்பதிவைக் கொண்ட மக்கள் கட் டாயமாக குடாநாட்டுக்கு வந்து வாக்க ளிக்க வேண்டும் இது இன்றியமையாத தாகும். அப்படியானால் தான் குடாநாட் டில் மகேஸ்வரனின் அணியின் பிரதி நிதித் துவத்தை அதிகரிக்க முடியும். இதுவே எமது பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க ஒரே வழியாகும் - என்றார். (50)

மக்கள் தலைவர் மகேஸ்வரன் விட்டுச்சென்ற பணியை தொடர்வதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறேன்

ஐ.தே.க. வேட்பாளர் துவாரகேஸ்வரன் தெரிவிப்பு

மக்கள் தலை வர் மகேஸ்வரன் விட்டுச் சென்ற பணியை நம்பிக் கையுடன் மீண் டும் தொடர்வோம்.

தமிழர் எம் சுய நிலையை, சுய கௌவரவத்தை இலங்கை நாடாளு மன்றத்தில் நிலை நாட்டிய தன்மானத் தமிழ்த் தலைவர் தி.மகேஸ்வரன் விட்டுச்சென்ற அளப்பரிய இன்னும் ஆற்றவேண்டிய பணிகளை நம்பக்கையு டன் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனது தலைவன், எனது அரசியல் வழி காட்டி எல்லாவற்றிற்கும் மேலாக எனது அண்ணண் மகேஸ்வரன் விட்டுச் சென்ற மக்கள் பணியை தம்பி என்ற வகை யில் நானும் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.க வின் யாழ். மாவட்ட வேட்பாளரும் மறை ந்த அமைச்சர் மகேஸ்வரனின் சகோதர ருமான துவாரகேஸ்வரன்.

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டவை வருமாறு:

யாழ். மக்களின் பெருவாரியான பொன் னான வாக்குகளால் மகேஸ்வரன் (எனது அண்ணண்) முதன்முறையாக தெரிவான போது ஜக்கிய தேசியக் கட்சியினால் அமைக் கப்பட்ட அரசாங்கத்தில் முக்கியமான வராகவும் இந்து கலாசார அமைச்சராகவும் யாழ். மக்களுக்கு ஆற்றிய சேவையினை தமிழ் பேசும் மக்கள் மறந்திருக்கமாட்டார் கள் என்பது 2004 ஆம் ஆண்டு கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்களின் ஆணையின் முலம் தெளிவானது. அம் மக்களின் ஆணையை ஏற்று மக்கள் பணியை தொடங்கிய மகேஸ்வரனின் தளராத ஆறாத பணியைக் கண்டு திகிலடைந்த தமிழ் ஜனநாயக வாதிகளின் துப்பாக்கி ஒன்று அவரை மரணிக்கவைத்தது. அவ ரது கொலை ஜனநாயகத்துக்கான கரும் புள்ளி மட்டுமல்ல முற்றுப்புள்ளியும் கூட. தமிழ் மக்களிடையிலும் விழுந்துள்ள முற் றுப்புள்ளியை அகற்றவே மகேஸ் வரன் (எனது அண்ணண்) அவர்களின் பாதை யில் பயணிக்க ஆரம்பித்துள்ளேன்.

அவரது பிள்ளைகளை, அவரது தொழிலை, அவரிடம் பணியாற்றிய பணி யாளர்களை, அவருக்கு வாக்களித்த மக்கள் பற்றி சிந்திக்காது செயற்பட்ட தமிழ் ஜனநாயக வாதிகளின் துருப்பிடித்த துப்பாக்கிகளுக்கு மரணத்தைக் கண்டு அஞ்சியவர்கள் அல்ல தமிழ்த் தலைவர் கள் என்பதை உணத்தியவர் மகேஸ்வரன். தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களின் கொள்கையுடன் இலங் கையின் பிரதான கட்சியான ஜக்கிய தேசி யக் கட்சியுடன் இணைந்து தமிழர்களின் சமத்துவமான அரசியல் தீர்வுக்கு பணியாற் றத் துணிந்து செயற்பட்டவர் மகேஸ்வரன் (எனது அண்ணண்) அவரது படுகொலை என்னை அவர் பணிக்காக தூண்டியது. என் அண்ணணது சிதையிலே மூட்டிய தீயே எனது கொள்கையை நெறிப்படுத்தும்.

அவரது காலத்தில் அவர் ஆற்றிய மக்கள் பணியின் தெடர்ச்சியை முன்னெ டுத்து செல்வதென்பதே எனது தலையாய கடமையாகும். ஆவரது சிந்தனையே இனி எனது பணியாகும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் சிக்கன நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சபையின் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சபையின் முன்னாள் தலைவர் பி.கனகசபாபதி சபையின் தற்போதைய தலைவர் எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோர் கேடயங்கள் வழங்கிக் கௌரவிப்பதை முதல் இரு படங்களிலும், சபையின்

(படங்கள்: நந்தன்)

கழிவகற்றும் தொட்டிகள் வழங்கப்படுகின்றன

பருத்தித்துறை.மார்ச் 16

பருத்தித்துறை நகரசபை தனது எல்லைக்குட்பட்ட பாட சாலைகளுக்கு கழிவகற்றும் தொட்டிகளை வழங்கி வருகின்றது. பாடசாலைகளின் கோரிக்கைக்கு இணங்க இக்கழிவகற்றும் தொட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (50-190)

மரண அறிவித்தல்கள்

திருமதி புஸ்பராசா சந்திரேஸ்வரி

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப் பிடமாகவும், D.G. 07, சென்.ஜேம்ஸ் பிளட், கொழும்பு-15ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராசா சந்திரேஸ்வரி நேற்றுமுன் தினம் (14-03-2010) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி-முத்தம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற கந்தமுத்து-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், புஸ்பராசாவின் மனைவியும், கீதாரஞ்சினி, ஜனார்த்தனன், கோவர்த்தனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயச்சந்திரன், கமல் ராஜ் ஆகியோரின் மாமியாரும், ஜெனுசன், வினிசன், மகிசா ஆகியோரின் பேர்த்தியும், கந்தசாமி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும், சிவராசா, சுந்தரலிங்கம், ஸ்ரீஸ் கந்தராசா, பத்மாதேவி, சந்திராதேவி, மல்லிகாதேவி ஆகி யோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2010) புதன்கிழமை காலை 8 மணியளவில் பொரளை ஜெய ரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 10 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

தொ.பே:0112540704,
0779454140

செல்வரஞ்சன் செல்வரட்ணம் (ரஞ்சன்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரஞ்சன் செல்வரட்ணம் நேற்று (15.03.2010) திங்கட்கிழமை அதி காலை கர்த்தருக்குள் நித்திரையடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் சின்னத்துரை செல்வரட் ணம்-வயலா புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், நளாயினி ராஜரட்ணத் தின் (அவுஸ்திரேலியா) அன்புச் சகோத ரனும், ஜோராஜரட்ணத்தின் (அவுஸ்திரேலியா) அன்பு மைத்துனரும், Dr.கருணை ஜீவரட்ணம் (நியுசிலாந்து), காலஞ்சென்றவர்களான ஜீவராஜா ஜீவரட்ணம், பால்ராஜ் ஜீவரட்ணம், யோகம் குணரட்ணம் (திருகோணமலை), தீபம் அருட்பிரகாசம், மலர் ஐங்கரம்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், ரஞ்சிதமலர் (வட்டுக்கோட்டை), சவுந்தரராணி (ராணி-அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் அரசரட்ணம் (அவுஸ்திரேலியா), ஜெயரட்ணம் (கனடா), பாலரட்ணம் (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் மைத்துனரும், பி.தெய்வேந்திரத்தின் அன்புக்குரியவருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.03.2010) செவ்வாய்க்கிழமை பி.ப 4 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக வட்டுக் கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
என்.ஏ.விமலேந்திரன் (அதிபர்),
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.

இல.32, கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.

(95932)

விற்பனைக்கு

நிசான் சுப்பர் சலூன் கார் 301XXX விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0774002263

விற்பனைக்கு

Ashok Leyland HN XXXX இலக்கமுள்ள ரிப்பர் விற்பனைக்குண்டு.

தொ.பே : 0771754667

விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (Triumph Tigercub)

தொடர்புகளுக்கு : 0779905557

முல்லைத்தீவு மாவட்ட பஸ் வழி அனுமதிப்பத்திரங்கள் ரத்து

யாழ்ப்பாணம்.மார்ச் 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற் போது மீள்குடியேற்றப்பட்ட மற்றும் மீள்குடியேற்றப் படுகின்ற மக்களின் நலன் கருதி முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர்களால் தற்காலிகமாக வழங்கப்பட்ட பேருந்து வழியனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் எதிர் வரும் புதன் கிழமை தொடக்கம் ரத்துச் செய்யப் படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள் ளார்.

எனவே அதற்கு முன்பதாக தற் போது சேவையில் உள்ள பேருந் தின் உரிமையாளர்கள் தமது பேருந் துக்கான வழியனுமதிப்பத்திரங்களை உரிய நடைமுறைகளுடாக முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் மேற்கொள்ளுமாறு முல்லைத் தீவு அரச அதிபர் மேலும் கேட்டுள் ளார். (50-201)

கம்பியூட்டர் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை

கம்பியூட்டர் ரைப்பிங், இன்ரநெற் & ஈ-மெயில் தெரிந்த 25 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகள் தேவை.

ஆங்கில அறிவு அவசியம் தேவை. சிங்களம் தெரிந்திருப்பின் விரும்பத்தக்கது.

17.03.2010 (புதன்கிழமை) காலை 9.00 மணிக்கும் 2.00 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

U.S. கேபிள் T.V
இல.874, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

0212227029

J.T.V பெண்கள் அழகு நிலையம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே! கடந்த நான்கு வருடங்களாக ஆடிய பாதம் வீதியில் இயங்கி வந்த எமது அழகு நிலையம் தற்போது சம்பியன் லேன் (நந்தாவில் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரியில் இயங்கி வருகின்றது என்பதனை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது தொ.பே இல. 021 300 7431.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜஸ்தானில் ஆற்றில் பஸ் கவிழ்ந்தது; 26 மாணவர்கள் பலி; 38 பேர் காயம்!

ஜெய்ப்பூர்,மார்ச் 16

ராஜஸ்தானில் கல்விச் சுற்றுலா சென்ற பஸ் பாலத்திலிருந்து விழுந்து விபத்துக் குள்ளானதில் 26 மாணவர்கள் பலியாகினர். மேலும் 38 பேர் காயமடைந்தனர்.

சவாய் மாதோபூர் - தௌஸா மாவட்டங்களின் எல்லைப் பகுதியில் நேற்று அதிகாலையில் இந்த விபத்து நிகழ்ந்தது.

பலியான மற்றும் காயமடைந்த அனைவரும் ஜலாவாரிலுள்ள ஒரு ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்குவர்.

இச்சம்பவம் குறித்த மேலதிக விவரங்கள் வருமாறு -

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 'மதர் இந்தியா' ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தனி பஸ் மூலம் சுற்றுலாச் சென்றனர். ஆக்ராவுக்குச் சென்று பின்னர் மதுராவில் இருந்து திரும்பிய போது சவாய்மதோபூர் பகுதியில் உள்ள ஆற்றில் பஸ் கவிழ்ந்தது. இதில் ஆற்றில் மூழ்கி 26 பேர் உயிரிழந்தனர். இதில் 11 பேர் மாணவிகள் ஆவர். காயத்துடன் உயிர் பிழைத்த 38 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தில் இந்தச் சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆற்றில் விழுந்த பஸ்ஸை மீட்கும் பணி துரிதமாக நடந்து வருகிறது.

பல்வேறு பகுதிகளுக்கு சென்று குறிப்பாக முக்கிய கோயில்களுக்கு சென்று தரிசனம் செய்து வந்தபடி இருந்தோம். சுற்றுலாவை மிக மகிழ்ச்சியாக முடித்துத் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்தச் துயரச்சம்பவம் நடந்துள்ளது. எங்களது சக நண்பர்களை இப்படி இழப்போம் என்று நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை என உயிர் பிழைத்தவர்களில் ஒரு மாணவர் கூறினார்.

இந்தியாவில் வீதி விபத்துகள் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன என புள்ளிவிவரக் குறிப்பு தெரிவிக்கிறது. இது போன்ற விபத்துகளைத் தவிர்க்க விழிப் புணர்வுப் பிரசாரம் அதிகரிக்க வேண்டும்.

1,330 குறளையும் ஒப்பிக்கும் இரண்டாம் வகுப்பு மாணவி

காஞ்சிபுரம்,மார்ச் 16

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 2ஆம் வகுப்பு மாணவி ஒருவர் 1330 திருக்குறளையும் மனப்பாடமாகச் சொல்லி அனைவரையும் அசத்துகிறார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் சுற்றுலாப் பிரிவில் வேலை பார்த்து வருபவர் சி.சங்கர். இவர் காஞ்சிபுரத்தில் வசிக்கிறார். இவரது மனைவி கனிமொழி பொன்னேரியில் உள்ள ஓர் இடைநிலைப் பாடசாலையில் ஆசிரியராக உள்ளார்.

இவர்களின் மகள் கவிப்பிரியா (வயது - 7). இவர் காஞ்சிபுரம் மாமல்லன் மெட்ரிக் மேல்நிலைப் பாடசாலையில் 2ஆம் வகுப்பு படிக்கிறார். இவர் 1330 திருக்குறளையும் மனப்பாடமாகக் கூறி அனைவரையும் அசத்துகிறார். இதேபோல் எந்த திருக்குறளைக் கேட்டாலும் அதைச் சரியாகக் கூறுகிறார். இம்மாணவியின் இந்த அசாத்திய அறிவு காஞ்சிபுரத்திலுள்ள பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

கவிதைக்குப் புதிய வடிவம் தந்தவர் கண்ணதாசன்; சிதம்பரம் புகழாரம்

காரைக்குடி,மார்ச் 16

படித்தவர்கள் மட்டுமல்ல, படிக்காதவர்கள் மற்றும் கேள்வி ஞானத்தில் புரிந்துகொண்டு வாழ்பவர்களுக்கும் புரியும் வகையில் தமிழ்க் கவிதைக்கு புதிய வடிவம் தந்தவர் கவிஞர் கண்ணதாசன் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் புகழாரம் சூட்டினார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி கவியரசு கண்ணதாசன் மணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கண்ணதாசனின் 21 ஆவது ஆண்டு நினைவு விழாவில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

55 வயதில் சரித்திரப் புகழை நாட்டி, நம்மிடமிருந்து மறைந்தவர் கவிஞர் கண்ணதாசன். எல்லோர் நாவிலும் பாடல்களைத் தவழச் செய்த சமகாலத்தில் வாழ்ந்த கவிஞர் அவர்.

இலக்கியம், உரைநடை, கவிதை, நாடகம் என எதுவாக இருந்தாலும், காலத்துக்கு ஏற்ப அது அமைந்தால்தான் நிலைத்த இலக்கியமாக இருக்கும். உதாரணமாக 1960, 1970 களுக்கு முன்பு இருந்த நாடக அமைப்பை தற்போது அப்படியே அரங்கேற்றினால், அதனைப் பார்க்க யாரும் விரும்பமாட்டார்கள். காலத்திற்கேற்ப இலக்கியத்தின் முகம் மாறவேண்டும்.

அப்படி முகம் மாறும்போது இலக்கியத் தரம் இல்லை என்று யாரும் உறுதி செய்ய முடியாது. கவிதையைப் பொறுத்தவரை பாரதியார், பாரதிதாசன் போன்றோர் தங்கள் காலத்துக்கேற்ப எழுத்து முறையை மாற்றிக் கொண்டதால், அவை நிலைத்து நிற்கின்றன. பாரதிதாசன் பாடல்கள் தொடர்ந்து ஒலிக்கின்றன. அவர்கள் காலத்துக்குப் பிறகு வந்த படித்தவர் மட்டுமல்ல, படிக்காதவர்கள் மற்றும் கேள்வி ஞானத்தையே நம்பியுள்ளவர்களுக்கும் புரியும் வகையில் தமிழ்க் கவிதைக்குப் புதிய வடிவம் தந்தவர் கண்ணதாசன். பேச்சைக் கூட கவிதை வடிவாக்கினார்.

பட்டினத்தார் பாடல் புரியாதவர்களுக்கும் புரியும் வகையில், 12 வார்த்தைகளைக் கொண்டு வீடுவரை உறவு, வீதி வரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசி வரை யாரோ என்ற சொற்கள் சாரத்தால் கவிதை தந்தவர் கண்ணதாசன்.

கண்ணதாசன் எழுத வேண்டும், டி.எம். சௌந்தரராஜன் பாடவேண்டும், சிவாஜி கணேசன் வாயசைக்க வேண்டும். அப்படிப்பட்ட பாடல் நூற்றாண்டுகள் நிலைத்து விடும். அவரது பாடல்கள் நிலைத்திருக்கின்றன. கண்ணதாசன் இப் பகுதியில் பிறந்தவர் என்பது நமக்கு பெருமைக்குரியது.

அவரை விஞ்சிய கவிஞன் சம காலத்தில் இன்னும் தோன்றவில்லை. கண்ணதாசனை ஞானக் கண்களாக ஏற்று பல கவிஞர்கள் தோன்ற வேண்டும் - என்றார்.



சிவகங்கை அருகே கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோயிலுக்கு 10 கிலோ தங்கத்திலான குதிரை வாகனம் செய்யப்பட்டுள்ளது. அதனை படத்தில் காணலாம்.

இந்தியச் செய்திகள்

இந்தியாவில் தாக்குதல் நடத்த தலிபான் தீவிரவாதிகள் திட்டம்

புதுடில்லி,மார்ச் 16

இந்தியாவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்த தலிபான்கள் 130 பேருக்கு லஸ்கர் - இ - தொய்பா தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தீவிர பயிற்சியளித்து வருகின்றனர் எனத் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

தீவிரவாதிகளின் போரால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானில் சுகாதாரம், மின்சக்தி, வீதிகளை மேம்படுத்துதல், சமுதாய நலத்திட்டங்கள் போன்ற பல்வேறு பணிகளில் இந்தியாவைச் சேர்ந்த 4 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தச் சீரமைப்புப் பணிகளில் ஈடுபடும் இந்தியர்களையும், ஆப்கானிஸ்தானிலுள்ள இந்தியத் தூதரகங்களையும் குறிவைத்து தலிபான் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் சென்று வரும், ஏர் இந்தியா நிறுவன விமானங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரமாக அமுல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி ஏர் இந்தியா விமானங்களுக்கு இரட்டை அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

தற்போது வாரத்திற்கு 6 தடவை ஏர் இந்தியா விமானங்கள் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து இந்தியா வருகின்றன. இந்த விமானங்கள் அனைத்திலுமே பயணிகள் அதிக எண்ணிக்கையில் இந்தியாவிற்கு வருகின்றனர்.

தற்போது காபூல் நகர விமான நிலையத்தில் பயணிகள் மற்றும் லக்கேஜ் சோதனைகளை ஆப்கானிஸ்தானிய அதிகாரிகள் மட்டுமே கவனித்து வருகின்றனர்.

இதைப் பயன்படுத்திக்கொண்டு தலிபான், அல் குவைதா, லஸ்கர்-இ-தொய்பா போன்ற தீவிரவாத அமைப்பினர் ஏர் இந்தியா விமானங்களை கடத்திச்செல்லும் வாய்ப்பும், வெடிபொருட்களை எடுத்துச் செல்லும் ஆபத்தும் நிறைய இருக்கிறது எனவும், எனவே ஏர் இந்தியா விமானப் பாதுகாப்பு குறித்த விடயத்தில் இந்தியா கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என்று காபூலில் உள்ள இந்திய மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதனையடுத்து, காபூலில் இருந்து இந்தியாவுக்கு வரும் விமான பயணிகளையும், அவர்களின் லக்கேஜுகளையும் ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் சோதனை நடத்தி முடித்த கையுடன் இரண்டாவது தடவையாக இந்திய பாதுகாப்பு ஊழியர்களும் சோதனையிடுவார்கள். இதுதவிர, காபூலில் இருந்து இந்தியாவுக்கு ஏர் இந்தியா விமானங்களில் விமான படை அதிகாரிகளும், விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்பு பணியில் நியமிக்கப்படுவர்.

எண்ணெய்க் கிடங்குகளை தகர்க்கச் சதி மும்பையில் 2 பயங்கரவாதிகள் கைது!

மும்பை,மார்ச் 16

மும்பையில் மீண்டும் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த 2 பயங்கரவாதிகளை மகாராஷ்டிர சிறப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானிலிருந்து உத்தரவு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லத்தீப் என்ற குட்டு (வயது - 29), ரியாஸ் அலி (வயது - 23) ஆகிய இருவரும் மும்பையில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தமை விசாரணையில் தெரிய வந்தது.

அவர்கள் இருவரும் மட்டுங்கா ரயில் நிலையத்தில் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். மும்பையில் எந்தெந்த இடங்களில் அவர்கள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தனர் என்பதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அதன்படி பாந்த்ராவில் ஓ.என்.ஜி.சி. (எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்) அலுவலகம் மற்றும் எண்ணெய் கிடங்குகள், போரிவழியில் உள்ள தக்கர் மால், தெற்கு மும்பையில் உள்ள மங்கல் தாஸ் சந்தை ஆகிய இடங்களில் குண்டு வெடிப்பு நடத்தவும் தீ வைக்கவும் இவர்கள் திட்டமிட்டிருந்தமை விசாரணையில் தெரியவந்தது.

இவர்களுக்கு பாகிஸ்தானில் உள்ள ஒருவரிடமிருந்து அவ்வப்போது உத்தரவுகள் வந்துள்ளமையும் விசாரணையில் வெளியாகி உள்ளது. அவரை 'அங்கிள்' (மாமா) என்றே இவர்கள் அழைக்கின்றனர்.

பாகிஸ்தானில் இருந்து உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அந்த அங்கிள் யார் என்று விசாரித்து வருகின்றனர். அவரை அடையாளம் காண மத்திய உளவுப் பிரிவின் உதவியும் கோரப்பட்டுள்ளது என்று மகாராஷ்டிரப் பயங்கரவாத எதிர்ப்புப் படை தலைவர் ரகுவம்சி தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட இருவரில் அப்துல் லத்தீப், மும்பை பாந்த்ராவில் வசித்து வருகிறார். ரியாஸ் அலி தகிசார் பகுதியைச் சேர்ந்தவர்.

பாகிஸ்தானில் பயங்கரவாத பயிற்சி பெறுவதற்காக மும்பையிலிருந்து அனுப்பப்படும் இளைஞர்களுக்கு கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கும் பணியை இவர்கள் செய்து வந்ததும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர்கள் இருவரும் அதிகம் படிக்க வில்லை எனினும் கணினியை பயன்படுத்தத் தெரிந்து வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டுக்கு ஹிந்தி தேவையில்லை

முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை,மார்ச் 16

தமிழ்நாட்டுக்கு ஹிந்தி தேவையில்லை. ஒரு மொழிக்காரர்கள், இன்னொரு மொழிக்காரர்களை ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையை நாங்கள் விரும்புவதில்லை - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு முதல்வர் கருணாநிதி ஞாயிற்றுக்கிழமை விருந்தளித்தார்.

அந்த நிகழ்ச்சியில் அவர் பேசியவை வருமாறு -

இந்த நிகழ்ச்சி கடந்த பல நாள்களாக நாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்குக் கிடைத்துள்ள வெற்றியைப் பாராட்டி மகிழவும், இந்த வெற்றிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி சொல்லவும் நடைபெறுகின்ற நிகழ்ச்சி.

கோவா, பஞ்சாப் போன்ற பல மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டு, மகிழ்ச்சிப் பெருவெள்ளத்திலே எங்களையும் ஆழ்த்தி, அவர்களும் ஆழ்ந்திருக்கிறார்கள்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்த அவரவர்களுக்குத் தெரிந்த, விரும்புகின்ற மாநிலத்துப் பாடல்களை இங்கே பாடினார்கள்.

'ஹிந்திப் பாடல்களைப் பாடுகிறார்களே' என்று பத்திரிகையாளர் ஒருவர் (ராம்) சொன்னார். பாட்டுக்கு ஹிந்தி பரவாயில்லை.

மற்ற மாநிலங்களோடு உறவு கொள்கின்ற - தொடர்பு கொள்கின்ற கருவியாக மொழி இருந்தால் அதில் தவறில்லை. ஒரு மொழிக்காரர்கள், இன்னொரு மொழிக்காரர்களை ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையைத்தான் நாங்கள் விரும்புவதில்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஞானச்சுடர்'

விநியோகிக்க ஆள்கள் தேவை

1. வலிகாமம்.
2. வடமராட்சி.

தபாலகங்களில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்.

விபரங்களுக்கு:
சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

(C/565740)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சாந்தினி சிவலோகநாதன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **நா.ராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
பா/கதிரிப்புரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை. (C/565748)

போட்டிப்பரீட்சை வழிகாட்டிகள் பிரபல புத்தக நிலையங்களில் விற்பனையில்

தொகுப்பு: த.தவசேகர்

★ பல்கலைக்கழக விசேட கற்கைகள் 250/=
★ கல்விசார் பரீட்சைகள் 250/=
★ முகாமைத்துவ உதவியாளர் 250/=
★ பொது உளச்சார்பு, பொது அறிவு 300/=

பல்கலைக்கழக விசேட கற்கைகள் தெரிவுக்கான வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் (யாழ்ப்பாணம்) நடைபெறுகின்றன.

தேவை

உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை செய்வதற்கு ஆள் தேவை.

தொடர்பு: 0771751495 (95946)

முகாமைத்துவ கற்கைநெறிப் பதிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில்நடைபெறவுள்ள முகாமைத்துவ கற்கைநெறிக்குரிய பதிவுகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

எனவே இக்கற்கை நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் தவறாது பதிவை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் நடத்தப்படவுள்ள வணிக நிலையங்களுக்கான இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ள வணிக நிலையங்களுக்கான இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. மன்ற எல்லையிலிருந்து 3Km சுற்றாடலில் வசித்தல் வேண்டும்.
2. வயது 18முதல் 45வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. கல்வித்தகைமை O/L வரை கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை 23.03.2010ஆம் திகதிக்கு முன்னர் மன்றப்பணியகத்தில் ஒப்படைக்கவும். மேலதிக விவரங்களை மன்றப்பணியகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: முன்பு மன்றத்தின் பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

(சி/565746)

மஹாஜன சம்பத

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல 2216 திகதி 2010.03.14

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்

R 7 7 5 3 7 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

சம்பரிசு	R	7	7	5	3	7	2				
								தொ.	10,030,144/=	பரிசு	-
1ம் பரிசுகள்		7	7	5	3	7	2	தொ.	20,00,000/=	பரிசுகள்	01
2ம் பரிசுகள்			7	5	3	7	2	தொ.	100,000/=	பரிசுகள்	07
3ம் பரிசுகள்				5	3	7	2	தொ.	10,000/=	பரிசுகள்	61
4ம் பரிசுகள்					3	7	2	தொ.	1,000/=	பரிசுகள்	581
5ம் பரிசுகள்						7	2	தொ.	100/=	பரிசுகள்	5,885
6ம் பரிசுகள்							2	தொ.	20/=	பரிசுகள்	58,821

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

7ம் பரிசுகள்	7	7	5	3	7	தொ.	10,000/=	பரிசுகள்	06
8ம் பரிசுகள்	7	7	5	3		தொ.	1,000/=	பரிசுகள்	64
9ம் பரிசுகள்	7	7	5			தொ.	100/=	பரிசுகள்	603
10ம் பரிசுகள்	7	7				தொ.	50/=	பரிசுகள்	5,833
11ம் பரிசுகள்	R					தொ.	20/=	பரிசுகள்	23,512

அடுத்த வார சீட்டிழுப்பில் வெல்லப்படும் பரிசுத் தொகை தொ. 10,030,144.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை தொ. 6,602,110.00

தேசிய லொத்தர் சபை

முடிவுகளை அறிய www.nlb.lk

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுகின்ற பட்டம் பெறுகையாளர்களுக்கான அறிவித்தல்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் மாணவர்களின் வளர்ச்சிக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 26, 27, 28ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்ற பட்டமளிப்பு நிகழ்வின் போது இதுவரை காலமும் நிகழ்ந்திராத அளவில் மிகவும் பிரமாண்டமான முறையில் யாழ்.நகரின் முன்னோடி புகைப்பட நிறுவனம் ஒன்றுடன் இணைந்து புகைப்பட நிலையம் ஒன்றினை அமைப்பதோடு, அனுபவம் வாய்ந்த போதிய அளவான் நடமாடும் புகைப்படப்பிடிப்பாளர்களையும் ஒழுங்கு செய்துள்ளோம். இவர்களை பல்கலைக்கழக வளாகப்பகுதியில் எங்கும் அழைத்துச் சென்று படம் பிடிக்க முடியும் என்பதுடன், இங்கு எடுக்கப்படும் டகைப்படங்கள் குறைந்த கட்டணத்தில் உடனுக்கு உடன் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதனை நாம் மாணவர்களின் வளர்ச்சிக்காக செய்ய உள்ளதால் நீங்கள் பிரத்தியேக படப்பிடிப்பாளர்களை அழைத்துவராது எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தே.வேணுகோபாலன்,
பொருளாளர்,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/565745)

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

கிராமிய வங்கிகளின் மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2008/2009ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இணுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிளான் ஆகிய கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கீழ்க் காட்டப்பட்ட திகதிகளில் கிராமிய வங்கியிலுள்ள தங்களின் மீதிகளை சரிபார்த்துக் கொள்ளும்பொருட்டு தங்களின் கையேட்டுப் புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றை நேரில் சமர்ப்பித்து, மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கிராமிய வங்கியின் பெயர்	திகதி	கையேடு உறுதிப்படுத்தும் இடம்
இணுவில் கிராமிய வங்கி	18.03.2010 வியாழன்	இணுவில் கிராமிய வங்கி மு.ப. 9.30 - பி.ப 3.30
சுன்னாகம் கிராமிய வங்கி	19.03.2010 வெள்ளி	சுன்னாகம் கிராமிய வங்கி மு.ப. 9.30 - பி.ப 3.30
ஏழாலை கிராமிய வங்கி	22.03.2010 திங்கள்	ஏழலை கிராமிய வங்கி மு.ப 9.30 - பி.ப 3.30
குப்பிளான் கிராமிய வங்கி	23.03.2010செவ்வாய்	குப்பிளான் கிராமிய வங்கி மு.ப 9.30 - பி.ப 3.30

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.
15.03.2010

(சி/565744)

தலைவர்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010

மாபெரும் பொதுக்கூட்டம்
(இலங்கை தமிழரசுக் கட்சி)

காலம்: 18.03.2010 மாலை 4.30 மணி.
இடம்: தொல்புரம் வழக்கம்பரை
முத்துமாரி அம்மன் கோயிலடி, சுழிபுரம்.

பிரதான பேச்சாளர்கள்

★ இரா.சம்பந்தன் (தலைவர், இலங்கை தமிழரசுக்கட்சி)
★ மாவை சேனாதிராஜா (வேட்பாளர், செயலாளர், இலங்கை தமிழரசுக்கட்சி)
★ Dr.ஜெயகுலராஜா (வேட்பாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,முல்லைத்தீவு)

மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர்கள்...!

அனைவரும் திரண்டு வருக! பேராதரவு தருக!!

உதயன்
நிர்வாக இயக்குநர்
எ.சரவணபவன்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 * 04 * 1924
மறைவு 27 * 03 * 2009

சின்னக்குட்டியர் தம்பிப்பிள்ளை

தோற்றம் 27 * 01 * 1932
மறைவு 23 * 02 * 2009

தம்பிப்பிள்ளை சின்னத்தங்கம்

கடந்த ஆண்டு (2009) இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வங்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (16.03.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அன்னார்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நி.மு :
கலவெட்டித்திடல்,
புலியம்பொக்கணை.

த.மு :
மீசாலை வடக்கு,
இராம்பாவில்.

குடும்பத்தினர்.

(C/565942)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு தசாப்தங்களின் பின்னர்

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பழைய இடத்தில் நேற்று முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்தது

யாழ்ப்பாணம் மார்ச் 16

கடந்த 20வருடங்களின் பின்னர் தெல்லிப்பழை பொது வைத்தியசாலை மீண்டும் சொந்த இடத்தில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த தெல்லிப்பழை பொது வைத்தியசாலை,தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது. அண்மைக்கால மாற்றங்களை அடுத்து பாதுகாப்புப் படையினர் பொது வைத்தியசாலை கட்டடங்களைப் புனரமைக்க அனுமதித்திருந்தனர். அதைத் தொடர்ந்து அந்தக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டன. புனரமைக்கப்பட்ட வைத்தியசாலை நேற்று வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் குத்துவிளக்கேற்றி வைத்திய சாலையினை ஆரம்பித்து வைத்தார். முதற் கட்டமாக காலை 8மணிமுதல் பிற்பகல் 4மணிவரை வெளிநோயாளர் பிரிவும் 'கிளினிக்'குகளும் செயற்படும். தொடர்ந்து விடுதிகள், வாசஸ்தலங்கள் புனரமைக்கப்பட்டபின் முழுமையாக வைத்திய சாலை இயங்கும் எனத் தெரிவிக்கப் பட்டது. நேற்றைய நிகழ்வில் யாழ்.சுகாதார திணைக்கள மலேரியா தடுப்புப் பிரிவு பொறுப்பாளர் டாக்டர்க.தா. சிவபாதம்,மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் எஸ்.ஞானசோதி, வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி எஸ்.சிவராணி, யாழ். படைகளின் தளபதி, மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-1-120)

கனகரத்தினம் ம.வி. புதிய கட்டடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 16

யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் இன்று காலை 8.30 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். (ஒ-1)

நான்கு வருடங்களின் பின்னர்

பளை மத்திய கல்லூரி மீண்டும் அதே கட்டடத்தில் இயங்குகின்றது

பருத்தித்துறை மார்ச் 16

பளை மத்திய கல்லூரி மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. கடந்த 10ஆம் திகதி அரச அதிகாரிகள் கலந்துகொண்ட சம்பிரதாய பூர்வமான ஆரம்ப நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ்.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. போரின் காரணமாக 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி யுடன் இக் கல்லூரியின் செயற்பாடுகள் தடைப் பட்டன. தற்போது பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மக்கள் மீளக்குடி யேற்றப்பட்டு வருவதை அடுத்து மீண்டும் இக் கல்லூரியை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் கட்டடங்கள் சேதமடைந்துள்ள போதிலும் மீளக்குடியேறிய மாணவர்களின் நலன்கருதி தற்காலிக ஏற்பாடுகளுடன் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் மீளவும் கல்லூரி இயக்கத் தொடங்கியுள்ளது.

அமைச்சர்களுக்கும் எம்.பிகளுக்கும் ஐ.தே.கட்சி ஆட்சியில் சம சம்பளம்

ரணில் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் அமைச்சர்களுக்கு குறைந்த சம்பளமே வழங்கப்படும் - என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க விக் ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

தற்போது அமைச்சர்களுக்குக் கூடுதலான சம்பளமும், நாடாளுமன்ற உறுப்பினர் களுக்குகுறைந்த சம்பளமும் வழங்கப்ப டுகிறது. இந்த நிலைமையை மாற்றி சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரே யளவு சம்பளங்களை வழங்க தமது அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை ரீதியான தீர்மானமொன்றின் மூலம் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,எந்ததெந்த வழிகளில் நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியுமோ அந்தந்த வழிகளில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

வன்னி மாணவர் முன்னைய அதிபர்கள் ஊடாகவே பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிப்பு

அச்சுவேலி, மார்ச் 16

வன்னிப்பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்று தற்பொழுது யாழ். மாவட்டத்தில் கல்விகற்றுக்கொண் டிருக்கும் மாணவர்கள் தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தாங்கள் முன்னர் கற்ற பாடசாலை அதிபர்கள் ஊடாகவே விண்ணப் பிக்க வேண்டும்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாணக்கல்வித்திணைக்களம் செய்திருப் பதாக வடக்கு மாகாண கல்விப்பணிப் பாளர்வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வடக்கு மாகாண கல் விப்பணிப்பாளர் மேலும் தகவல் தெரி விக்கையில்-

மாணவர்கள் தாங்கள் நிரந்தரமாகக்கற்ற பாடசாலைகள் ஊடாக பொதுப்பரீட்சைக் குத் தோற்றுவதன் மூலம் பரீட்சைப் பெறுபேறுகளை உரிய முறையில் பெற் றுக்கொள்வதற்கும் குறித்த மாவட்ட நிலைக்கான வெட்டுப்புள்ளி தகைமையைப் பெறுவதற்கும்சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இதனைத் கருத்தில் கொண்டு குறித்த மாணவர்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் எந்தப் பாடசாலைகளில் கல்வி கற்றார் களோ அந்தப் பாடசாலை மூலமே பரீட் சைக்கு விண்ணப்பித்து அதற்குரிய பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எனவே குறித்த பாட சாலைகளின் அதிபர்கள் பரீட்சை விண் ணப்பங்களுடன் மாணவர்களை நேரில் சந் தித்து பரீட்சை விண்ணப்பத்தில் கையொப் பங்களைப் பெற்றுக்கொள் வார்கள்.

இதற்கு ஏற்ற வகையில் வலயக்கல் விப்பணிப்பாளர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களின் முழுப்பெயர், பிறந்த திகதி, தற்பொழுது கல்வி கற்றுக்கொண் டிருக் கும் பாடசாலை, இடம்பெயர்வதற்கு முன் னர் கல்வி கற்ற பாடசாலை உள்ளிட்ட விவரங்களையும்-

ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைக்குத் தோற் றும் மாணவர்களின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம், பரீட் சைக்குத் தோற்றும் பாடங்களின் விவரம், தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை, இடம்பெயர்வதற்கு முன்னர் கல்வி கற்ற பாடசாலை உள்ளிட்ட விவரங்களைத் திரட்டிக் கொள்ளவேண்டும். ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்கள் தோற்றவிருக்கும் பாடங்களை உரிய முறையில் சரிபார்த்து விண்ணப் பத்தில் கையொப்பங்களை இடவேண்டும்.

மாணவர்கள் தமது நிரந்தர பாட சாலை களின் அதிபர்களைச் சந்திக்க வேண்டிய இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப் படும் எனத்தெரிவித்தார்.

குறித்த மாணவர்கள் பரீட்சைகளுக் குத் தோற்றுவதற்கான பயண ஒழுங்குகள் மற் றும் இயல்பு நிலையில் தங்கியிருந்து பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அவர்களுக்கான உணவு வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் செய்து கொடுக் கவுள்ளது. (ஒ-11)

ஷேவாக் துருப்பாட்டத்தில் அதிரடி; ராஜஸ்தானை வீழ்த்தியது டெல்லி

அகமதாபாத் மார்ச் 16

அதிரடி வீரர் ஷேவாக்கின் சிறப்பான ஆட்டத்தினால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது டெல்லி டேர் டெவில்ஸ் அணி.

இந்தியாவில் நடைபெற்றுவரும் 3ஆவது ஐ.பி.எல். தொடரின் 6ஆவது போட்டி அகமதாபத்தின் சர்தார் பட்டேல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இப்போட்டியில் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ் தான் றோயல்ஸ் அணியும் கம்பீர் தலைமையிலான டெல்லி டேர்டெவில்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி டேர்டெவில்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ் தான் றோயல்ஸின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக அஷ்நோட்கரும் ஹிரேம் ஸ்மித்தும் களமிறங்கினர். அஷ்நொட்கர் 5ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நானெஸ் வீசிய பந்தை அடிக்க முற்பட்டு டில்ஷானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்த ஒஜா 3 பௌண்டறிகளுடன் 18ஓட்டங்களைப் பெற்று மிஸ்ராவின் வேகத்தில் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார். அடுத்து

வந்த யூசுப்பதான் ஒட்டமெதனையும் பெறாத நிலையில் பெவிலியன திரும்பினார்.

நான்காவது விக்கெட் இணைப்புக் காக ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்தார் ஜுன் ஜுன்வாலா, ஸ்மித் 14 பந்துகளில் 24ஓட்டங்களைப் (4பௌண்டறிகளுடன்) பெற்று ஆட்டமிழந்தார். ஜுன்ஜுன்வாலாவுடன் ஜோடி சேர்ந்த டோக்ரா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ராஜஸ்தான் றோயல்ஸின் ஓட்ட எண்ணிக்கை மெதுவாக உயரத் தொடங்கியது.

டோக்ரா 29ஓட்டங்களை ஒரு பௌண்டறி 2சிக்ஸர்கள் அடங்கலாகப் பெற்ற நிலையில் 'ரன்அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்துக் களமிறங்கிய மஸ்கரனாஸ் 3ஓட்டங்களுடன் விக்கெட் காப்பாளர் கார்த்திக்கினால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப் பட்டார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் 20ஓவர்கள் நிறைவில் 6விக்கெட்டுக்களை இழந்து 141ஓட்டங்களைப் பெற்றது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜுன்ஜுன் வாலா 5 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 53ஓட்டங்களையும் யுனியால் 4ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். பந்து வீச்சில் மஹறூப், நானெஸ், மிஷ்ரா, சங்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

142ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி டோடெவில்ஸ் அணியின் ஆரம்ப வீரர் களாக கம்பீரும் ஷேவாக்கும் களமிறங் கினர். கப்பீர் 9ஓட்டங்களுடன் ஸ்மித் திடம் பிடிகொடுத்து வெளியேற டில் ஷான் களமிறங்கினார். அவர் முதல் பந்திலேயே ஒஜாவிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார். அதிரடி வீரர் ஷேவாக் அதிரடியாக ஆட அவருடன் ஜோடி சேர்ந்தார் ஏ.வி.டி.வில்லியஸ் அவர் 15ஓட்டங்களுடன் வெளியேற,அதிரடி வீரர் ஷேவாக் 34பந்துகளைச் சந்தித்து 8பௌண்டறிகள் 5சிக்ஸர்களை விளாசி 75ஓட்டங்களைப் பெற்று பட்டேலின் பந்தில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

டினேஸ் கார்த்திக்-மன்காஷ் ஜோடி வெற்றிக்காக 33ஓட்டங்களை இணைப் பாட்டமாகப் பெற்றது. இதில் கார்த்திக் 2பௌண்டறிகளுடன் 22ஓட்டங் களுடனும் மன்காஷ் 11ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

டெல்லி டேர்டெவில்ஸ் 17.1ஓவர்களில் 4விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து 142ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் மஹ்கரனாஸ் 2விக்கெட்டுக்களையும் பட்டேல் ஒரு விக்கெட்டினையும் கைப்பற் றினர். இவ்வெற்றியின் மூலம் இத் தொடரில் தொடர்ந்து 2வெற்றிகளைப் பெற்ற டெல்லி அணி முதலிடத்தில் உள்ளது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக ஷேவாக் தெரிவானார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நேர்த்தியை நிறைவேற்ற நாகதீபவுக்கு கால்நடையாக யாழ்.வந்த இரத்தினபுரி இளைஞர்

தமது சோகமான அனுபவத்தை விவரிக்கின்றார்

யாழ்ப்பாணம் மார்ச் 16

மனிதனாகப் பிறந்து வாழ்க்கையில் பட்ட துன்பம் போதும். அடுத்த பிறவியி லாவது கடவுளுக்குத் தொண்டு செய்யக் கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கவேண்டும்.

இவ்வாறு காலி தேவேந்திர முனையிலி ருந்து கால்நடையாக யாழ்ப்பாணம் வந் துள்ள கோட்டகொடகே டொன் இந்திரகுமார என்ற 32வயதுடைய இளைஞர் உதயனுக்குத் தெரி வித்தார். அந்த இளைஞன் உதயன் பத் திரிகை அலுவலகத்தை தேடிவந்து மேலும் நேரில் தெரிவித்தவை வருமாறு,

களுத்துறை மாவட்டம் மொறப்பிட்டிய பகு தியில் பிறந்த நான், திருமணம் செய்த நாள் முதலாக இரத் தினபுரி மாவட்டத்தில் வாழ்ந்து வருகின் றேன். மேசன் தொழில் செய்து எனது குடும் பத்துக்காக உழைத்து வருகின்றேன். எனக்கும் மனைவிக்குமிடை யில் சிறியள வில் சண்டைவருவது உண்டு. அதனை எனது மாமியார் பெரிதுபடுத்தி எங்களுக் கிடையில் பிரிவை ஏற்படுத்தும் நட வடிக் கைகளை மேற்கொள்கின்றார்.இதனால் அதிக மன உளைச்சல் அடைந்த நான் நேர்த்தி ஒன்றை நிறைவேற்றத் தீர்மானித் தேன். காலி தேவேந்திர முனையிலிருந்து நயி னாதீவிலுள்ள நாகதீபத்துக்கு கால்நடை யாக நடந்து வந்து நேர்த்தியை நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானித்தேன். அதற்கென எட்டுவகையான நேர்த்திக்குரிய பொருள்க ளையும் எடுத்து வந்தேன். கடந்த முத லாம் திகதி எனது நடை பயணத்தை ஆரம் பித்த நான் 14 ஆம் திகதி நேர்த்தியை நிறைவு செய்துள்ளேன். இரவு நேரங்களில் பொலிஸ் நிலையங்களிலும் பொதுக்கட்டடங்களிலும் தங்கினேன். பகல் வேளை நாளாந்தம் சராசரி 50கிலோமீற்றர் தூரம் நடப்பேன். யாழ்ப் பாணம் வந்த என்னிடம் சிலர் எனது நேர்த்தி குறித்து உதயன் பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கச் சொன்னார் கள். அவர்கள் கூறிய தற்கு இணங்கவே நான் இன்று உதயன் அலுவலகத்திற்கு வந்தேன் -என்றார்.

அவர் நீண்ட தூரம் நடந்து வந்தவர் போலன்றி மிகுந்த உற்சாகமாகக் காணப் பட்டார். (ஒ-14)

மாற்றுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் வவுனியாவில் சாஸ் திரிகூழாங்குளம் சித்திவிநாயகர் விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்ற தேர் தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய தேர்தல் கூட்டத்தில் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுகத்தை அடுத்து சம்பந்தன் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ் ஞாபனத்தில் அடங்கியுள்ள கருத்துக்கள் தொடர்பாக பல்வேறுவிதமான வியாக் கியானங்கள் வெளியாகியுள்ளன.

தனிநாட்டுக்கோரிக்கையை கைவிட்டு விட் டதாக தமிழர்களில் சிலர் கூறுகின் றார்கள். தனிநாட்டு கோரிக்கையை வெளிப்படுத்துவதாக எமது விஞ்ஞா பனம் அமைந்திருப்பதாக சிங்களவர்கள் கூறுகின்றார்கள்.

நாம் சுயநிர்ணய உரிமை எனக்கூறுவ தில் தன்னாட்சியும் அடங்கும். தற் போதுள்ள சூழலில் தனிநாடு கேட்க முடி யாது. அதன் காரணமாக சுயநிர்ண உரி மையைக் கேட்கின்றோம்.

அண்மையில் லண்டனில் நடை பெற்ற உலகத்தமிழர் பேரவையின் மாநாட்டில் கூட இதே கருத்துத்தான் தெரி விக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மில்லிபான்ட்டும் இதே கருத்தைத்தான் கூறியுள்ளார். ஐரோப்பிய ஒன்றியமும் இதே கருத்தையே வலியுறுத்தி வருகிறது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை யுடன் கூடிய சுயாட்சி கிடைக்க வேண்டும் என்றே சர்வதேச சமூகம் கூறிவருகின்றது.

யுத்தம் முடிந்து அரசியல்தீர்வு ஒன் றைக்காண வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

தேர்தல் முடிந்து எம்முடன் பேச்சு நடத்தி தீர்வுகாணப்போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். அவர் அழைக்கும் பட்சத்தில் அவருடன் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கிறோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்க்கக்கூடிய வகையில் தீர்வு ஒன்றைக் காண அரசு ஒத்துழைக்காவிட்டால் மாற்று வழி மூலம் தீர்வை பெற்றுத்தருமாறு சர்வதேசத்திடம் கேட்போம்.

அவ்வாறு சர்வதேசத்திடம் கோருவ தற்கு எமக்கு உரிமை உண்டு. வடக்கு கிழக்கில் இருந்து பலமான அணியாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை அனுப்பி னால் நாம் உரிமையுடன் சர்வதேசத்தை நாடலாம் என்றார்.

கூட்டமைப்பின் தலைவர்களான மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட பலர் உரையாற்றினார்கள். (அ-1)

அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இலங்கையிலுள்ள ஊட கங்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகளை நிறுத்தி, அங்கு ஜன நாயகத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கு மாறும் அவர்கள் இலங்கை அரசைக் கோரினர்.

இலங்கையின் ஜனநாயகத்திற்கான அமைப்பு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

சாவகச்சேரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பர்கள் சிலரை பொலிஸார் விசாரணை செய்துள்ளனர்.

நேற்றுமாலை 5மணிவரை இளைஞன் விடுவிக்கப்படவில்லை என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

பலமாத இடைவெளியின் பின்னர் இளைஞன் கடத்தப்பட்டதால் சாவகச் சேரிப் பகுதி எங்கும் பெரும் பரபரப்பாகப் பேசப்படுவதோடு பெற்றோர் மத்தியிலும் பீதியுணர்வும் ஏற்பட்டுள்ளது. (அ-1-207)

மரபணு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சாதனையை ஏற்படுத்தியிருக்கின்றது.

இது நாட்டின் மரபணுத் தொழில்நுட் பத்தின் பாரிய வெற்றி என்று அந்தப் பீடத் தின் விரிவுரையாளர் டாக்டர் தம்மிக்க பெரேரா கூறினார்.

உயிரூட்டப்பட்ட மரபணுக்களைச் சீரான முறையில் பேணுவதற்கான வசதி கள் இலங்கையில் காணப்படாமையால் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின் பலனாகவே இந்த ஆட்டுக்குட்டி உருவாக்கப்பட்டது என்றும் அவர் மேலும் சொன்னார்.சுமார் 10 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரதி பலனாகவே இந்த ஆட்டுக்குட்டியை உருவாக்க முடிந் துள்ளது எனவும் டாக்டர் தம்மிக்க பெரேரா மேலும் கூறினார். (சி)

நான்கு லட்சத்து 15 ஆயிரம் பேர் தபால் வாக்களிப்புக்குத் தகுதி

கொழும்பு, மார்ச் 16

நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 4 லட்சத்து 15 ஆயிரத்து 430 பேர் தகுதி பெற்றுள்ளனர் எனப் பதில் தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யு.பி.சுமணசிறி தெரிவித்துள்ளார்.

தபால்மூலம் வாக்களிப்பதற்கு 4 லட் சத்து 76 ஆயிரத்து 430 அரச உத்தியோ கத்தர்கள் விண்ணப்பித்திருந்தனர். அவர் களில் 61 ஆயிரம் பேரின் விண்ணப்பங் கள் நிராகரிக்கப்பட்டன என்றும் பதில் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரி வித்தார்.

எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிக ளில் தபால்மூல வாக்களிப்பு நடைபெற வுள்ளது.ஏப்ரல் 8 ஆம் திகதி நாடாளுமன் றத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பி டத்தக்கது. (சி)

வேட்பாளர் மீது புத்தளத்தில் தாக்குதல்

புத்தளம், கட்டக்காடு பிரதேசத்தில் நேற்று முன்தினம் பகல் ஐக்கிய தேசிய முன்னி ணியின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் ரி.எம். இஸ்மாயில் மீது பிரதியமைச்சர் ஒரு வரின் ஆதரவாளர்கள் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.இச்சம்பவத்தில் தலை யில் காயமடைந்த இஸ்மாயில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பாக இஸ்மாயில் தெரிவித் தவை வருமாறு:-

தாம் பிரதியமைச்சரின் கையாட்கள் என்று கூறிக்கொண்டு சிலர் என்மீது போத் தலை உடைத்துத் தாக்குதலை நடத்தினர். இதனால் நான் தலையில் காயமடைந்தேன்.

இது தொடர்பாக முந்தல் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள் ளேன் - என்றார்.

நாத்தாண்டியாவில் தீ விபத்து

நீர்கொழும்பு, நாத்தாண்டியாவில் நேற் றுக்காலை ஏற்பட்ட திடீர் தீவிபத்துக் காரண மாக தும்புத் தொழிற்சாலை ஒன்றும் ஒன்பது வீடுகளும் எரிந்து நாசமாகின எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தும்புத் தொழிற்சாலையில் ஏற் பட்ட தீயே அருகில் உள்ள 9 வீடுகளுக்கும் பரவியது என்று பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.இந்தத் தீ விபத்தில் தொழிற்சாலை யின் 47 கோடி ரூபா பெறுமதியான சொத் துகள் அழிவடைந்துள்ளன.

இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இந்த அதிர்வால் இலங்கை யில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (சி)

இராணுவச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் அரசமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை யின் சர்வதேச மனித உரிமைகள் சாசனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக் கான சர்வதேச ஒப்பந்தம் ஆகியவை மீறப் பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

பொன்சேகாவின் கைது போன்று உலகில் எந்த நாட்டிலுமே இடம்பெற்ற தில்லை என்று கூறிய சரத் என். சில்வா, இலங்கை ஜனநாயகம் அறவே இல்லாத நாடாகக் காணப்படுகிறது என்றும் கூறி னார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வரு மாறு:-

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அத் தேர்தல் முடிவுக்கு எதிராக வழக்குத் தாக் கல் செய்யப்போகிறார் என்றுஜெனரல் சரத் பொன்சேகா கூறினார். அவ்வாறு கூறி 12 நாள்கள் கடந்ததும் அவர் கைது செய்யப்பட்டார்.

இராணுவச் சட்டத்தின்கீழ் அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டு, இப்போது அவர் மீது இராணுவ நீதிமன் றில் விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

கைதின்போது பின்பற்றப்படவேண் டிய சட்டங்கள் - ஒழுங்குகள் எவையும் பொன்சேகாவின் கைதின்போது பின்பற் றப்படவில்லை. ஒருவர் மீது குற்றச்சாட் டுகள் சுமத்தப்பட்டு அவர் கைதுசெய்யப் படும் நிலையேற்பட்டால், பொலிஸாரே அவரைக் கைதுசெய்யவேண்டும். அவ் வாறு கைதுசெய்யப்பட்டு 24 மணி நேரத் திற்குள் அவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப் படவேண்டும்.

ஆனால், பொன்சேகாவின் கைது இவை எவையும் பின்பற்றப்படாது இந்நாட் டின் அரசமைப்பை முற்றாக மீறும் வகை யில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொன்சேகா இராணுவத் தளபதியாக வும், அதனைத் தொடர்ந்து கூட்டுப்படை களின் பிரதம அதிகாரியாகவும் பதவி வகித்தமையால் இராணுவச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதி ராக எந்த நடவ டிக்கை யும் எடுக்க முடியாது.

இராணுவச் சட் டத்தின்கீழ் அவ ரைக் கைது செய்வ தாக இருந்தால், அவர் வகித்த பதவியை விட உயர் பதவி வகிக்கின்ற ஓர் அதிகாரியாலேயே அவ ரைக் கைதுசெய்ய முடியும். ஆனா அவர் வகித்த பதவியை விட உயர் பதவி கள் வகிக்கும் இராணுவ அதிகாரிகள் எவருமில்லை.

ஆணையிடப்பட்ட இராணுவ அதிகாரி கள் மற்றும் சிப்பாய்கள் ஆகியோரையே இராணுவச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து விசாரிக்க முடியும் என்று இராணுவச் சட்டத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், இராணுவத் தளபதி என்பவர் இந்த அதிகாரிகளின் வகைக்குள் அடங்கமாட்டார்.

இராணுவத்தின் சேவையில் இருந்த போது குற்றமிழைத்திருந்தால் அவர்கள் ஓய்வுபெற்று ஆறு மாதங்களுக்குள் இரா ணுவச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட முடியும் என்று கூறப்படுவது கூட மேற்படி வகையினருக்கே பொருந்தும்.

இராணுவத் தளபதி ஒருவர் சேவை யில் இருக்கும்போது ஏதேனும் குற்றம் புரிந்தால், அவர் ஓய்வுபெற்றதன் பின்னர் அவரைக் கைதுசெய்ய நேரிட்டால் சா ரண சட்டத்தின்கீழ் பொலிஸாரே அவ ரைக் கைதுசெய்யவேண்டும்.

சரத் பொன்சேகா நான்கு நட்சத்தி ரங்களைக்கொண்ட இராணுவ அதிகாரி யாக இருந்தவர். அவரது கைதுபோல் உலகில் எந்த நாட்டிலும் இடம்பெற வில்லை. உண்மையில் இந்நாடு ஜனநாய கம் அறவே இல்லாத நாடாகவே காணப் படுகிறது.

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து எமது நாட்டில் ஜனநாயகத்திற்கான கதவு கள் திறந்தே இருக்கின்றன என்பதையும், ஜனநாயகத்தை மதித்து மனித உரிமைக ளைப் பாதுகாக்கின்றோம் என்பதையும் சர்வதேசத்திற்குக் காட்டுவதற்கான சந்தர்ப்பம் இதுவாகும். - என்றார்.

(அ-சி)

ஓவ்செற் மெஷின் மைண்டர்கள் தேவை
(OFF - SET MACHINE MINDERS)

ஓவ் – செற் மெஷின் மைண்டர்கள் தேவை. முன் அநுபவம் உடையவர்கள் நேரில் வரவும். திறமைக் கும் சேவைக்கும் ஏற்ப வேதனம் வழங்கப்பெறும்.

430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம். பாரதி பதிப்பகம்.

பரபரப்பான விற்பனையில்
புதிய பாடத்திட்டம்
2010ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில்
விசேட வெளியீடு ந.சந்தீரகுமாரின்
அறிவுப்புதையல்
★ புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்.
★ முதலாம் தவணை மாதிரி வினாத்தாள்.
★ இரண்டாம் தவணை மாதிரி வினாத்தாள்.
★ மூன்றாம் தவணை மாதிரி வினாத்தாள்.
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212226693

EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS
VACANCY NOTICE
OFFICE BOY
(அலுவலக உதவியாளர்)
காலம் :- 17-03-2010. (புதன்கிழமை)
நேரம் :- மு.ப. 10.00மணியிலிருந்து..
15, SIRAMBIYADI LANE, OFF STANLEY ROAD, JAFFNA.
HOTLINE :- 021 - 2224330. E-MAIL :-
(COSY HOTELற்கு மேல் 2ம் மாடியில்)

Deutsch, Dutch, Italian வகுப்புக்கள்
தூதரக விசா பரீட்சைகளுக்கான ஜேர்மன் டொச் (Deutsch), நெதர்லாந்து டச் (Dutch) மற்றும் இத்தாலியன் (Italian) மொழி வகுப்புக்கள் எமது யாழ்.கிளையில் தற்பொழுது நடைபெறுகின்றன.
Vivekananda Academy,
(Centre for International Language Studies),
No. 3, 2nd Lane, Palaly Road, Jaffna. (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
Tel: 0774842464, 0210316928 (C/565745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிருவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.